Q6:3.
N00
115322

T.D.R.C. 696.
R.R. 24-1-1900.

DIGITIZED

A. M. D. G.

# திருஸ்தலவாசகம்.

இஃது

அர்ச். வியாகுலமாதாச் சபை சந்நி
யாசிமார்களில் ஒருவரால்
பிராஞ்சு பாஷையிலிருந்து மொழி
பெயர்க்கப்பட்டது.

திருச்சிராப்பள்ளி
அர்ச். சூசையப்பர் கல்விசாலையின்
மடத்து அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

1900.

OF THE REGISTRAR OF
7 MAR 1900

12

A. M. D. G.

# திருஸ்தலவாசகம்.

இஃது

அர்ச். மியாகுலமாதாச் சபை சந்நியா
சிமார்களில் ஒருவரால்
பிராஞ்சு பாஷையிலிருந்து மொழி
பெயர்க்கப்பட்டது.

TRICHINOPOLY:
ST. JOSEPH'S COLLEGE PRESS.

1899.

MORELLI G.

PERMISSU SUPERIORUM.

IMPRIMATUR:

✠ JOANNES-MARIA, S.J.,

*Ep. Trichinopoli.*

## முகவுரை.

ஆண்டவருடைய திருப்பாடுகளின் பிரதான வரலாறுகள் நடந்தேறின இடங்கள் பதினாலும், சிலுவைப்பாதை ஸ்தலங்கள் என்று சொல்லப்படும். இவற்றில் முந்தின ஒன்பது ஸ்தலங்கள் ஜெருசலேம் பட்டணத்து வீதியிலேயே அமைந்திருக்கின்றன. இதைப்பற்றி அது வியாகுல வீதியென்று பேர் பெறும். மீதியான ஐந்து ஸ்தலங்களும் ஜெருசலேம் பட்டணத்துக்கு வெளியே நடந்தன. அந்த ஸ்தலங்கள் கல்வாரிமலை உள்பட கட்டியிருக்கும் கல்லறைக் கோவிலுக்குள்ளாகவே அமைந்திருக்கின்றன. இத்திரு ஸ்தலங்களின் விஸ்தாரணம் பிலாத்து அரண்மனை முதல் கல்வாரிமலை உச்சி வரையிலே 2640 அடி தூரமாம்.

ஆண்டவர் பரலோகத்துக்கு எழுந்தருளிப் போன பின் பக்தியுள்ள ஸ்திரீகளோடே கூட தேவமாதா அந்தத் திரு ஸ்தலங்களை அடிக்கடி சந்தித்துச் சேவித்துவந்தார்கள். இந்த சுகிர்த மாதிரிகையை அனுசரித்து முந்த முந்த பலஸ்தீன் தேசத்துக் கிறீஸ்துவர்களும், பின் அநேக பிரதேசவாசிகளும் யாத்திரை செய்து கூட்டங் கூட்டமாய் அந்த ஸ்தலங்களைச் சந்திக்கப் போகிறார்கள். திவ்விய கர்த்தர் இரத்தஞ் சிந்திக்கொண்டு சிலுவை சுமந்துசென்ற அந்தப் பாதை வழியாகவே இந்த விசுவாசிகள் நடந்து

பத்தி உருக்கத்தோடே அந்தந்த ஸ்தலங்களிலே முழங்காலிலிருந்து அதின் வரலாறுகளைத் தியானித்துச் சேவித்து வருகிறார்கள். இந்த வியாகுல வீதியிலே நடந்த அந்த வர்த்தமானங்களுக்கு நிச்சயமான அத்தாட்சிகளும் இன்னம் அங்கே காணக்கூடியதாயிருக்கின்றன. விசுவாசிகள் அத்திரு ஸ்தலங்களைப் பத்தி வணக்கத்தோடும், பூச்சியத்தோடும், காபந்துபண்ணி வருகிறார்கள். இந்தத் திரு ஸ்தலங்களைச் சேவிக்கிறவர்களுக்கு அர்ச். பாப்புமார்கள் அநேக பரிபூரண பலன்களைக் கட்டளையிட்டிருக்கிறார்கள். ஆனால் அவ்விடத்துக்குப்போய் அந்த ஸ்தலங்களைச் சேவிப்பது அநேகருக்குக் கூடாதிருப்பதால், அந்தப் பலன்களை யாவரும் எளிதாய் அடையத்தக்கதாகச் சிலுவைப்பாதை என்கிற சுகிர்த முயற்சி திருச்சபையால் அங்கங்கே ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. "வருஷமுழுதும் அன்னந் தண்ணீர் உட்கொள்ளாமல் ஒருசந்தி பிடிப்பதைப் பார்க்கிலும், இரத்தம் வருமட்டும் தன்னைத்தானே தினந்தோறும் தெண்டிப்பதைப் பார்க்கிலும், திருச்சபைச் சங்கீதமாலை, மந்திரமாலையிலுள்ள 150 சங்கீதங்களைத் தினந்தோறும் சொல்லுவதைப்பார்க்கிலும் கர்த்தருடைய திருப்பாடுகளைப் பத்தி உருக்கத்தோடே சற்றுநேரம் தியானிப்பது அனந்த மடங்கு அதிக பேறுபலனுள்ளதாம்" என்று முத்திப்பேறுபெற்ற பெரிய அல்பெர்ட் என்னும் வேதபாரகர் எழுதி வைத்திருக்கிறார். ஆகையால் பத்திக்குரிய இந்தச் சிலுவைப்பாதை முயற்சியைத் தபசுகாலத்திலும், வெள்ளிக்



கிழமைகளிலும், துன்ப துரித் சோதனை காலத்திலும், இன்னம் அநேகர் செய்வதுபோலே, கூடியமட்டும், தினந்தோறும் செய்வது மிகவும் பேறு பலனுள்ளதாம்.

திருச்சபை ஆசாரத்தின்படியே சிலுவைப்பாதை ஸ்தலங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற கோவிலிலே அல்லது செபக்கூடத்திலே இதைச் செய்யத்தகும். ஒவ்வொரு ஸ்தலத்துக்கு ஸ்தலம் சற்று இடம் பெயர்ந்து நடந்து கபாலமலைக்குப் போகிற ஆண்டவரைப் பின் செல்லுவதுபோல அடக்க ஒடுக்கத்தோடும், பத்திக்குரிய சிந்தனைகளோடும் போகவேண்டும். ஒவ்வொரு ஸ்தலத்திலும் [illegible] முழங்காலிலிருந்து தியானிக்கவேண்டியது. பின் 1-பர. 1-பிரி. 1-திரி. சொல்லலாம். எல்லாம் முடிந்தபின் பலனடைய 5-பர. 5-பிரி. 5-திரி. சொல்லுவது வழக்கம், ஆனால் அவசரமில்லை. இடம் பெயர்ந்து செய்ய ஏதுகரமில்லாவிட்டால், ஒரே இடத்திலிருந்து அசைந்து ஒவ்வொரு ஸ்தலத்துக்கு நேராகத் திரும்பி தியானிக்கவேண்டும். மெய்யான விக்கினத்தினால் கோவிலுக்குப்போய்ச் சிலுவைப்பாதை செய்யக்கூடாதவர்கள் மந்திரிக்கப்பட்ட பாடுபட்ட சுரூபத்தை வைத்துக்கொண்டு, 14-பர. 14-பிரி. 14-திரி. மந்திரம் வேண்டிக்கொள்ள வேண்டியதுமல்லால், கர்த்தருடைய ஐந்து திருக்காயங்களைக் குறித்து 5-பர. 5-பிரி. 5-திரி. மந்திரமும், அர்ச். பாப்பானவருடைய கருத்துக்காக 1-பர. 1-பிரி. 1-திரி. மந்திரமும் ஆக 20-பர. 20-பிரி. 20-திரி. மந்திரமும்

வேண்டிக்கொண்டாரில், சிலுவைப்பாதைக்குக் குறிக்கப்பட்டிருக்கிற பலன் எல்லாம் அடையலாம்.

இந்தச் சுகிர்த முயற்சியை நடத்தும்போது பத்தி உருக்கமுள்ள சிந்தனைகள் யாவருக்கும் எளிதாய் உண்டாகத்தக்கதாக, கர்த்தர் பாடுபட்ட வர்த்தமானங்களை 20 பிரிவாக வகுத்து இப்புத்தகத்தில் விளக்கிக்காட்டியிருக்கிறோம். அவரவருடைய சர்வகாசத்துக்குத் தக்கது முன்னாடியே இதை வாசித்து வைத்தால், சிலுவைப்பாதை சேவிக்கும்போது நல்ல தியானச் சிந்தனைகள் உண்டாகும். இப்பேர்ப்பட்ட பத்தி உருக்கத்துக்கு இப்புத்தக வாசகமும் ஏதுகரமாயிருக்கும் என்பதினால் "திருஸ்தலவாசகம்" என்று இதற்குப் பெயரிடலாயிற்று

# திருஸ்தலவாசகம்.




௧-வது.

## திரு அசனசாலை.

(

### வரலாறு.

திவ்விய இரட்சகர் சற்பிரசாதமென்னும் தேவதிரவிய அநுமானத்தை ஏற்படுத்தினபொழுது அவர் வீற்றிருந்த வீடு திரு அசனசாலை என்று சொல்லப்படும். இவ்வீடு சீயோ

ன் மலைமேல் கட்டப்பட்டு இருந்தது. இது ஒரு ஆஸ்திக்காரனுடைய வீடாம். இது 48 அடி நீளமும், 26 அடி அகலமுமுள்ளதாம். அவதரித்த சுவாமியானவர் பழய வேத ஆசாரப்படிக்குப் பாஸ்கு இராப்போசனச் சடங்கைக் கடைசி விசை இவ்வீட்டில்தான் நிறைவேற்றினார். அவர் பாடு படுவதற்கு முந்தின இராத்திரி தமது பாடுகளுக்கு ஆயத்தமாகத் தமது சீஷர்களுடைய கால்களைக் கழுவி முத்திசெய்தது இவ்விடத்தில்தான். அப்பத்தினுடையவும், இரசத்தினுடையவும் குணங்களுக்குள்ளே தமது திருச்சரீரத்தையும், இரத்தத்தையும், ஆத்துமத்தையும், தேவசுபாபத்தையும் திவ்விய சற்பிரசாதமென்னும் தேவதிரவிய அநுமானமாக முந்த முந்த ஸ்தாபித்து ஏற்படுத்தினது இவ்வீட்டில்தான். அவருடைய திருப்பாடுகளின் ஞாபகமாக ஆத்துமங்களுக்கு இவ்வற்புத விருந்தும், உன்னத பலி பூசையும் உலகம் முடியுமளவும் நடந்தேற அவர் ஏற்பாடு செய்தருளினது இவ்வீட்டில்தான்.

## மனத்தியானம்.

என் ஆத்துமமே! அந்தத் திருக்கோவிலுக்குள்ளே நீ பிரவேசித்து, அதில் ஆண்டவர் நடத்தும் சகித்த ங்களைப் பற்றும் பற்றாய்த் தியானித்துப்பார். அதோ, ஆண்டவர் தலையில் வஸ்திரமின்றி முழங்காலிலிருந்து சீஷர்களின் கால்களைக் கழுவுகிறார். ஒருந்து துரோகியான யூதாஸின் கால்களையும் கழுவி டைத்து முத்தமிடுகிறார். ஓ! அவதரித்த தேவனின் அத்தியந்த தாழ்ச்சியே, அளவற்ற நேசமே, அன்புக்



ஞரிய இரட்சகரே, தேவாதி தேவனின் திருச்சுதனான தேவரீர் இந்தப் பாதக யூதாசின் பாதத்தில் விழுந்து கிடக்கிறீரே. பாவியாகிய நான் என்னைத் தாழ்த்த எந்தப் பாதாளத்தில் விழுந்து மறைவேன் சுவாமீ.

தெய்வீக மேன்மை பொருந்திய உமது திருச் சரீரத்தையும், இரத்தத்தையும், ஆத்துமத்தையும், தேவசுபாவத்தையும் எங்கள் ஆத்துமங்களுக்குப் போசனமாக ஏற்படுத்தித் தந்தீரே. பரிசுத்தத்தனத்தை விளைவிக்கும் இத்திரு விருந்தை—பேரின்ப மனோகரம் வருவிக்கும் இத்திரு விருந்தை—நித்திய ஜீவியத்துக்கு அச்சாரமான இத்திரு விருந்தை—எங்களுக்குக் கட்டளையிட்டதற்காக நாங்கள் மிகவும் நன்றியறிந்திருக்கிறோம். தக்க ஆயத்தத்தோடே இத்திருப்போசனத்தை நாங்கள் உட்கொண்டு சுகிக்கக் கிருபை செய்தருளும் சுவாமீ.

ஆனால் இவ்விடத்தில் ஒரு ஆச்சரியம் என்ன சொல்லுவேன்; இதோ! உமக்குத் தீங்கு நினைத்த அந்தப் பாதக யூதாசுக்கும் இப்பரம போசனத்தைப் பரிமாறத் திருவுளமானீரே சுவாமீ. இதை நான் பார்த்த பின் என் சத்துருக்களை நான் சிநேகியாமலிருப்பேனோ? சின்னட மனஸ்தாபம் என்னிருதயத்தில் தங்கி நிற்க இடங்கொடுப்பேனோ? அல்ல, அல்ல. எனக்குப் பொல்லாப்புச் செய்த சகலருக்கும் பொறுத்தல் கொடுக்கிறேன். என்னாலியன்ற உதவி சகாயங்களையும் அவர்களுக்குச் செய்துவரப் பிரதிக்கினைபண்ணுகிறேன்.

என்னாத்துமமே! இவ்விடத்தில் நீ தியானிக்கத்தகும் விசேஷம் இன்னம் ஒன்று உண்டு. அதாவது:—நன்றிகெட்ட யூதாசை மனந்திருப்பத்தக்கதாக அப்போது அவன் இருதய வாசலைத்தட்டி ஆண்டவர் உரைத்த அமிர்தமான மொழிகளை நீ கவனமாய்க்கேள்: "நமது அப்போஸ்தலனும் சீஷனுமாகிய யூதாசே, நமது ஜென்ம சத்துருக்களான யூதர்கள் கையில் நம்மை விற்றுப்போடப்போகிறாயே; நாம் உனக்கு என்ன பொல்லாப்புச் செய்தோம்? நமது பேரில் உனக்கு ஏதாவது மனத்தாங்கல் இருக்குமாகில், இதோ உன் காலடியில் விழுந்துகிடக்கிறோம், நம்மை இப்போது என்ன செய்யவேண்டுமானாலும் செய். ஆனால் உன்னை நித்திய கேட்டுக்குள்ளாக்காதே; நாம் உன் கால்களைக் கழுவித் துடைக்கும் இந்நேரத்தில் உன் ஆத்துமத்தின் பாவ அழுக்கைத்தான் கழுவித் துடைக்கிறோம் என்று நிச்சயித்துக்கொள். உனது நன்மைக்காக நாம் உன்னிடத்தில் கேட்டுக்கொள்ளும் மன்றாட்டைப் புறக்கணித்துத் தள்ளிவிடாதே. நம்மைக் காட்டிக்கொடுப்பதற்குக் கைக்கூலியாக நீ வாங்கின முப்பது வெள்ளிக்காசு பெரிதல்ல. நாம் சொல்லும் அன்பான புத்திமதிகள் அளவற்ற விலைபொருந்தியதாம். சபத்துக்கு ஏதுவாகிய உன் சதிமான எண்ணத்தில் பிடிவாதமாய் இருப்பாயாகில், நீ சபிக்கப்பட்டு நித்திய நரகாக்கினியில் தள்ளப்படுவாய்," என்கிறார்.

ஆகிலும் அந்த நிர்ப்பாக்கியனுடைய மனம் எள்ளவும் இளகவில்லை. இதைக்கண்டு ஆண்டவர் இர



ங்கிப் பரிதவித்து அழுது கண்ணீர் சிந்துகிறார். அவன் பாதங்களின்மேல் ஆண்டவர் ஊற்றின தண்ணீரோடே அவர் கண்ணீரும் கலந்தோடி அவன் கால்களைக்கழுவிற்றும். ஆயினும் ஐயோ! இவையெல்லாம் வியர்த்தமாய்ப்போயிற்று. அதேனெனில் பணப்பேயானது அந்தப் பாதக யூதாசைப் பலமாய்ப் பிடித்திருந்தது.

ஓ! சபிக்கப்பட்ட பொருளாசையே, ஆஸ்திபாஸ்தியின் ஆசாபாசமே, ஆண்டவருடைய இராச்சியத்திலும் நீ பிரவேசிக்க இடம் பெற்றாயோ? ஆத்துமங்களைக் கொள்ளையடித்து உனக்கடிமையாக்கி அவியாத நரக அக்கினிக்கு அவர்களை இரையாக்குகிறாயோ? இனி என் சீவியகாலமெல்லாம் நானுன்னை அருவருத்துத் தள்ளிவிடுவேன். பிறத்தியாருடைய பணங்காசு, நிலபலம், உடமையுற்பத்தி என்னிடத்திலிருக்குமாகில் உடனே அவைகளை உத்தரித்துப் போடுவேன். இதுவரையில் நான் மோசம்போனதுபோலே இனிமேல் நேரிடாதபடிக்கு மகா எச்சரிக்கையாயிருப்பேன்.

## மன்றாட்டு.

ஆராதனைக்குரிய ஆண்டவரே, தேவரீர் எந்நாளும் எங்களோடே வாசம்பண்ணத்தக்கதாக அற்புதமான இந்தத் திவ்விய சற்பிரசாதவிருந்தை எங்களுக்கு ஏற்படுத்தித்தரத் திருவுளமானீரே. உமக்கே தோத்திரமுண்டாகக்கடவது. இவ்வளவு மேலான சகிர்த நன்மைக்கு இதுவரையில் நான் அபாத்திரவாளாய் நடந்தேன். சுவாமீ, என் பாவங்களைப்

பொறுத்துக்கொள்ளும். இனி ஒருபோதும் அப்படிச் செய்யமாட்டேன், பத்தி சுறுசுறுப்போடே உம்மை அடிக்கடி சந்திக்கவருவேன். நல்ல ஆயத்தத்தோடே உம்மை அடிக்கடி உட்கொள்ளவருவேன். இவ்வுலகில் உம்மோடு ஒன்றித்திருப்பதே எனக்குப் பாக்கியமென்று எண்ணுவேன். ஆகையால் ஜெருசலேம் திருஸ்தலங்களைச் சேவிக்கிறவர்களுக்குத் தேவரீர் தந்தருளுகிற சுகிர்த பலன்கள் முதலான நன்மைகளை எனக்கும் கட்டளையிட்டருள உம்மை மன்றாடுகிறேன், சுவாமி, ஆமென்சேசு.

திவ்விய நற்கருணையின்பேரில் எல்லாருக்கும் உருக்கமான பத்தியுண்டாகத்தக்கதாக, 1-பர. 1-பிரி. 1-திரி. சொல்லவும்.





2-வது. ஒலிவேத்மலைத் தோட்டம்.

முந்த முந்த ஒலிவேத்மலை எங்கேயிருக்கிறதென்றால், ஜெருசலேம் பட்டணத்துக்குக் கிழக்கே சற்றேறக்குறைய ஒன்றரை மயில் தூரத்திலேயிருக்கிறது. இந்த மலைச்சார்பிலே அநேகம் தோப்புகளும் அவற்றில் நானாவித விருட்சஜாதிகளும் முற்காலத்தில் உண்டாயிருந்தன. அந்த விருக்ஷங்களில் ஒலிவ மரங்களே முக்கியமானவைகளாம். ஷை மலையடிவாரத்தில் செத்சேமெனிஎன்ற ஒருஊரும் அதனருகே ஒலிவ் மரத்தோப்பு ஒன்றும் இருக்கின்றது. இத்தோட்டம் ஒன்றே நாளது வரையிலும் காபந்து பண்ணப்பட்டுவருகிறது. அது ஏனென்றால் இத்தோட்டத்தில்தான் ஆண்டவர் இராக்காலத்தில் செபஞ் செய்துவந்தார். கடைசி வியாழக்கிழமை இராத்திரி இதில்தான் அவர் இரத்தவேர்வை வேர்த்து மரண அவஸ்தைப்பட்டார். இந்தத்தோட்டம் 140 அடி நீளமும், 102. அடி அகலமுள்ளதாம். தேவசுதனான சுவாமியானவர் இதிலே இரத்தவேர்வை வேர்த்து மரண அவஸ்தைப்பட்டபடியால் இலத்தீன்சபைக் குருக்கள் இதற்குச் சுற்றுமதில் எழுப்பி வாசல்வைத்துப் பூட்டுத்திறப்போடே இதைப் பூச்சியமாய் வைத்திருக்கிறார்கள். இத்தோட்டத்தின் வடக்கு மூலையிலே ஒரு கற்பாறையுண்டு. ஆண்டவருடைய மூன்று சீஷர்கள் செபித்திருந்து தூங்கி விழுந்தஇடம் இதுதானென்று சொல்லுகிறார்கள். இதற்கு வடக்கே ஒரு கல்லெறி தூரத்திலே சற்று வட்டவடிவான ஒரு கற்குகை இருக்கிறது. இது 30



அடி குறுக்களவுள்ளதாம். வேலைப்பாடமையாத வட்டமான மூன்று கற்றூண்கள் அந்தக்குகையைத் தாங்கி நிற்கின்றன. அதன் மேல்வில்வளைவுக்கு நடுவே ஒரு சிறு துவாரமுண்டு. அத்துவாரத்தின் வழியாய் ஆகாயம் தெரிகிறது. வெளிச்சமும் உள்ளே வருகிறது. அக்குகைக்குள் ஏறிப்போக ஏழு படிகள் கல்லில் பெரும்படியாய்க் கொத்தப்பட்டிருக்கின்றன. வாசலுக்கு எதிர்ப்பக்கத்திலே இப்போது ஒரு பெரிய பீடமுண்டு. அந்தப் பீடத்துக்கு பின்பக்கத்தில் ஆறு அடி விசாலமான ஒரு பள்ளமிருக்கிறது. இதிலேதான் ஆண்டவர் முகங்குப்புறப் புழுதிபடிய விழுந்திருந்து செபித்து இரத்தவேர்வை வேர்த்து மரண அவஸ்தைப்பட்டார். இங்கேதான் சம்மனசானவர் வந்து அவருக்கு ஆறுதல் சொன்னார். இந்த வரலாறுகளை நினைப்பூட்டும் சித்திரமும் வாசகமும் இன்னும் அங்கே காணலாம். அக்குகையின் பெரிய பீடத்துக்கு இருபுறத்திலும் வேறு இரண்டு பீடங்கள் உண்டு. ஆயினும் அந்தக் குகையிலாவது, அந்தப் பீடங்களிலாவது யாதொரு அலங்கார சோடினைகளில்லை. இதன்றியே அக்குகையில் பிரவேசிக்கிறவர்களுக்கு ஆச்சரியமான பத்தியுருக்கம் சடிதியில் உண்டாகிறது. இத்தேவகிருபையின் ஆச்சரியம் நாளதுவரையிலும் அங்கே நடந்தேறிவருகிறது.

திரு அசனசாலையிலே பெரிய வியாழக்கிழமை இராத்திரி ஆண்டவர் திவ்விய நற்கருணை உண்டாக்கிச் சீஷர்களுக்குக் கொடுத்தபிற்பாடு அந்தச் சாலை

யைவிட்டுப் புறப்பட்டு ஜோசேபாத் கணவாயை
யும் அதின்வழியாய் ஓடுகிற செதுரோன் நதியையுங்
கடந்து ஒலிவேத்மலைத் தோப்புக்குப் போனார். அப்
போது இராத்திரிப் பதினொருமணி வேளையாயிருந்
தது. அங்கே தோட்டவாசலின் அருகே சீஷர்க
ளை நிறுத்திவைத்து, "சோதனையில் விழாதபடிக்கு
விழித்திருந்து செபஞ் செய்யுங்கள்," என்று அவர்
களுக்குக் கற்பித்து அப்பால் ஒரு கல்லெறிதூரம்
போய் அங்கேயிருந்த கற்குகைக்குள் பிரவேசித்துச்
செபஞ்செய்தார். அதெப்படியென்றால், அங்கே
முழங்காலிலிருந்து கரங்குவித்து "பிதாவே! இந்தக்
கசப்பான பாத்திரம் என்னைவிட்டு அகலக்கூடுமா
னால் அதை அகற்றியருளும். ஆயினும் என் மனதி
ன்படியல்ல, உமது சித்தத்தின்படியே ஆகட்டும்"
என்று பிரார்த்தித்தார். மீளவும் தாம் விட்டுப்பிரி
ந்த தமது அன்புள்ள தாயாரையும் தம்மைக் கைவி
ட்டு ஓடிப்போன சீஷர்களையும் இன்னும் சகல பா
விகளையும் அப்போது அவர் நினைவுகூர்ந்து பட்ட
துக்க சஞ்சலமிகுதியைத் தாங்கமுடியாமல் முகங்
குப்புற விழுந்தார். இத்தன்மையான துக்க சஞ்சல
த்தோடே, பயமும், பயத்தோடே பெருமூச்சும் பல
வீனமும் அவருக்குண்டாயிற்று. அச்சாமத்துக்குப்
பின் ஒருமணி வேளையில் அவர் சர்வாங்கத்திலுமு
ள்ள மயிர்க்கண்கள் வழியாய் இரத்தம் துளி துளி
யாய்ப் புறப்பட்டது. அவருடைய திருமுகம் கை
கால்களும் திருமேனியும் முழுதும் இரத்தத்தால் நனை
ந்து மீதியான இரத்தம் தரையில் விழுந்து ஓடிற்று.



அந்நேரத்தில்தான் ஒரு சம்மனசானவர்வந்து அவ
ரைத் தாக்கி எடுத்து அவருக்கு ஆறுதல் வருவித்தார்.

## மனோத்தியானம்.

என் ஆத்துமமே, அந்தப் பூங்காவனத்தின் குகை
க்குள்ளே நீ பிரவேசித்து அங்கே நடக்கும் விசே
ஷங்களைச் சற்றுநேரம் தியானித்துப்பார். அதோ!
திவ்விய இரட்சகர் முகங் குப்புற விழுந்து கிடக்கி
றார். மரண அவஸ்தைப்பட்டு இரத்தவேர்வை
வேர்த்துச் சிந்திய இரத்தத்தில் விழுந்து அமிழ்ந்திக்
கிடக்கிறார். அது எதுக்கென்றால், சர்வேசுரனுக்கு
விரோதமாய் மனிதர் கட்டிக்கொண்ட சகல பாவங்
களுக்காகவும், இன்னும் உலகம் முடியுமட்டும் நடக்
கும் சகல தோஷ துரோகங்களுக்காகவும், உத்தரிக்
கத்தக்கதாக இப்படிப் பாடுபடத் திருவுளமானார்.
பிதாவாகிய சர்வேசுரனால் அவருக்கு நியமிக்கப்பட்
டிருந்த நிஷ்டூர வேதனை நிர்ப்பந்தங்களெல்லாம் அப்
போது ஒருமிக்க ஆண்டவருடைய நினைவில் வந்தன.
மனுக்குலத்தாருடைய பாவ தோஷ அக்கிரமங்களெ
ல்லாம் அத்தருணத்தில் அவர்பேரில் சுமத்தப்பட்டி
ருந்ததாகத் தோன்றிற்று. பாவியின் கோலத்தோ
டே அப்போது பிதாவாகிய சர்வேசுரனுடைய சமு
கத்தில் அவர் நிறுத்தப்பட்டிருந்தார். இதுவும் போ
தாமல் தமது பாடுகளின் பலனை இழந்துபோகும் நிர்
ப்பாக்கியருடைய கேடுகளை அவர் நினைத்து வாக்கு
க்கெட்டாத வியாகுலம் அனுபவித்தார். இந்த வியா
குல மிகுதியாலேதான் அவர் மரண அவஸ்தைப்ப
ட்டு இரத்தவேர்வை வேர்த்து விழுந்தார். அப்

போது ஒரு சம்மனசானவர் வந்து அவரைத் தூக்கி எடுத்துத் தாங்கிப்பிடித்து, "சுவாமி! உமது திருப்பாடுகளால் தேவநீதிக்குத் திருப்தி உண்டாகும். பரலோகவாசல் திறக்கப்படும், பாவிகள் இரட்சணியம் அடைவார்கள். பரலோகத்தில் சந்தோஷமுண்டாகும்," என்று இது முதலிய ஆறுதலான விசேஷங்களைச் சொல்லி அவரைத் திடப்படுத்தினார்.

மன்றாட்டு.

என் அன்புக்குரிய இரட்சகரே! என் இரட்சணியத்தின் நிமித்தம் தேவநீதிக்குப் பிணையாகி இவ்வளவு துக்க துயரஸ்திதிக்குள்ளானீர். என் பாவங்களினிமித்தம் அளவற்ற துக்க மனஸ்தாபத்தால் ஊடுருவப்பட்டீர். அப்போது உமது திரு இருதயம் சிந்தின இரத்தத்துளிகள் என்னிருதயத்திலும் பாய்ந்தோடக் கிருபை செய்தருளும். உமது திரு இரத்தத்தால் எங்களாத்துமங்களைக் கழுவித் தேவரீருடைய பேரின்ப தெரிசனத்துக்கு எங்களைப் பாத்திரவான்களாக்கியருளும். இவ்வுலகிலிருக்குமளவும் தேவசித்தம் எங்களுக்கு நியமிக்கும் சகல துன்பங்களையும் பொறுமையாய்க் கையேற்றுக்கொண்டு நடக்க நல்லமனந் தந்தருளும். உமது மரண அவஸ்தையின் பேறுபலன்களைப்பார்த்து, உலகமெங்கும் இப்போது மரண அவஸ்தைப்படும் சகலருக்கும், என் மரணநேரத்தில் எனக்கும், கிருபைசெய்தருளும் சுவாமி.—ஆமென் சேசு.

இந்நேரத்தில் மரண அவஸ்தைப்படுகிறவர்களுக்காக 1-பர. 1-பிரி. 1-திரி. சொல்லவும்.



## 3-வது. பூங்காவன வாசல்.

### ஆண்டவர் பிடிபட்டுக் கட்டுண்ட இடம்.

வரலாறு.

நமது இரட்சணியத்தின் நிமித்தம் ஆண்டவர் நடந்துசென்ற கல்வாரிமலைப் பயணம் இந்தப் பூங்காவன வாசலில்தான் துவக்கமாகிறது. அதெப்படியென்றால், ஆண்டவர் இரத்தவேர்வை வேர்த்து அனுபவித்த மரண அவஸ்தையினின்று எழுந்திருந்தபின் தமது சிஷர்களிருந்த இடத்துக்கு வந்தார். "சத்துருக்களுக்கு எதிர்கொண்டு போவோம் வாருங்கள்," என்று அவர்களைக் கூட்டிக்கொண்டு மிகுந்த சாந்த குணத்தோடும், தயை நேசத்தோடும் நடந்து தோட்டத்தின் வாசற்படியை நோக்கிப் போனார். ஆனால் அந்த நடுச்சாம வேளையிலே தீவட்டி இலாந்தர் முதலிய வெளிச்சங்களோடேயும், கயிறு, சங்கிலி, கத்தி, வாள், ஈட்டி முதலிய ஆயுதங்களோடேயும், படைவீரருடைய கூட்டம் ஒன்று தீவிரித்து வருகிறதை அவர் பார்த்தார். அவர்களுக்கு வழிகாட்டியாக யூதாஸ் ஸ்கரியோத் என்பவன் முன் நடந்து வருகிறதையும் கண்டார். இந்தக் கண்காட்சிகளையெல்லாம் ஆண்டவர் பார்த்துக்கொண்டு நிற்கையில், யூதாஸ் முன்னுக்கு வந்து, காட்டிக்கொடுக்கும் அடையாளமாக, "குருவே வாழ்க" என்று சுவாமியின் கன்னத்தில் முத்தமிட்டான். சகலத்தையும்

அறிந்த சுவாமியானவர் அவனைச் சினந்து கோபியாமல் "அன்பனே" என்று அமிர்த மொழியால் அவனோடு பேசுகிறார்.

பின் மலர்ந்த முகத்தோடும், மதுர குணத்தோடும், சத்துருக்கள் நின்ற இடமட்டும் ஆண்டவர் நடந்துபோய், அவர்களைப்பார்த்து "யாரைத்தேடி வந்தீர்கள்," என்று அன்பாய்க் கேட்கிறார். "நசரேனைத்தேடி வந்தோம்" என்று அவர்கள் சொன்னபின் அவர் "நாம்தாம்" என்று அவர்களுக்குத் தம்மை வெளிப்படுத்துகிறார். கள்ளனைப்போல் கட்டப்படத்தக்கதாக மனம் பொருந்தித் தம்மை அவர்களுக்குக் கையளிக்கிறார். அவர்களோ, கயிறு சங்கிலிகளால் அவரைக்கட்டி இறுக்கி மிகுந்த ஆரவாரக் கொக்கரிப்போடு அவரைத் தள்ளிக்கொண்டு போகிறார்கள்.

### மனத்தியானம்.

என் ஆத்துமமே! உன் ஆசாபாசக் கட்டுக்களை அவிழ்க்கத்தக்கதாக—உன் பாவச் சங்கிலியை அறுத்தெறியத்தக்கதாக—பிசாசின் அடிமைத்தனத்தினின்று உன்னை மீட்டு இரட்சிக்கத்தக்கதாக, இந்த மாசற்ற செம்மறிப்புருவையானவர், ஒரு கள்ளனைப்போல் கட்டுண்டிருக்க உடன்படுகிறார். சம்சோனென்பவனைக் கட்டின கட்டுக்களை இவர் சந்நிதியில் அறுத்தெறிந்ததுபோலும், ஜெரிக்கோ நகரின் கோட்டை கொத்தளங்களை இவர் இடித்துத் தகர்த்ததுபோலும், இந்தக்கயிறு சங்கிலிகளை அறுத்தெறியாமல் இந்தக்கட்டுக்குள் அடங்கியிருக்க இவர் சம்மதி



த்ததேது? என் இரட்சணியத்தின் நிமித்தம் மனம் பொருந்தித் தம்மைப் பலி கொடுக்கப்போகிறார். இதைச் சற்றுநேரந் தியானித்தபின் சுவாமியைப் பார்த்து நீ சொல்லத்தக்கதாவது.

### மன்றாட்டு.

என் ஆண்டவரே! தயாள சற்குணம் அமைந்த செம்மறிப்புருவையே, சங்கிலிகளல்ல, என் பாவங்களே, என் ஆசாபாசத் துர்க்குணங்களே இதற்குக் காரணமென்று அறிகிறேன். இப்போது அவைகளை வெறுத்து அவைகளுக்காக துக்க மனஸ்தாபப்படுகிறேன். என் பாவங்களுக்குப் பொறுத்தலைத் தந்தருளும் சுவாமி.

உம்மைக் காட்டிக்கொடுத்த சதிமான யூதாஸுக்கும் தயவு காண்பித்தீர். அக்கிரம கொலைபாதகருக்கும் அன்பு பாராட்டினீர் சுவாமி. உமது திவ்விய மாதிரிகையைப் பின்சென்று, நானும் என் சத்துருக்களைச் சிநேகிப்பேன். பிறர் எனக்குச் செய்த குற்றம் குறைகளைப் பொறுத்துக்கொள்ளுகிறேன். தேவரீர் தந்தருளின பிறர்சிநேகக் கற்பனையை எப்போதும் எவ்விடத்திலும் நான் சுமுத்திரையாய் அநுசரித்து நடக்கக் கிருபை செய்தருளும். இவ்வித சகிர்த அநுசரணையைக்கொண்டு எனக்குத் தேவ கிருபையும் பாவப்பொறுத்தலும் கிடைக்கத் தயை செய்தருளும் சுவாமி.

நமது சத்துருக்கள் விரோதிகளுக்காக, 1-பர. 1-பிரி. 1-திரி. சொல்லவும்.

# 4-வது. செதுரோன் என்ற ஆற்றில் ஆண்டவர் விழத்தாட்டப்படுகிறார்.

## வரலாறு.

இராத்திரி வேளையிலே ஆண்டவரை யூதர்கள் பிடித்தபடியால், கயறு சங்கிலிகளால் அவரைக் கட்டி இறுக்கி அன்னாஸ் என்ற குருப்பிரசாதியின் வீட்டுக்கு தள்ளிக்கொண்டு போகிறார்கள். இப்படியே ஜோசேபாத் என்ற கணவாய் வழியாய்ப் போகையில் குறுக்கே பாய்ந்து ஓடும் செதுரோன் என்ற ஆறு, அப்போது பெய்த மழையால், இரு கரையும் புரண்டு ஓடிற்று. அந்த ஆற்றுப்பாலத்தின் வழியாய்ப் போகையில், யூதர்கள் ஆங்கார கெம்பீரத்தோடே ஆண்டவரைக் கட்டியிருந்த கயிற்றைச் சுண்டி இழுத்து அவரை ஆற்றில் விழத்தாட்டினார்கள். இன்னும் பரிகாசமாய் அந்த ஆற்றுத் தண்ணீரை அவர் குடிக்கப்பண்ணினார்கள். இதைப் பற்றியே "வெள்ளத்தில் குடித்தபின் தலை நிமிர்த்துவார்" என்று தாவீதென்ற தீர்க்கதரிசியானவர் திருவளம்பற்றினதாகத் தெரியவருகிறது. இன்றியே ஆண்டவர் அந்த ஆற்றுத் தண்ணீரில் விழுந்த அதிர்ச்சியாலே தண்ணீர்க்குள்ளிருந்த கற்பாறையில் அவர் முழங்கால்கள் மோதி அதில் தடங்கள் பதிந்து போயின. அந்த முழங்கால் தடங்களை நாளது வரையிலும் அங்கே காணலாம்.



## மனத்தியானம்.

ஆ! சர்வவல்லவரான சர்வேசுரா! சமஸ்த சிஷ்டிகளுக்கும் சத்துவ சாமார்த்தியம் தந்தருளின தேவனே! மனிதர் கை நரம்பின் விசையும் கயற்றின் பலமும் உமது திருப்பலத்திற்கு மேற்படலாயிற்றோ! இதோ, ஒரு அற்பப் பிராணியைப்போல் அவர்களால் இழுபட்டு அவமானமாய் ஆற்றில் தள்ளப்படவும் மனம் பொறுத்தீரோ, சுவாமி. நித்திய நரகாக்கினியினின்று எங்களை மீட்பதற்காக அல்லோ, இவ்வளவு நிந்தை நிர்ப்பந்தத்துக்கு உள்ளானீர். உமது நேசப்பெருக்கத்தை என்னென்று சொல்லுவோம், எவ்வாறு புகழ்ந்தேற்றுவோம். சீவியர்களுக்கும் மரித்தவர்களுக்கும் நடுத்தீர்வை இடத்தக்கதாக மகிமைப் பிரதாபத்தோடும், மோட்ச சேனைத் தளங்களோடும் தேவரீர் ஒருநாள் இவ்விடத்தில் எழுந்தருளி வருவீர். தேவரீர் அநுபவித்த நிந்தை அவமானத்துக்கு அப்போதுதான் பிரபலியமாய்ப் பரிகாரம் செய்யப்படும். உமது அன்பின் விசாலம் அப்போது யாவராலும் புகழ்ந்து பாராட்டப்படும், சுவாமி.

## மன்றாட்டு.

அன்பான இரட்சகரே! இந்த ஆற்று வெள்ளத்தில் தேவரீர் விழுந்ததைக் குறித்துப் பாவப் படுகுழியில் நின்று, என் ஆத்துமத்தின் நிர்ப்பாக்கியத்தினின்று, என் பாவ ஸ்திதியில் நின்று, என்னைக் கைதூக்கி இரட்சியும். சாவான பாவச்சேற்றில் இனி ஒருபோதும் நான் விழாதபடிக்குக் கிருபை செய்தருளும். அப்பேர்ப்பட்ட நிர்ப்பாக்கியம் எனக்கு

நேரிடுமாகில் உண்மை உருக்கமுள்ள உத்தம மனஸ்தாபத்தால் உடனே நான் அதைவிட்டு எழுந்திருக்கக் கிருபைசெய்தருளும், சுவாமி.

சாவானபாவத்தில் அமிழ்ந்திக்கிடக்கிற ஆத்துமங்கள் மனந்திரும்பத்தக்கதாக 1-பர. 1-பிரி. 1-திரி. சொல்லவும்.

---

## 5-வது. ஆனாஸ் என்பவன் வீடு.

வரலாறு.

செதுரோன் என்ற ஆற்றைக் கடந்தபின் பட்டணத்துக்குள் போகத்தக்கதாக ஆண்டவரைத் தள்ளிக்கொண்டு போனார்கள். அங்கே போகும் பாதைப் பள்ளத்தாக்கானதும் கரடு முரடுமாய்ச் செங்குத்தான வழியுமாயிருந்தது. கடைசியில் ஸ்டேர்க்குயிலின் என்ற வாசல் வழியாய்ப் பட்டணத்துக்குள் அவர்கள் பிரவேசித்தார்கள். ஆனால் சனங்களுடைய நித்திரையைக் கலைக்காதபடிக்கு இராஜவீதி வழியாய்ப் போகாமல், கல்லுங்கட்டியும் மேடும் பள்ளமுமான குச்சுத்தெரு மார்க்கமாய் ஆண்டவரை இழுத்துக்கொண்டு போனார்கள். இப்படியாய்ச் சீயோன்மலை அடிவாரமட்டும் நடந்து அவ்விடத்திலிருந்த ஆனாஸ் என்பவனுடைய அரண்மனையில் சேர்ந்தார்கள். ஆனாஸ் என்ற இந்தக் குருப்பிரசாதியின் அரண்மனை சீயோன்மலை அடிவாரத்தில் கட்டப்பட்டிருந்தது. ஆனால் இப்போது அது இடிந்து



அழிந்துபோயிற்று. அவ்விடத்தில் ஒரு சந்நியாச மடம் இப்போது கட்டப்பட்டிருக்கிறது. அம்மடத்தின் முற்றத்தில் ஒரு பெரிய ஒலிவமரம் நிற்கிறது. இது வெகுகாலத்து மரம். ஆனாஸ் என்பவனுக்கு ஆண்டவரைக் காண்பிக்கத்தக்கதாகச் சாவகாசம் கிடைக்குமட்டும் இவ் ஒலிவ மரத்தில்தான் ஆண்டவரைக் கட்டி வைத்திருந்ததாகச் சொல்லுகிறார்கள். இந்த அகோர அவமானத்தைக் குறித்துத் தாவீதென்ற தீர்க்கதரிசியானவர் முறைப்படச் சொல்லியிருக்கிறதாவது: "உனக்குச் சுமை சுமக்கும் ஒரு மிருகத்துக்கு நாம் ஒப்பானோம்" அதாவது வழி நடந்து களைத்துத் தவித்துவந்து சேர்ந்தோம். ஆற்றுத் தண்ணீரில் நனைந்து ஈர வஸ்திரத்தோடு இருந்தோம். இரத்த வேர்வை வேர்த்து அயர்ந்து மெலிந்திருந்த நம்மை யூதர்கள் தீவிரமாய் இழுத்துக்கொண்டு வந்தபடியால் மூச்சுவிடவும் பலமற்றிருந்தோம். அப்படி இருந்தும் சுமை சுமக்கும் ஒரு மிருகத்தைக் கட்டிவைப்பதுபோல், நம்மை ஒரு மரத்தோடு சேர்த்துக்கட்டி வைத்திருந்தார்கள். அங்கே பலவீனமான நமது சரீரத்தின் மேல் வீசிக்கொண்டிருந்த குளிர்காற்றினால் நமது சர்வாங்கத்திலுமிருந்த இரத்தம் சற்று காய்ந்து உலர்ந்தது.

ஆனாஸ் என்பவன் வந்து தன் ஆசனத்தில் உட்கார்ந்துகொண்டு ஆண்டவரைப் பார்த்து "உன் சீஷர்கள் எங்கே? நீ போதித்த போதகங்கள் எது?"— என்று சில கேள்விகளைக் கேட்டான். அதற்கு மறுமொழியாக "தேவாலயங்களிலும், ஜெபக்கூடங்க

விலும் பிரசித்தமாய் நாம் பிரசங்கித்தோமே தவிர,
இரகசியத்தில் ஒன்றும் சொல்லவில்லை. நமது போ
தகங்களைக் கேட்டவர்களிடத்தில் விசாரித்துப் பார்
த்தால் உண்மை தெரியவரும்" என்று சாந்தகுணத்
தோடே அவர் சொன்னார். ஆகிலும் அங்கே நின்ற
சேவகரில் ஒருவன் இருப்புக் கவசமணிந்த தன் கரத்
தால் அவரைக் கன்னத்தில் அடித்தான். அவன்
ஓங்கி அடித்தபடியால் அவன் கைவிரல் ஐந்தும் அவ
ர் கன்னத்தில் பதிய, இரத்தம் கசிந்து கன்னம் கன்
றிக் கறுத்து வீங்கிப்போயிற்று. ஆகிலும் ஆண்ட
வர் இதைத் தாங்கிச் சகித்துச் சாந்தகுணத்தை விளங்க
ப்பண்ணினார். இதன் பின் அன்னாவின் [illegible]டவரைப்ப
டியே கைப்பாஸின் அரண்மனைக்கு ஆண்டவரைத்
தள்ளிக்கொண்டு போனார்கள்.

நினைவுக்குரிய விதமாய் ஆண்டவர் அப்போது
நிறுத்திவைக்கப்பட்டிருந்த இடத்தில் இப்போது
இரவும் பகலும் ஒரு விளக்கு எரிந்துகொண்டிருக்கி
றது. ஆண்டவர் கன்னத்தில் அறையப்பட்ட இட
த்தில் இப்போது ஒரு சிறு கோவில் கட்டப்பட்டு
இருக்கிறது.

மனத்தியானம்.

என் ஆத்துமமே! உன் இரட்சகரைப்பார்; கொலை
க்கும் பிராணியைப்போல் அவர் மரத்தோடே
சேர்த்துக் கட்டப்பட்டிருக்கிறார். இதேன்?
தெய்வீக சாயலான உன் ஆத்துமத்தை மிருக
ஆசைகளாலே நீ கட்டிவைத்திருந்தாயல்லவோ? அந்
தப் பாவ தோஷத்துக்கு உத்தரிக்கத்தக்கதாக ஆண்



டவர் இவ்விதமான நிந்தை நிர்ப்பந்தத்துக்கு உள்ளா
னார் என்று அறிந்துகொள்.

மீளவும் அவ்வளவு சனக்கூட்டத்துக்கு நடுவாய்
ஒரு நீசச் சேவகன் கை ஓங்கி ஆண்டவருடைய கன்
னத்தில் அடித்ததும் அதை ஆண்டவர் சகித்திருந்த
தும் எதுக்கு? ஒரு கன்னத்தில் அடிப்பவர்க்கு மறு
கன்னத்தையும் காட்டுவாயாக, என்று ஆண்டவர்
படிப்பித்த படிப்பினைக்கு இவ்விதமாய் மாதிரிகை
காட்டத் திருவுளமானார் என்று அறிந்துகொள்.
உன் சத்துருக்களையும் சிநேகித்துத் தின்மைக்கு நன்
மை செய்து, இதனால் கற்றுக்கொள்ளுவாயாக.

மன்றாட்டு.

சகல மனுமக்களிலும் அதிக சுப சௌந்தரியமுள்
ள சேசுவே! நீசப்பாவியின் கையால் இவ்வளவு
நிந்தை வேதனையான அடியைச் சகிக்கத் திருவுள
மானீரே, அந்த அடியால் உமது திரு முகத்தின்
அழகு மங்கி மறையலாச்சுதே! தேவரீர் நித்திய
பிதாவின் சுதன் அல்லவா? ஒரு நீச மனுஷன் இத்
தனை சனங்களுக்குமுன் உமது கன்னத்தில் அறை
ந்து பொறுத்திருந்தீரோ, இந்த நிஷ்டூரத்தினிமித்தம்
அந்தப் பாதகனைத் தண்டிப்பவர் ஒருவருமில்லையோ,
உமக்காகப் பரிந்து பேசினவர் ஒருவருமில்லையே
சுவாமி. உமது திவ்விய மாதிரிகையை நான் பார்க்
கையில் நான் மிகவும் வெட்கப்படுகிறேன். என்னெ
னில் செ[illegible]குசாய்ச்சிமிக்க விரும்புகிறேன். சொற்ப
வருத்தத்தைச் சகிக்கவும் பின்வாங்குகிறேன். சுவா
மீ, என் பாவத்தைப் பொறுத்துக்கொள்ளும். இனி

ஒறுத்தல் உபவாசமாயிருப்பேன், என்னை நிந்திக்கிற
வர்களுக்கு முழுமனதோடு பொறுத்தல் கொடுப்
பேன். பிறத்தியார் எனக்கு வருவிக்கும் பங்கத்தை அ
வமானங்களைப் பொறுமையோடநுபவிப்பேன். எ
ன் பிரதிக்கினைகளை ஆசீர்வதித்தருளும் சுவாமி.

பிறத்தியாரால் நிந்தை அவமான நஷ்டத்துக்குள்
ளானவர்கள் ஆண்டவரைக்குறித்து அதைப் பொறு
த்துக்கொள்ளத்தக்கதாக 1-பர. 1-பிர. 1-திரி. சொ
ல்லவும்.

---

## 6-வது. கைப்பாஸின் அரண்மனை.

### வரலாறு.

அன்னாஸ் என்பவனுடைய அரண்மனைக்கும் கைப்
பாஸ் என்பவனுடைய அரண்மனைக்கும் ஏறக்குறை
ய 520 அடி தூரமாம். அந்தக் கைப்பாஸின் அர
ண்மனையில் சேர்ந்தபின் ஆண்டவர்பேரில் யூதர்கள்
சில பொய்ச்சாட்சிகளை ஏற்படுத்தி அவர்பேரில் பற்
பல குற்றங்களைச் சாட்டினார்கள். ஆண்டவரோ
மவுனமாயிருந்தார்.

“தேவசுதனான கிறீஸ்து நீதானோ?” என்று கை
ப்பாஸ் கேட்டான். அதற்கு “நான்தானென்று நீயே
சொல்லுகிறாய். மனிதனை நடுத்தீர்க்க மனுமகன்
மேக ஆசனத்தில் எழுந்தருளி வருவதைக் காண்பீ
ர்கள்” என்றார். அப்போது கைப்பாஸ் கோபமுண்டு
தன் வஸ்திரத்தைக் கிழித்து “இதோ, தேவதூஷ



ணம் சொன்னான். இவன் மரணத்தீர்வைக்குப் பா
த்திரவான். ஆலோசனைச் சங்கத்தார் முடிவு
சொல்லும்படி இவனைக் காவல்கூடத்தில் அடைத்
து வையுங்கள்” என்று கர்ஜித்தான்.

அப்போது நடுச்சாமவேளை ஆகிவிட்டபடியால்
அந்த அரண்மனையிலிருந்த ஒரு கிடங்கில் அவரை
அடைத்துவைத்து விடியுமளவும் அவரையடித்துத்
துன்பப்படுத்தினார்கள்.

அந்த வேளையில் அவ்விடத்தில்வந்த அர்ச்.
இராயப்பர் ஆண்டவரை அறியேனென்று மூன்று
முறை மறுதலித்தார். ஆகிலும் சுவாமி திருக்கண்
நோக்கி அவரைப் பார்த்தமாத்திரத்தில் அவர் மன
மிளகி உத்தமமனஸ்தாபப்பட்டு அழுதுகொண்டு
திரும்பிப்போனார். யூதாஸ் ஸ்காரியோத் என்ற அப்
போஸ்தலனோவென்றால் அவநம்பிக்கையாலே தா
ன் நான்றுகொண்டு செத்து நரகத்தில் விழுந்தான். ஐயோ!
என்ன நிர்ப்பாக்கியம்! ஆசைக்கடிமையாகி ஒரு அ
ப்போஸ்தலனடைந்த கதியைப்பாருங்கள்!

இந்தக் கைப்பாஸின் அரண்மனை இப்போது அர்
மேனிய கிறீஸ்தவர்களுக்கு ஒரு வைத்தியசாலையாய்
நியமித்திருக்கிறது. இது ஒரு மடத்துக்குச் சமான
மாயிருக்கிறதென்கிறார்கள். வேலைக்காரரோடே
அர்ச். இராயப்பர் வெளியே நிற்கையில் ஆண்டவ
ரை மறுதலித்த இடம் இப்போது அங்கே குறித்துக்
காட்டப்பட்டிருக்கிறது.

ஆண்டவர் மரணத் தீர்வைக்குப் பாத்திரவானெ
ன்று கைப்பாஸ் தீர்மானித்தானே, அந்த இடத்தில்

இப்போது ஒரு சிறுகோவில் கட்டப்பட்டிருக்கிறது. அன்று இராவேளையில் ஆண்டவரை அடைத்துவைத்திருந்த சுரங்கம் அக்கோவிலில் இன்னமும் இருக்கிறது.

## மனத்தியானம்.

என் ஆத்துமமே கைப்பாவின் அரமனையில் நடக்கும் வர்த்தமானங்களைப்பார். அந்தப் பிரதான குருப்பிரசாதி அதோ! ஒரு ஆசனத்தில் உட்கார்ந்திருக்கிறான். ஆண்டவரோ! குற்றவாளியைப்போலே கட்டுண்டு நிற்கிறார். இவருடைய சத்துருக்கள் குரூரின்று குதித்துக் கொக்கரிக்கிறார்கள். அந்யாயமான குற்றங்களை அவர்பேரில் சாட்டுகிறார்கள். அவரைக் கொன்றுபோடவேணுமென்று கூக்குரலிடுகிறார்கள். சகல சற்குணங்களும் நிறைந்த சுவாமி தலைகுனிந்து நிற்கிறார். சத்துருக்களின் வாயையடைக்கச் சத்துவமுள்ள சுவாமி, ஒன்றுஞ் சொல்லாமல் மவுனமாயிருக்கிறார்.

உன் விரோதிகள் உன்பேரில் அபாண்டமான குற்றங்களைச் சுமத்தி அபதூறு பேசும்போது நீ மனங்கலங்காதே, ஆத்திரப்படாதே, சண்டைச் சச்சரவுகளுக்கு இடங்கொடாதே. ஆண்டவரைப்போல் அமரிக்கையாயிரு, மவுனமாயிரு. இவ்வுலக வாழ்வு நிலையற்றவாழ்வு இது தாழ்வடைந்து சமயத்தில் தலைகீழாய் மாறிவிடும். அப்போது உண்மை வெளிப்படும். உனக்கு ஜெயம் கிடைக்கும். பொறுமையாயிரு.



இதன்றியே அர்ச். இராயப்பர் முன்னமே எச்சரிக்கப்பட்டிருந்தும் சமயத்தில் மோசம்போனதைப் பார்த்தாயே. சரீரசம்பந்தமான இந்த வாழ்வு சறுக்குத் தரைக்கு இணையல்லோ! நிற்கிறேனென்று நினைக்கிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவான். (அர்ச். சின்னப்பர்). ஆகையால் எந்தப் பாவத்திலாவது விழுகிற ஆபத்து உனக்கு நேரிட்டால் யூதாசைப்போலே அவநம்பிக்கைப்படாதே. ஆனால் அர்ச். இராயப்பரைப்போலே உடனே உத்தமமனஸ்தாபப்பட்டு எழுந்திருந்து நம்பிக்கையென்னுங் கோலூன்றி நடந்து நல்ல பாவசங்கீர்த்தனம் பண்ணப்போவாயாக.

## மன்றாட்டு.

என் தேவனும் இரட்சகருமாகிய ஆண்டவரே, தேவரீர் எவ்வித மாசுமற்றவராயிருக்க, பரிசுத்ததனத்தின் [illegible]ருணியாயிருக்க, இந்தப் பிரதான குருவின் சமுகத்தில் ஒரு பெருந் துரோகியைப்போல் நிந்திக்கப்படுவதென்ன? நானல்லோ பாவி? நானல்லோ நன்றிகெட்ட துரோகி? என்னையல்லோ முகத்தில் துப்பவேண்டும். உமது தெய்வீக மகத்துவத்துக்கு விரோதமாய் எண்ணிறந்த பாவ தோஷங்களைச் செய்த என்னையல்லோ அவமானப்படுத்தவேண்டும்? என்னையல்லோ மரண ஆக்கினைக்கு உள்ளாக்கவேண்டியிருந்தது. ஆ! என் ஆத்தும அன்பரான சர்வேசுரா, என்பேரில்வைத்த பட்சத்தினிமித்தம் எனக்குப் பதிலாய்த் தேவரீர் அநுபவித்த நிந்தை அவமானங்களுக்குப் பரிகாரமாக இனி சாயுங்காலந்தோ

றும் உமது திருச்சந்நிதியில் முழங்காலிலிருந்து உம
க்கு நன்றியறிந்த தோத்திரஞ் செலுத்துவேன். என
பாவங்களுக்குப் பொறுத்தலடையுந்தக்கதாக அர்ச்.
இராயப்பரைப்போல் நாளும் நம்பிக்கையோடே
மனஸ்தாபப்பட்டு அழுது கண்ணீர் சிந்துவேன்,
எனக்குப் பொறுத்தல்தந்து என்னைக் கைதூக்கி இ
ரட்சியும். தேவ துரோகிகளும் வேதத்தை மறுத
லிப்பவர்களும் தேவரீருக்கு வருவிக்கிற நிந்தை அவ
மானங்களுக்காக நான் அழுது பிரலாபிப்பேன். என்
பேரிலிரக்கமாயிரும் சுவாமி.

தேவ தூஷணர்களும், வேதத்தை மறுதலிப்பவர்
களும் மனந்திரும்பத்தக்கதாக 1-பர. 1-அரி 1-திரி.
சொல்லவும்.

---

# 7-வது. பிலாத்துஸ் அரண்மனை.

## வரலாறு.

ஏப்பிரல்மீ 3ஆ வெள்ளிக்கிழமை காலமே எரு
சலேமிலுள்ள பிரதான குருப்பிரசாதிகள், வேத
பாரகர் சனத்தின் மூப்பர்கள் எல்லாரும் ஒருமிக்கக்
கூடி ஆண்டவரைக் கயறு சங்கிலிகளால் கட்டித்
தள்ளிக்கொண்டு பிலாத்துஸென்கிற தேசாதிபதியின்
அரண்மனைக்குப் போகிறார்கள். இந்த அரண்மனை
க்கும், கைப்பாஸ் அரண்மனைக்கும் ஏறக்குறைய
2600 அடி தூரமாம். யூதர்கள் சந்தடியைக் கேட்
டுப் பிலாத்துஸ் வெளியே வந்து, "இந்த மனிதன்



பேரில் என்ன குற்றஞ் சாட்டவந்தீர்கள்," என்று கே
ட்டான். இதற்கவர்கள் சொன்னதாவது, "இந்தப்
பாதகனானவன் தன்னைக் கிறீஸ்து என்று சொன்
னான். சனங்களுக்குள் குழப்பத்தை எழுப்புகிறான்.
சேசார் இராயருக்குச் சனங்கள் இறைவரி கொடுக்
காதபடி துர்ப்புத்தி படிப்பித்தான்" என்று இவைமு
தலான குற்றங்களைச் சாட்டினார்கள். ஆண்டவரோ
மௌனமாயிருந்தார். இது வீண் மாச்சரியமென்று
பிலாத்துஸ் கண்டுபிடித்தாலும் ஆண்டவரைத் தனி
ப்பட அழைத்து "நீ யூதர்களின் இராஜாவோ,"
என்று கேட்டான். "நாம் இராஜன் என்று நீயே
சொல்லுகிறாயே, ஆகிலும் நமது இராச்சியம் இவ்வுல
கத்துக்கு அடுத்ததல்ல, உண்மைக்குச் சாட்சிசொ
ல்ல பூலோகத்தில் வந்தோம்" என்றார். இதன்பின்
பிலாத்துஸ் சனங்கள் கிட்டவந்து "இம்மனிதன்பே
ரில் யாதொரு குற்றமும் காணோம்," என்றான். இ
தைக்கேட்டுச் சனக்கூட்டமெல்லாம் வெகுவாய்க்
கூக்குரலிட்டு "கலிலேயாதேச முதல் இந்நாடுமட்
டும் உள்ள யூதேயா தேசமெங்கும் இவன் குழப்பஞ்
செய்துவந்தான்" என்றார்கள். அப்போது கலிலே
யா நாட்டிற்குச் சிற்றரசனாக வந்திருந்த எரோதேஸ்
அரண்மனைக்கு ஆண்டவரைக் கூட்டிக்கொண்டு
போகப் பிலாத்துஸ் கற்பித்தான்.

பிலாத்துசுடைய அரண்மனையிலே மிகுதியான
பாகம் இடிந்து அழிந்துபோயிற்று, மீதியான கட்டி
டமானது இப்போது துலுக்கத் தேசாதிபதியின் வா
சஸ்தலமாயிருக்கிறது. துலுக்கராசாவானவர்களுடை

தோறும் ஒரு புதுத் தேசாதிபதியை நியமித்து ஜெருசலேம் பட்டணத்துக்கு அனுப்புகிறார். ஆகையால் வருஷத்துக்கு ஒரு தேசாதிபதி இக் கட்டிடத்தில்வந்து குடியிருக்கிறார். முந்தியிருந்த நியாயசாலையானது இப்போது வேதவிரோதிகளான துருக்கருக்குச் சமையல் வீடாயிருக்கிறது. இது துயரத்துக்குரிய காரியந்தான்.

இந்த நியாயசாலையானது உயர்ந்த ஒரு கற்கட்டு மண்டபசாலையாம். அதிலேதான் ரோமைக்கர் நியாயாதிபதிகள் கச்சேரி நடத்திவந்தார்கள். அதின் உயர ஏறிப்போவதற்குச் சலவைக்கல்லால் செய்யப்பட்ட 28 படிகள் இருந்தன. அது இப்போது ரோமாபுரியிலிருக்கின்றது. திருஏணியென்ற பெயர் அதற்கு வழங்கிவருகிறது.

மனத்தியானம்.

என் ஆத்துமமே, இதோ அஞ்ஞானியான அதிபதியின் வாசலிலே குற்றவாளியைப்போலே கட்டுண்டு நிற்பவர் ஆர்? ஆதிகாலமுதல் பூலோகத்தாருக்குச் சர்வேசுரனால் வாக்குத்தத்தஞ் செய்யப்பட்டிருந்த இரட்சகர் அல்லவா? பூலோகத்தாருடைய பாவங்களினிமித்தம் தேவசமுகத்தில் பிணைப்பட்டு உத்தரிப்பதற்கு அவதரித்துவந்த திவ்வியசுதனான கிறீஸ்துநாதர் அல்லவா? மனுக்குலத்துக்கு நித்திய இராசாவாக அபிஷேகம்பண்ணப்பட்ட திவ்விய சுதனானவரல்லவா? இந்த இரட்சகரைப்பற்றிச் சொல்லப்பட்ட வேதப்பிரமாண விசேஷங்களும், தீர்க்கதரிசனங்களும் எல்லாம் நிறைவேறியிருந்தும் சத்துருக்க



ளான யூதர்கள் இவரை விசுவசியாமல் போனார்களே! இன்னம் காய்மகாரக் குரோதத்தால் கண்கெட்டுக் கர்த்தரைக் கொன்றுபோடவேணுமென்று வழிதேடுகிறார்களே, தங்கள் பிடிவாதம் நிறைவேற ஆண்டவர்பேரில் அநியாயமான குற்றங்களை ஆரோபிக்கிறார்களே, இவர் தேவசுதனான கிறீஸ்துநாதர் அல்லவென்றும், நித்தியராஜன் அல்லவென்றும் ஆட்சேபிக்கிறார்களே, அப்போஸ்தலர் எழுதிவைத்த வேத வாக்கியத்தின்படியே இப்பேர்ப்பட்ட அவிசுவாசிகளுக்கு ஆத்தும இரட்சணியம் இல்லாமல்போகுமே, (அரு. 3-ம் அதி. 18-36 வச.) ஐயோ! இந்த நிர்ப்பாக்கியரைப்போல் இன்னம் எத்தனையோ அவிசுவாசிகள் இவ்வுலகில் இருக்கிறார்கள். இவர்கள் மனந்திரும்ப வேண்டிக்கொள்வாயாக. என் ஆத்துமமே, நீயாகிலும் இவரை உன் இரட்சகராக அங்கீகரித்துக்கொள். உனது இராஜாவாக ஏற்றுக்கொள். உலகம், பிசாசு, சரீரம் என்கிற சத்துருக்களும், ஆங்காரம், கோபமென்கிற ஆசாபாசங்களும் உன் இருதயத்தைக் கைவசப்படுத்தாதபடிக்கு ஜாக்கிரதையாயிருப்பாயாக.

மன்றாட்டு.

நித்திய வார்த்தையான சேசுவே, தேவசுதன் நீர்தானென்றும், எனக்காக அவதரித்த இராஜாதி இராஜன் நீர்தானென்றும், எனது அன்புள்ள இரட்சகர் நீர்தானென்றும் நான் விசுவசிக்கிறேன். இந்த யூதரைப்போலொத்த அவிசுவாசிகள் உமது மகிமையை எவ்வளவு புறக்கணிப்பார்களோ, அவ்வளவுக்கு

நான் அதைச் சகித்து எங்கும் பிரசித்தப்படுத்துவேன். அவிசுவாசிகள் உம்முடைய திருநாமத்தை எவ்வளவு நிந்திப்பார்களோ, அவ்வளவுக்கு நான் அதை ஆராதித்து வாழ்த்தி ஸ்துதிப்பேன். ஆகையால் அவிசுவாசிகளின் நடுவில் நானொரு அப்போஸ்தலனாக விளங்க எனக்குப் போதுமான மனத்திடனை கட்டளையிட்டருளும், சுவாமி.

அவிசுவாசிகள் மனந்திரும்பத்தக்கதாக 1-பர. 1-பிரி. 1-திரி. சொல்லவும்.

---

## 8-வது. எரோதேசுடைய அரண்மனை.

### வரலாறு.

இந்த எரோதேசுடைய அரண்மனை முற்காலத்தில் சிங்கார விநோத விசித்திரம் அமைந்ததாயிருந்ததாம். ஆனால் பிற்காலத்தில் அது இடிந்து தகர்ந்து குட்டிச்சுவராய்ப் போய்விட்டது. அவ்விடத்தில் இப்போது ஒரு துலுக்கன் பெரியவீடுகட்டிக் குடியிருக்கிறான். கிறீஸ்துவன் எவனும் அதனுள்ப் பிரவேசித்துப்பார்க்க அவன் இடங்கொடுக்கிறதில்லை. பிலாத்தென்ற தேசாதிபதி கட்டளையிட்டபடியே யூதர்கள் எரோதேஸ் இராசாவின் அரண்மனைக்கு ஆண்டவரைக் கூட்டிக்கொண்டுபோனார்கள். ஆண்டவரைக் கண்டவுடனே அந்த இராசாவானவன் மிகுந்த வாக்கு உபசார ஆசார மரியாதைகள் செய்ததுந்



தவிர ஏதாவது ஒரு புதுமைசெய்து தனக்கு வேடிக்கைகாட்டவேணுமென்று அவரோடே பேசிப் பசப்பிப் பார்த்தான். ஆண்டவர் அதற்கிணங்காமலும் இடங்கொடாமலும் மௌனமாயிருந்தார். இதைக்கண்டு இராஜா ஆண்டவரை ஒரு பைத்தியகாரனென்றுசொல்லி அதற்கு அடையாளமாக நீளிய வெள்ளைச்சட்டை ஒன்றை அவர்மேல் போர்த்தி நிறுத்தித் தன்சேனைத் தளங்களோடே அவரை நிந்தித்துப் பரிகாசம் பண்ணினான். மீளவும் இந்த அவமானமான கோலத்தோடே பிலாத்துஸ் அதிபதியின் சமுகத்துக்கு அவரை மறுபடியும் அனுப்பினான்.

ஞான சாகரமாகிய ஆண்டவர் அற்பமனிதரால் பைத்தியகாரனென்று நிந்திக்கப்படுகிறதைப் பாருங்கள். இந்த அவமானமான கோலத்தோடு ஜெருசலேம் பட்டணத்தின் தெருவீதிவழியாய் ஆண்டவரை யூதர்கள் தள்ளிக்கொண்டு போகிறதையும் பாருங்கள்.

### மனத்தியானம்.

என் ஆத்துமமே, மனிதர் இரட்சணியத்தின் நிமித்தம் ஆண்டவர் அணிந்துகொள்ளத் திருவுளமான நிந்தைக்குரிய கோலத்தைப்பார். இதை நினைத்து மனமிரங்கிப் பரிதபித்து அழுது அவரைப்பார்த்து நீ சொல்லவேண்டியதாவது " சுவாமி, கிறீஸ்தவர்களென்று பேர்வைத்துக்கொண்டு, உமது ஊழியர்களென்று பேர்வைத்துக்கொண்டு, உம்மை அவமானப்படுத்தினோமே! நல்ல கிறீஸ்துவர்களுக்குள்ளேயும் எரோதேசென்பவனுக்குச் சமானமான பாவி

கள், பரிசேயர்கள், இன்னும் இத்தனையோ பேர்களி
ருக்கிறார்கள். நல்ல யோக்கியர்முன் செய்யத்தகாத காரியங்களை— வெட்கக்கேடான காரியங்களை— அநாசாரமான செய்கைகளை— அக்கிரமமான கிரியைகளை— உமது சமுகத்திலும், உமது தேவாலயங்களிலும் அச்சம் பயமின்றி, வெட்கம் நாணமின்றி அவர்கள் செய்யத்துணிகிறார்கள். இதுவும் உம்மையே நிந்தித்துப் பரிகாசம் பண்ணுகிறார்களென்னத்தகும். இப்பேர்ப்பட்ட அக்கிரமமான கிரிகைகளாலே எவ்வளவோ தேவ கோபாக்கினைக்கு அவர்கள் பாத்திரவான்களாகிறார்கள். சுவாமி, அவர்கள்பேரில் இரக்கமாயிருந்து அவர்கள் மனந்திரும்பிவரக் கிருபை செய்தருளும்.

ஆனால் ஆண்டவரே, இந்த ஏரோதேசிடத்தில் ஏன் ஒன்றும் பேசாமலிருக்கிறீர்? மூன்று வருஷகாலமாய் உம்முடைய திவ்விய போதனைகளைக் கேளாமல் அவன் மூர்க்கமாய்ப் புறக்கணித்து வந்ததினாலே இப்போது உமது அமிர்தமான மொழிகளைக்கேட்க அவன் பாத்திரவானல்ல நிசந்தான். நாங்களாகிலும் உமது திவ்விய வசனத்துக்கு இணங்கி நடந்து உம்மைச் சிநேகிக்க வரப்பிரசாதம் தந்தருளும் சுவாமி.

மன்றாட்டு.

ஆராதனைக்குரிய ஆண்டவரே, உமது தேவாலயங்களில், உமது திருச்சமுகத்தில் அனுதினம் நடந்து வரும் தேவ துரோகங்களைப் பொறுத்துக்கொள்ளும். இனிமேல் தேவரீர் சமுகத்தில் நாங்கள் அதிகபத்தி



அடக்க ஒடுக்கத்தோடும், மெள்ன மனப்பற்றுதலோடும் நடந்து வரத்தக்கதாக எங்களுக்கு வேண்டிய வரப்பிரசாதம் தந்தருளும் சுவாமி.

அன்புக்குரிய இரட்சகரே புத்தி பிரசங்கங்களைக் கேட்பதில் நாங்கள் இதுவரையில் காண்பித்த அசட்டைத்தனத்தைப் பொறுத்துக்கொள்ளும். இனிமேல் அப்படிப்பட்ட திரு வாக்குகளைப் பயபத்தியோடுகேட்டுப் பலனடைய உறுதியான பிரதிக்கினை செய்கிறோம். எங்களுக்கு உமது தேவ ஒத்தாசை கட்டளைபண்ணியருளும் சுவாமி.

தேவாலயங்களில் அநாசாரமாய் நடக்கிறவர்களும் புத்தி பிரசங்கங்களை அலட்சியம் பண்ணுகிறவர்களும் மனந்திரும்பத்தக்கதாக 1-பர. 1-பிரி. 1-திரி. சொல்லவும்.

## 9-வது. பரபாஸ் என்ற கொலைபாதகனோடு ஒப்பிடப்பட்டது.

### வரலாறு.

ஆண்டவரைக் கட்டின கட்டுகளோடே யூதர்கள் மறுபடியுங் கூட்டிக்கொண்டுவர, பிலாத்துஸ் கண்டு கஸ்திப்பட்டான். ஏனெனில் குற்றமில்லாதவரைக் கொலைப்படுத்தவேணுமென்று யூதர்கள் பிடிவாதமாய்க் கலகஞ்செய்வதை அவன் கண்டு

பிடித்தான். அவர்களுடைய கோரிக்கைக்கு இணங்காவிட்டால் தனக்குப் பொல்லாப்பு வருமென்று பிலாத்துவும் பயந்தாலும் ஆண்டவரை விடுவிடத்தக்கதாக ஒரு உபாயம் செய்தான். அதாவது: கொலைபாதகனான பரபாஸ் என்பவனை அழைத்து கூட்டிக்கொண்டு வரச்செய்து ஆண்டவருடனே சரிசமானமாய் நிறுத்திச் சனங்களைப்பார்த்து அவன் சொன்னதாவது, “ உங்கள் பாஸ்குப்பண்டிகை சமீபித்திருக்கிறதே, உங்கள் வழக்கம்போலே ஒரு குற்றவாளியை இன்று விடுதலைசெய்யவேண்டும். இதோ! இந்தப் பரபாசென்பவனைப், பாருங்கள். எல்லாரும் அறிய இவன் கொடிய கொலைபாதகனல்லவா? இந்தச் சேசு என்பவனோ, உங்களுக்கு நல்ல புத்திமதிசொல்லிக் குருடர் செவிடர்முதலிய நோயாளிகளுக்குப் பூரண சுகத்தை வருவித்து மரித்தவர்களை உயிர்ப்பித்து இப்படியாய் அநேக அற்புத நன்மைகளை உங்களுக்குச் செய்தவனல்லவா? இப்போது இந்த இருவரில் யாரைவிட்டுவிட மனதாயிருக்கிறீர்கள் ” என்று கேட்டான்.

ஓ! வானமண்டலங்களே! பரலோக பூலோக சிருஷ்டிப்புக்களே! நீங்கள் சாட்சியாயிருக்க, இதோ! பாவியோடு பரிசுத்தரையும், நீசமனிதனோடு தேவாதி தேவனையும், ஒப்பிட்டு நிறுத்தியிருக்கிறார்கள்.

ஆகிலும் மூர்க்கவெறிகொண்ட யூதர்கள் எல்லோரும் ஒருமித்து “ பரபாசை, விட்டுவிடும் சேசு என்பவனைச் சிலுவையிலறைந்து கொல்லும், கொல்லும், ” என்று கூக்குரலிடுகிறார்கள்.





ஐயோ! பாதகனை விடுவித்துப் பரிசுத்தரைத் தண்டிப்பாருண்டோ? உலோகாதியந்தம் கேள்விப்படாத நீஷ்டூரம் இது அல்லவோ?

மனந்தியானம்.

என் ஆத்துமமே, பரபாஸ்என்ற பாதகனோடு மாசற்ற செம்மறிப்புருவையானவர் ஒப்பனையிடப்பட்ட விசேஷம் உனக்கு என்னமாய்த் தோன்றுகின்றது! ஆண்டவரைப்பார்க்க பரபாசே உத்தமனென்று தெரிந்துகொள்ளப்பட்ட விசேஷம், உனக்கு என்னமாய்த் தோன்றுகின்றது? இவ்விரண்டு விசேஷங்களையும் நீ சிந்தித்துப்பார்.

ஆண்டவருடைய ஊழியத்தையும், அவருடைய மகிமை தோத்திரத்தையும் நீ புறக்கணித்துவிட்டு, இன்பசுகத்தை மேலாகத் தேடித்திரிந்தாய். ஆண்டவருடைய கற்பனைகளைப் புறக்கணித்துவிட்டு, மாமூல் வழக்கமும், ஜாதி ஆசாரமும் பெரிதென்று எண்ணி நடந்தாய். இதனால் எத்தனையோ பாவங்கள் உன்னிடத்தில் விளைந்தன. இந்தப் பாவங்களுக்கு உத்தரிப்பதற்காகவே ஆண்டவர் இவ்வளவு நிசிதமாயெண்ணப்பட்டு, நீஷ்டூரத்தீர்வைக்குள்ளானார். ஆகையால் இப்போது துக்க மனஸ்தாபப்பட்டு ஆண்டவரைப்பார்த்து சொல்லத்தக்கதாவது:—

மன்றாட்டு.

என் ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துவே, தெய்வீக மகத்துவம் பொருந்திய தேவரீரைப்பார்க்கக் கொலைபாதகனான பரபாஸை நல்லவனென்று தெரிந்துகொண்ட யூதர் எவ்வளவோ கோபவெறி

கொண்டீரே! ஆகிலும் நாங்கள் பாவத்தில் விழும்போதெல்லாம் இப்பேர்ப்பட்ட மதிகேடருக்குத்தான் சமானமாயிருக்கிறோம். சுவாமி, உமது ஊழியத்தையும் உமது சிநேகத்தையும் அலட்சியம் பண்ணினோம். அநித்திய பூலோக வாழ்வையும் அக்கிரம இன்ப சுகத்தையும் மேலாகத் தெரிந்துகொண்டோம். எத்தனையோ விசை இப்பேர்ப்பட்ட குருட்டாட்டத்துக்கு உட்பட்டோம். அறியாமலே செய்தோம் சுவாமி, அறியாமல் செய்தோம். இப்போது அந்தப் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு மிகுந்த தாழ்ச்சியோடு பொறுத்தலைக் கேட்கிறோம். அர்ச். மரிய மதலேனம்மாளைப்போல் இனி உமது திருப்பாதத்தண்டையிலே தங்கி வசித்திருப்போம். உமது சத்தியவேத கற்பனைகளை மேலாக எண்ணி நடந்துவருவோம். எங்களுக்கு உமது கிருபைபுரிந்தருளும், சுவாமீ. ஆமென் சேசு.

சத்தியவேத கற்பனைகளை மீறி நடக்கிறவர்கள் மனந்திரும்பத்தக்கதாக, 1-பர. 1-பிரி. 1-திரி. சொல்லவும்.

---

## 10-வது. கற்றூணில் கட்டுண்டு அடிபட்டது.

---

### வரலாறு.

யூதர்களுடைய மூர்க்கத்தையும் பிடிவாதத்தையும் பிலாத்துஸ் கண்டு அவர்கள் மனது இளகத்தக்க



தாகவும், அவர்களுக்குப் பிரியப்படத்தக்கதாகவும் ஆண்டவரைக் கற்றூணில் கட்டியடிக்கத் தீர்ப்பிட்டான். அதெப்படியென்றால், பெரிய குற்றவாளிகளைத் தண்டிப்பதற்காகத் தேசாதிபதியின் அரண்மனையில் ஒரு மண்டபசாலையிருக்கிறது. இது எழுபட்டு அடிச் சதுர விஸ்தீரணமுள்ளதாம். இதன் நடுவே வெண் சலவைக்கல்லால் செய்யப்பட்ட தூண் ஒன்று மண்டபத்தின் வளைவைத் தாங்கி நிற்கின்றது. தேசாதிபதியின் கட்டளைப்படியே ஆண்டவரைத் தண்டிப்பதற்காகக் கொடிய நெஞ்சுள்ள கொலையாளிகள் அவருடைய வஸ்திரங்களை உரிந்துபோட்டுப் பலமான கயிறுகளால் மேற்சொல்லிய தூணோடு அவரைக் கட்டினார்கள். மீளவும் அடிமைகளை அடிக்கும் எத்தனங்களாகிய சாட்டை கசைவார்களினால் கால் என்றும் மேலென்றும் பாராமல் அவரை அடித்தார்கள். இப்படி நிஷ்டூரமாய் அடித்த அடிகள் ஐயாயிரத்துச் சில்வானமாம். இந்த அடிகளாலே ஆண்டவருடைய மிருதுவான சரீரம் எப்பக்கத்திலும் காயம்பட்டுப் பிய்ந்து இரணமாகித் திரளான இரத்தம் பீரிட்டு ஓடிற்று. அந்தக் கற்றூணில் அப்போது தெறித்துவிழுந்த இரத்தக்கறைகள் இன்னு[illegible]திருக்கின்றனவாம்.

### தியானம்.

பத்தியுள்ள ஆத்துமாக்களே, அந்த மண்டபசாலைக்குள்ளே இப்போது நீங்கள் பிரவேசித்து அதில் நடக்கும் துக்க பிரலாபத்துக்குரிய விசேஷங்களைச் சற்றுத் தியானித்துப் பாருங்கள். அதோ! அந்தக்

கற்றாணியிலே நிர்வாணத்தோடே நிஷ்டூரமாய் கட்டுண்டு நிற்பவர் யார்? பரலோக இராஜன், தேவாதி தேவனின் ஏக குமாரன், மாசற்ற செம்மறிப்புருவை, பரிசுத்த கன்னிமரியாயின் குமாரன்.

நிஷ்டூர கொலைபாதகர்கள் கண்முன்னே, நாணமற்ற அந்த துஷ்ட யூதர்கள் சமுகத்திலே, இவ்வளவு ஜனக்கூட்டத்திலே, எவரையாவது நிர்வாணமாய் நிறுத்திவைப்பது எவ்வளவோ அவமானம்! அப்படியிருக்க நமக்காக அவதரித்த சுவாமிக்கு இது எவ்வளவோ நிந்தை! ஐயோ! முதல் ஆதாமின் சரீரத்தை மரத்தின் இலைகள் மூடினதுபோலே இந்த இரண்டாம் ஆதாமின் பரிசுத்த சரீரத்தை மறைக்க மரத்தின் இலைகள் அகப்படாமல் போயிற்றே? பத்தி சுவாலகர்களே, மனுஷ அவதாரமான இந்தச் சுவாமியின் திருமேனியை உங்கள் இறக்கைகளாலாவது மறைந்துக்கொள்ள வாருங்கள்.

ஓ! ஒளிநிறைந்த சூரியனே, சர்மனசுக்கள்மாத்திரம் பார்க்கத்தக்க இந்த இரட்சகரின் மேனியை இந்தக் கொலைகாரர் கண்ணுக்கு மறைக்கச் சுருக்காய் நீ அஸ்தமித்து மறைந்துபோகக்கடவாய்.

ஓ! கற்றூணே, அப்போது உனக்குப்பதிலாய் நான் அங்கே இருந்திருப்பேனாகில் நான் எவ்வளவோ பாக்கியசாலியாயிருப்பே[illegible] வாக்குக்கெட்டாத அந்த வேதனைநேரத்திலே அவருடைய மினவுதல் எனக்குக் கிடைத்திருக்குமே, அவருடைய திருக்கரங்களின் அரவணைப்பில் என் ஆத்துமம் பேரின்பபாக்கியத்தைச் சுகித்திருக்குமே. இன்னும்

(47)



அவர்பேரில் விழுந்த அடிகளையும் தடுத்து விலக்கி அவருக்காகச் சில அடிகளை என்பேரில் தாங்கிக்கொண்டு நின்றிருப்பேனே, அவர் சிந்தின இரத்தத்துளிகள் என்பேரில்பட்டு என் பாவங்களைக் கழுவியிருக்குமே. பத்தியுள்ள ஆத்துமாக்களே, இந்த விசேஷங்களைத் தியானித்தபின் ஆண்டவரைப்பார்த்துச் சொல்லத்தக்கதாவது:—

## மன்றாட்டு.

அன்புள்ள இரட்சகரே, எங்கள் பாவங்களுக்காக உத்தரிப்பதற்கல்லோ, இவ்வளவு வேதனைக்குள்ளானீர். சிற்றின்ப சந்தோஷங்களுக்கு இணங்கி நடக்கிற எங்கள் பாவங்களாலேதானே மாசற்ற உமது திருச்சரீரத்துக்கு இவ்வளவு வேதனை உண்டாயிற்று. எங்கள் அசுசியான பாவங்களுக்காக, எங்கள் ஆசாபாச துர்க்குணங்களுக்காக, எங்கள் அகந்தை ஆங்காரத்துக்காக, எங்கள்மேல் வரவிருந்த தேவகோபத்தை அமர்த்தத்தக்கதாக, இப்படிப் பாடுபடத் திருவுளமானீர். தேவகிருபை மழையை எங்கள்மேல் பொழியவிடும்படிக்குத் தேவரீர் இப்படி உத்தரிக்கத் திருவுளமானீர். தேவரீருக்கு நாங்கள் மிகவும் நன்றியறிந்திருக்கிறோம். எங்கள் பாவங்களுக்காக மனம்நொந்து கஸ்திப்படுகிறோம். இனி எப்போதும், எவ்[illegible]ம், தேவரீருக்குப் பிரியமாய் நடந்துவரப் பிரதிக்கினைசெய்கிறோம். எங்கள் பாவங்களைப் பொறுத்துக்கொண்டு எங்கள் பிரதிக்கினையை ஆசீர்வதித்தருளும் சுவாமி,

ஆமென் சேசு.

பாவிகள் மனந்திரும்பத்தக்கதாக, 1-பர. 1-பிர். 1-திரி. சொல்லவும்.

---

## 11-வது. முள்முடி சூட்டப்பட்டது.

### வரலாறு.

கல்தூணில்நின்று ஆண்டவர் கட்டவிழ்க்கப்பட்டவுடனே அவ்விடத்தில் சிந்தப்பட்டிருந்த இரத்தத்தில் அவர் விழுந்தார். சேவகரோ அவ்விடத்தில் நின்று அவருடைய வஸ்திரம்கிடந்த இடமட்டும் அவரை இழுத்துக்கொண்டு போகிறார்கள். திவ்விய கர்த்தர் தமது வஸ்திரங்களை உடுத்திக்கொண்டபின் நியாயாசனசாலைவரைக்கும் அவரைத் தள்ளிக்கொண்டுபோய் அவரை ஒரு வேடிக்கைப் பொருளாக்கினார்கள். அதெப்படியென்றால் அங்கே போய்ச் சேர்ந்த சற்றுநேரத்துக்குப்பின் அவருடைய சர்வாங்கத்திலுமுள்ள காயங்களோடு ஒட்டியிருந்த வஸ்திரத்தைக் கட்டாயமாய் உரிந்து ஒரு பீற்றல் சகலாத்தை அவர் தோள்மேல் போர்த்தி, 72, பெரியமுள்ளுகள் அடங்கிய ஒரு முள்முடியைப்பின்னி அவருடைய தலையில்வைத்து அடிக்கிறார்கள். செங்கோலாக ஒரு நாணல் குச்சியை அவர் கையில் கொடுக்கிறார்கள். இந்தப் பரிகாசக்கோலத்தோடே அவரை ஒரு கல்லின்மேல் உட்காரவைத்து ஆகடியம் பண்ணுகிறார்கள். ஒருவன் வந்து ஆண்டவரைக் கும்பிடுவதுபோல் அவர்முன் முழங்காலிலிருந்து, "யூத ராசாவே வாழ்க!" என்று சொல்லிக் கன்னத்தில்



அறைந்து முகத்தில் துப்புகிறான். வேறொருவன் வந்து அவர் கையிலிருந்த கோலைப்பிடுங்கி முள்முடி அதிகமாய்த் தலையில் அழுந்த அக்கோலால் அடிக்கிறான். இப்படியாய் மற்றவர்களும் முறை முறையாய் வந்து இசலிபோராட்டமாய் ஒருவனைவிட ஒருவன் அதிகமாய் அவரை நிந்தித்து அவமானப்படுத்திக் கெம்பீரம் கொண்டாடுகிறார்கள்.

### மனத்தியானம்.

ஆத்துமாக்களே! எக்காலத்திலாவது இப்பேர்ப்பட்ட நிஷ்டூரம் மனிதருக்குச் செய்யப்பட்டதாக நீங்கள் கேள்விப்பட்டதுண்டோ? மனுஷவேஷம் எடுத்துவந்த பசாசுகள்தான் இப்பேர்ப்பட்ட வேதனை வகையைக் கண்டுபிடித்து நடத்தக்கூடுமொழிய மற்றப்படியல்ல.

பரிகாச ராசாவாக முள்முடி சூட்டப்பட்டு அந்தக் கல் ஆசனத்தில் வீற்றிருக்கிற உங்கள் ஆண்டவரைப் பாருங்கள். நமது அகந்தை ஆங்கார நினைவுகள், துர்யோசனைகள்தான் ஆண்டவருக்கு முள்முடியாயிற்று என்று கண்டுணருங்கள்.

என்னாத்துமமே, இப்படியாய் ஆண்டவருக்கு முள்முடியைச் சூட்டிவிட்டு உனக்குப் பூமுடியை வைத்துக்கொண்டாய்! தலையானது வேதனைப்படுகையில் மற்ற அவயவங்கள் சந்தோஷப்படக்கூடுமோ? ஆண்டவருடைய ஊழியர்களுக்கு இவ்வுலகில் சம்பாவனையாக முள்முடியேயல்லாமல் பூமுடி கிடையாது. இந்த முள்முடியை தரித்துப் பொறுத்து

ஜீவித்து மரித்தபின்தான் ஆண்டவரோடு அழியாத மோட்ச [illegible]தரிக்கப் பாத்திரவானாவாய்.

இதன்றியே அவதரித்த கர்த்தரை அறியாத யூதர்கள் அவருக்கு இப்பேர்ப்பட்ட அக்கிரம நிஷ்டூரங்களைச் செய்தது ஆச்சரியமல்லவே. அவரைத் தேவனென்றும், இரட்சகரென்றும் அறிந்த நீயல்லோ, உன் அக்கிரம நடத்தையால் அவரை நிந்தித்து ஆகடியம் பண்ணுகிறாய். அவருடைய கற்பனைகளை அவட்சியம்பண்ணி அவரை அவமானப்படுத்துகிறாய். ஆகையால் இப்போது உன் பாவங்களுக்காகத் துக்கமனஸ்தாபப்பட்டு அழுது அவருடைய பாதத்திலேவிழுந்து பொறுத்தலைக் கேட்பாயாக.

மன்றாட்டு.

அன்புள்ள இரட்சகரே, அவதரித்த தேவனே, என் பாவங்களுக்கு உத்தரிக்க அல்லோ, இவ்வளவு நிந்தை நிஷ்டூரங்களுக்குள்ளானீர். இவ்வளவு பிரதாபத்துக்குரிய அந்தஸ்தில் இருக்கத் திருவுளமான தேவரீரை நாங்கள் பார்க்கையில் எங்கள் இரட்சணியத்தின்பேரில் தேவரீருக்குள்ள நேசப்பெருக்கம் எம்மாத்திரம் என்று கண்டுபிடிக்கிறோம். எங்கள் துர்க்குணங்களையெல்லாம் முழுதும் வெறுத்துவிட்டு எங்களுக்குவரும் கஸ்தி துன்பங்களையெல்லாம் பொறுமையோடே கையேற்றுக்கொள்ளப் பிரதிக்கினை செய்கிறோம். தேவரீருடைய திரு முள்முடியின் வேதனையைப்பார்த்து எங்கள் பாவங்களைப் பொறுத்துக்கொள்ளும் சுவாமி, ஆமென் சேசு.



ஆண்டவருடைய திரு இருதய நேசத்துக்குச் செய்யப்பட்ட நிந்தை அவமானங்களுக்குப் பரிகாரமாக, 1-பர. 1-பிரி. 1-கிரி. சொல்லவும்.

## 12-வது. இதோ மனிதனென்று ஆண்டவர் காட்டப்பட்டது.

வரலாறு.

பிலாத்து அரண்மனையின் ஒரு பாகமாகிய நைமண்டபசாலையானது இராஜ வீதியில் உயரமான ஒரு பழய மேல்மாடிக்கட்டிடமாம். அவ்விடத்திலிருந்துதான் அந்தத் தேசாதிபதிகள் ஜனங்களைப் பார்த்து பேசுகிறது வழக்கம். பிலாத்து என்ற அதிபதியானவன் சேசுநாதர்பேரில் குற்றமில்லையென்று நன்றாய் அறிந்ததினாலே அவரைவிட்டுவிடப் பற்பல உபாயங்கள் செய்தான். அப்போது ஆண்டவருடைய சர்வாங்கமும் எண்ணிறந்த காயங்களினால் நிறைந்து, நிறப்பிழையாய் மனுஷத் தோற்றமுமில்லாதவராயிருந்தார். ஆகையால் யூதருடைய கொடிய நெஞ்சிளகத்தக்கதாகப் பிலாத்து அவரை மேல்மாடிக்குக் கூட்டிக்கொண்டுபோய் யூதர்களுக்குக் காண்பித்து, நீங்கள் இவனைச் சாவுக்குத் தீர்வையிடவேணுமென்று கேட்கிறீர்களே, இவனைக் கொலைசெய்யவேணுமென்று தேடுகிறீர்களே, இதோ, மனிதரூபம் இழந்திருக்கும் இம்மனிதனைப் பாருங்கள். வேண்டியதற்குமேல் அதிகமாய் இவனைத்

தெண்டித்தாயிற்றே! இனியாகிலும் இவனை விட்டுவிட உங்களுக்கு மனம்வராதோ" என்றான்.

அப்போது நாலாபக்கத்திலுமிருந்த ஜனக்கூட்டம் கூக்குரலிட்டு, "இம்மனிதனைக் கொல்லும், கொல்லும், தாமதமின்றிச் சிலுவை மரத்திலே இவனைத் தீர்வையிடும்" என்று கூப்பிட்டார்கள். அதற்குப் பிலாத்து "இவன்பேரில் யாதொரு குற்றமும் காணேனே, மாசற்றவனை நான் 'கொலைப்படுத்துவேனோ? இவனுடைய இரத்தப்பழி என்மேல் விழாதோ?" என்றான். அதற்குச் சனங்கள், இன்னும் அதிக பலமாய்க் கூக்குரலிட்டு, "தேவ மகத்துவத்துக்கு விரோதமான பாதகன் இவன், அதேனென்றால் தன்னைத் தேவசுதனென்று சொல்லிக் கலகஞ் செய்துவந்தான். இவனுடைய இரத்தப்பழி எங்கள்மேலும் எங்கள் பிள்ளைகள்மேலும் வரக்கடவது" என்றார்கள்.

இந்தக் கூக்குரலைக்கேட்டுத் தேசாதிபதி பயந்து திகிலடைந்து தன் ஜீவனத்துக்குப் பொல்லாப்பு வருமென்று அஞ்சினான். நியாயத்துக்கும் அநியாயத்துக்கும் நடுவேநின்று திகைத்து, மலைத்து, தியங்கி, மயங்கினான். கடைசியில் அச்சமே அவன்மனதை மேற்கொள்ளலாயிற்று. நீதி செலுத்துவதைவிடச் சத்துருக்களான யூதரைச் சந்துஷ்டிப்படுத்துவதே தனக்கு நலமென்றெண்ணினான். ஆகையால் அவன் மனதறிய முன் அங்கீகரித்த அநியாயத்தையே இப்போதுசெய்ய உடன்பட்டான். "சேசுநசரேனுவைச் சிலுவையிலறைந்து கொன்றுபோடுங்கள்"



என்று தீர்ப்பெழுதிக் குற்றமற்ற செம்மறிப்புருவையைக் கொலைஞர்கையில் ஒப்பித்தான். ஐயோ! பிரபஞ்ச நன்மையையே பெரிதாகஎண்ணி, நீதிவழுவி, நெறிபிசகி இந்நியாயாதிபதியிடறி விழுந்ததைப் பார் [illegible] ஆகிலும் இந்த மரணத்தீர்ப்பை ஆண்டவர் சந்தோஷத்தோடே ஏற்றுக்கொண்டார்.

### மனத்தியானம்.

என்னாத்துமமே, அன்று பெத்லெம்நகரில் சம்மனசுகளால் ஆராதிக்கப்பட்ட சுவாமியிவர்தானோ? மூன்றிராஜாக்களால் அன்று வணங்கி நமஸ்கரிக்கப்பட்ட சுவாமியிவர்தானோ? தபோரென்ற மலைமேல் சூரியசோதிப்பிரகாசச் சுடரொளி வீச மறுரூபமாய் அன்று துலங்கி விளங்கின சுவாமி இவர்தானோ, பார்! ஆம், ஆம். தாவீது இராஜா பாடியிருப்பது போல், உள்ளரங்கத்தில் சகல மனுமக்களிலும் அதிக சுபசௌந்தரியமுள்ள அந்தச்சுவாமியானவர் இவர்தான். ஆனால் நமது இரட்சணியத்தின் நிமித்தம் புறத்தியில் மனிதர் கண்ணுக்கு மங்கி மறைந்து மாறுபட்டு இகழ்ச்சிக்குரிய பொருள்போலிருக்க உடன்பட்டார். என் ஆத்துமமே, இந்த நரதேவனான சுவாமியை, உனக்கு மாதிரிகையாக வைத்து உன் நடக்கையைச் சீர்திருத்திக்கொள்.

இவ்வுலகவாசிகளுக்குரிய ஆசாபாசத் துர்க்குணங்களை முழுதும் அடியோடே பிடுங்கி எறிந்துவிட்டு ஆண்டவருடைய ஊழியர்களுக்கடுத்த ஞானசீவிய நடபடிக்கைகள் உன்னிடத்திலுண்டாகி வளரப் பிரயாசப்படக்கடவாய். இப்பேர்ப்பட்ட ஞானசீவியம்

பார்ப்பவர்கள் கண்ணுக்குப் பழிப்புக்குரியதாய் இருக்குமென்று நினைத்தான். ஆகிலும் வேத முறைமைப்படியே நீ செய்யுங் கிரிகைகளை விட்டுவிடாதே, பிறர் என்ன நினைப்பார்களோ, என்ற எண்ணத்தால் எவ்வளவும் பின்வாங்காதே. உள்ளத்தைப்பார்த்து தீர்ப்பிடும் சுவாமிக்குப் பயந்து நடப்பவனே பாக்கியவானாம்.

## மன்றாட்டு.

சிநேகப்பலியான சேசுவே, எங்கள் இரட்சணியத்தினிமித்தம் தேவரீரெடுத்த மனுஷீகம் இப்படி மானபங்கமாய் மாறுபடலாயிற்றே. இன்னம் வலிய மனம் பொருந்தி மரணத் தீர்ப்புக்கும் உள்ளானீரே.

சுவாமி, விலைமதியாத உமது திரு இரத்தப்பலன் எங்களுக்கும் எங்கள் தேசத்தாருக்கும் வியர்த்தமாய்ப் போகாதபடிக்கு உம்மை அதிகமதிகமாய்ச் சிநேகிக்கும் வரத்தை எங்களுக்குத் தந்தருளும். முகத்தாட்சணியத்தினாலாவது உலக வாடிக்கை வழக்கத்தினாலாவது வேத கற்பனைகளை நாங்கள் ஒருகாலும் மீறாமல் உமது திவ்விய மாதிரிகையைச் சுமுத்திரையாய் அனுசரித்துவரக் கிருபை புரிந்தருளும் சுவாமி ஆமென் சேசு.

ஆண்டவருக்குவந்த நிந்தை அவமானங்களுக்குப் பரிகாரமாக 1-பர. 1-பிரி. 1-திரி. சொல்லவும்.



## 2-வது. (தொடர்ச்சி.)

### ஆண்டவர் மரணத்தீர்வையிடப்பட்ட இடமாகிய பிலாத்து அரண்மனைமட்டும் அவர் நடந்து சென்றதூரம்.

பூங்காவனமுதல் அன்னாஸ் வீடுமட்டும் 2600 அடி தூரமாம். அன்னாஸ் என்பவனுடைய வீடுமுதல் கைப்பாஸ் வீடுமட்டும் 520 அடி தூரமாம். கைப்பாஸ் வீடுமுதல் பிலாத்துஸ் அதிபதியின் அரண்மனைமட்டும் 4000 அடி தூரமாம். பிலாத்துஸ் அரண்மனைமுதல் எரோதேஸ் அரண்மனைமட்டும் 300 அடி தூரமாம். எரோதேஸ் அரண்மனையிலிருந்து பிலாத்துஸ் அரண்மனைமட்டும் திரும்ப அவர் நடந்த தூரமும் அவ்வளவே. பிலாத்துஸ் அரண்மனையிலிருந்து ஆண்டவர் கட்டுண்டு அடிபட்ட கற்றூண் இருக்கிற மண்டபம்வரையில் 30 அடி தூரமாம். திரும்பிவரும்போது அவர் நடந்ததூரமும் அவ்வளவே. ஆக ஆண்டவர் நடந்து சென்ற தூரம் 7780 அடி தூரமாம்.

### திரு ஏணி (28. படிகள்.)

ஆண்டவர் பிலாத்துஸ் அரண்மனையிலிருந்த படிக்கட்டின்மேல் மூன்றுவிசை ஏறி மூன்றுவிசை இறங்கி வந்தார். அந்தப் படிக்கட்டு திரு ஏணியென்று சொல்லப்படும். அது இப்போது உரோமாபுரியில்

பூச்சியத்தோடே காப்பாற்றப்பட்டிருக்கி[illegible] கைப்பாஸ் இடத்தில்நின்று வந்தபோது முதல்விசை அந்தப் படிக்கட்டில் ஏறினார். ஏரோதேஸ் அரண்மனைக்குப் போகத்தக்கதாக அதில் நின்று இறங்கினார். ஏரோதேஸ் இடத்திலிருந்து வந்தபிறகு அப்படிக்கட்டில் இரண்டாம்விசை ஏறிப்போனா[illegible] றாண் மண்டபத்துக்குப் போகத்தக்கதாக இரண்டாம்விசை அவ்வழியாய் இறங்கினார். அந்தக் கற்றாண் மண்டபத்திலிருந்து வந்தபின் மூன்றாம்விசை அந்தப் படிக்கட்டில் ஏறினார். பின் கல்வாரிமலைக்குப் போகத்தக்கதாக அதின் வழியாய் கடைசியாய் இறங்கினார். இப்போது உரோமாபுரியிலிருக்கிற அப்படிக்கட்டின்மேல் அர்ச். பாப்பானவர் ஏறும்பொழுது முழங்காற்படியிட்டுத்தான் ஏறிப்போகிறார். அவருடைய மாதிரிகையைப் பின்சென்று மற்றக் கிறீஸ்துவர்களும் அப்படியே அதில் ஏறிப்போகிறார்கள். பிலாத்துஸ் அரண்மனைமுதல் கல்வாரிமலைமட்டுக்கும் ஆண்டவர் நடந்து சென்ற தூரம் துயரமுள்ளபாதையென்று சொல்லப்படும். ஏனெனில் ஆண்டவர் கற்றூணில் கட்டுண்டு அடிபட்டுச் சர்வாங்கமும் காயப்பட்டு முள்முடி சூட்டப்பட்டு மரணத்தீர்வையிடப்பட்டுச் சிலுவை [illegible]ந்துகொண்டு போனவழியிதுவாம். இதில் ஆண்டவ[illegible] நடந்துபோன தூரம் 2640 அடி தூரமாம்.



## 13-வது. கல்வாரிமலைக்கு ஆண்டவர் சிலுவை சுமந்துகொண்டு போகிறார்.



வரலாறு.

யூதர்களுக்குப் பயந்து பிலாத்துஸ் என்ற அநீதி விதித்த தீர்வையின்படியே ஆண்டவர் சிலுவை சுமந்துகொண்டு கல்வாரிமலைக்குப் போகப் புறப்பட்டார். இவ்விசேஷத்தைப்பற்றி பாரம்பரையாய் ஜெருசலேம் நகரத்தார் சொல்லிவருகிற வரலாறு என்னவென்றால், ஆண்டவருக்கு நேரிட்டதெல்லாம் அர்ச். அருளப்பர் பார்த்தபின் தேவமாதாவின் கிட்டவந்து சொன்னதாவது:

"வணக்கத்துக்குரிய மாதாவே, சிமியோன் அன்று சொன்ன தீர்க்கதரிசனம் நிறைவேறக் காலமாயிற்று. அதேதென்றால், 'உமது நேச குமாரனும்

ங்களாலும் வருமாகிய சேசுநாதனை வெகுநாளாய் அநேகர் பகைத்து விரோதித்துவந்தது தேவரீருக்குத் தெரியுமே. அந்தச் சத்துராதிகளான யூதர்கள் இன்றையத்தினத்தில் ஆண்டவரைப்பிடித்து பலவாறாகத் துன்பப்படுத்தினார்கள். தேசாதிபதிகள் முன்பாய் அவரைக் கொண்டுபோய் நிறுத்தி அவர் பேரில் அநேக குற்றங்களை அநியாயமாய்ச் சாட்டினார்கள். அவமானமாய் அவருடைய வஸ்திரங்களை உரிந்து அவரைக் கற்றூணோடே கட்டி அடித்துச் சர்வாங்கமும் காயமாக்கினார்கள். மீளவும் அவருக்கு முள்முடியைச்சூட்டி கடைசியாய்த் தேசாதிபதியானவன் இட்ட தீர்ப்பின்படியே அவரைக் கொலைசெய்யத்தக்கதாகப் பாரமான ஒரு சிலுவைக் கழுமரத்தை அவர்தோளில் சுமத்தி இரு கள்ளரோடே கள்ளராய் அவரைக் கபாலமலைக்குத் தள்ளிக்கொண்டு போகிறார்கள். நேசமுள்ள மாதாவே, அவரை உயிரோடே காணவேணுமானால் நீர் இப்போதே புறப்பட்டுத் தீவிரித்துப் போகவேணும்," என்றார்.

இந்த விசேஷங்களைக்கேட்டு, அன்புள்ள மாதாவின் இருதயம் ஆயிரம் அம்புகளால் ஊடுருவப்பட்டாற்போலே துக்கசாகரத்தில் அமிழ்ந்திப் பரிதவித்துப் பெருமூச்செறிந்து பிரலாபித்து அழுதாள். முழங்காலிலிருந்து திவ்விய பிதாவை ஆராதித்தாள். மீளவும் எழுந்து தமது திவ்விய குமாரனைக் காணப் புறப்பட்டாள். ஐயோ! கன்றைப்பறிகொடுத்தமான்போல் கதறி அழுதுகொண்டு ஜெருசலேம் பட்டணத்துத் தெருவீதி வழியாய் அவள் தீவிரித்து



நடந்துபோகிறாள். பாவிகளினிமித்தம் பலியாகப் போகிற தமது திவ்விய குமாரனைப் பார்க்கப்போகிறாள். கடைசிவிசையாய் அவரைக்கண்டு தரிசித்துக் கட்டி அணைத்து முத்தமிடப்போகிறாள்.

மனத்தியானம்.

ஆ! பிள்ளைகளைப்பெற்று வளர்த்த தாய் தந்தைகளே, தாயினேசம்நிறைந்த இந்த மாதாவின் இருதயத்தில் அப்போது எவ்வளவான துக்க துயர உணர்ச்சிகள் உண்டாயிருந்திருக்குமென்று நீங்களே, தியானித்துப்பாருங்கள்.

ஆகிலும் அவள் வழிநடந்து சென்று எதிர்கொண்டுபோய்த் தமது திவ்விய குமாரனைத் தெரிசித்தாள். ஆனால் ஐயோ! எத்தன்மையான அந்தஸ்திலே... திருமுகம் உமிழ்நீர் வேர்வை இரத்தத்தால் நிறைந்திருக்க, திருமேனி இரத்தக்கறை பிடித்திருக்க, திருச்சிரசு முள்முடி புனைந்திருக்க, சர்வாங்கமும் ஏக காயமாயிருக்க, தோளில் பாரச்சிலுவை சுமந்திருக்க, இரு கள்ளர் நடுவாய்த் தவித்துத் தள்ளாடிவிழுந்து எழுந்து அவர் நடந்துவருகிறதைப் பார்த்தாள். பார்த்த மாத்திரத்தில் ஆ! அவதரித்த தேவனே என்று அவரை ஆராதித்து வணங்கினாள். "என்னுடைய அருமைநேசமுள்ள மகனே, என் உயிருக்குயிரான குமாரனே, ஐயோ, பாதகர்கையால் இப்படி நீர் பாடுபடவும், நான் பார்த்திருக்கவும் காலமாயிற்றே, இதுவும் தேவதிருவுளம்தான். ஆகிலும், கடைசிவிசையாய் உமது திருக்கடைக்கண்களால் என்னை நோக்கியருளும் சுவாமி, என்று புலம்பி அழுதாள்.

மாதாவின் சத்தத்தைக்கேட்டு ஆண்டவர் தமது கண்களைத் துடைத்துக்கொண்டு உருக்க நேசத்தோடு அவளைப் பார்த்தார். அப்போது அவள் அனுபவித்த வியாகுல மிகுதியைத் தாங்கமுடியாமல் தவித்து அயர்ந்து வாய் பேசமாட்டாமல் மயங்கிச் சுருண்டு வேரற்றமரம்போல் கீழே விழுந்தாள். அந்நேரத்தில் கூடநின்ற அருளப்பரும், மரிமதலேனம்மாளும், அவளைத் தாங்கிப்பிடித்து ஏந்தி எடுத்து ஆறுதலான வசனங்களை உரைத்தார்கள். துயரத்துக்குரிய இந்த விசேஷம் நடந்த இடத்திலே இதற்கு ஓர் ஞாபகக்குறியாக முற்காலத்தில் கட்டப்பட்ட சிறுகோவில் ஒன்று அங்கே இடிந்து விழுந்துகிடக்கிறதைக் காணலாம்.

வியாகுலம் நிறைந்த மாதா மூர்ச்சை தெளிந்து எழுந்திருந்தபின் திவ்விய பிதாவின் சித்தத்துக்குத் தனது அன்பை முழுதும் பலியிட்டுத் தமது குமாரன் பலியாகும் இடம் மட்டும் மனத்திடனாய் அவரைப் பின்சென்று போனாள்.

### மன்றாட்டு.

வியாகுலநிறைந்த மாதாவே, என் இரட்சணியத்தின் நிமித்தம் உமது திருக்குமாரனைப் பலிகொடுத்தீர். என் நிமித்தம் தேவரீர் துக்கசாகரத்தில் அமிழ்ந்தியிருந்தீர். இவ்வளவு தயை நேசமுள்ள தாயாரான உமக்கு நான் மிகவும் நன்றியறிந்த தோத்திரம் பண்ணுகிறேன். மீளவும் என் நன்றியறிதலுக்கு அடையாளமாக உமது திருக்குமாரனுடைய பாடுகளையும்,



உமது வியாகுலங்களையும், என் சீவியகாலமெல்லாம் தியானித்துவருவேன்.

என் அன்பரான சேசுவே, உமது திருப்பாடுகளின்பேரிலும் உமது திரு மாதாவின் வியாகுலங்களின்பேரிலும், இரக்க உருக்கமுள்ள பத்தியை என்னிருதயத்தில் பதியச்செய்தருளும். நான் இவ்வுலகில் இருக்குமளவும் எனக்குவரும் துன்ப துரிதங்களை மனத்திடனாய்க் கையேற்றுக்கொண்டு நடக்க வரந்தந்தருளும் சுவாமி, ஆமென் சேசு.

திவ்விய கர்த்தருடைய திருப்பாடுகளின்பேரிலும் திரு மாதாவின் வியாகுலங்களின்பேரிலும் யாவருக்கும் பத்திவரத்தக்கதாக 1-பர. 1-பிரி. 1-திரி. சொல்லவும்.

---

## 14-வது. ஆண்டவர் சிலுவை சுமந்து போகையில் கீழே விழுந்த இடம்.

### வரலாறு.

ஆண்டவர் இப்படி நடந்துபோகையில் அனுபவித்த வேதனை நிர்ப்பந்தத்தை நன்றாய்க் கண்டுபிடிக்கத்தக்கதாக அறியவேண்டியது என்னவென்றால்: அந்தச் சிலுவையானது 15 அடி நீளமும், குறுக்கு மரம் 8 அடி நீளமும், இதற்குத் தகுந்த கனமுமுள்ளதாயிருந்தது. ஆகையால் அது மிகுந்த பாரமுள்ளதாயிருந்தது என்பதற்குச் சந்தேகமில்லை. மேலும் ஆண்டவர் இரத்தவேர்வை சிந்தி மரண அவஸ்தைப்

பட்டு மெலிந்து பலவீனப்பட்டிருந்தார். கல்தூணில் கட்டுண்டு அடிபட்டபோதும், முள்முடி சூட்டப்பட்டபோதும் திரளான இரத்தம் சிந்தி மெலிந்திருந்தார். இதற்கு முந்தின இராத்திரி குரூர சேவகர்களால் வாக்குக்கெட்டாத வேதனை நிர்ப்பந்தம் அனுபவித்திருந்தார். இதன்றியே செதுரோன் என்ற ஆற்றில் அவர் விழத்தாட்டப்பட்டபோது அவர் உட்கொண்ட கொஞ்சம் மண்டித் தண்ணீர் தவிர, இராப்போசனத்துக்குப் பின் வேறொன்றும் அவர் சாப்பிடவில்லையே; இளைப்பாறவில்லையே, கல்நெஞ்சரான சேவகர் அவரை அடிமேல் அடி அடித்துத் தள்ளிக்கொண்டு போனார்களே, கரடு முரடான பாதை வழியாய்ச் சிலுவையின் நுனி தரையில் இழுபட அதைக் கட்டாயமாய்த் தூக்கிக்கொண்டு போகப்பண்ணினார்களே, முள்முடியை அவர்கள் அசைத்து, அசைத்து அடித்து அடித்துத் தலையில் இறுக்கினார்களே; வியாகுலம் நிறைந்த தமது மாதாவை வழியில் அவர் கண்டபடியால் துக்க துயரம் மேலிட்டிருந்ததே. இந்த விசேஷங்களெல்லாம் ஒரே தினத்தில் ஒருமிக்க நேரிட்டபடியால் சிலுவையின் பாரத்தை அவர் தாங்கமாட்டாமல் அயர்ந்து மெலிந்து கீழே விழுந்தார்.

### மனத்தியானம்.

என் ஆத்துமமே! உன் அன்புள்ள இரட்சகர் தேவ நீதியென்னும் பாரசிலுவை மரத்தின் கீழே விழுந்து கிடக்கிறதைப் பார். விலையேறப்பெற்ற அவருடைய திரு இரத்தம் அவருடைய திருமேனி



யின் நாலாபக்கத்திலுமிருந்து ஓடி, அவர் விழுந்து கிடக்கும் இடமெங்கும் நனையலாயிற்றே. இப்போது பாவிகளைப்பற்றி அவர் சொல்லும் முறைப்பாடுகளைக் கேள். "பாவிகளானவர்கள் தங்கள் இடைவிடாத தோஷ துரோகங்களால் நமது சிலுவையின் பாரத்தையும் வேதனையையும் அதிகரிக்கிறார்கள்," என்கிறார்.

இப்பேர்ப்பட்ட சமயத்தில் ஆண்டவர்பேரில் இரக்கமுள்ளவர்கள் ஒருவருமில்லையே, அவரைத் தூக்கி எடுத்து, கொலைக்களமட்டும் அவர் நடந்துபோக அவருக்கு உதவி செய்தவர் ஒருவருமில்லையே, சிலுவை என்ற பேரோ மனிதருக்கு வெறுப்புக்குரிய பொருளாய் இருந்தபடியால் ஈனமென்று அஞ்சி அதை ஒருவரும் தீண்டவில்லையாம். ஆகையால் வழிப்போக்கனான சீமோன் என்பவனைச் சேவகர் கட்டாயப்படுத்திக் கூலிபேசி அவருக்கு உதவிசெய்ய அவனை உடன்படுத்தினார்கள்.

ஓ! பாக்கியவாளனான சிரேன் சீமோனே, யூதர்கள் அறியாத்தனமாய் உனக்கு வருவித்த மகிமையை நீ கண்டுணர்ந்தாயோ? அவதரித்த தேவனுக்கு நீ கூட்டாளியானாய். உலக இரட்சகருடைய சிநேகப்பலிபீடத்தைச் சுமக்க வரமடைந்தாய். இது எவ்வளவோ பாக்கியம்!

ஆ! என் ஆத்துமமே, ஆண்டவருடைய பாடுகளின் பாத்திரத்திலே நீயும் [illegible] அடையத்தக்கதாகத் தேவதிருவுளத்தால் உனக்கு நியமிக்கப்படும் துன்ப துரிதங்களை நல்மனதோடே ஏற்றுக்கொள்ளக்கட

வாய். இவ்விதமாய் ஆண்டவருடைய பாடுகளில் அவரைப் பின்சென்று நடந்தால் அவருடைய மகிமையிலும் பங்கடைவாய் என்பதற்குச் சந்தேகமில்லை.

### மன்றாட்டு.

ஆண்டவரே, இந்தச் சிலுவைப்பாரத்தின் கீழே தேவரீர் ஏன் விழுந்து நசுங்கிக்கிடக்கிறீர்? சுவாமி, உமக்கு ஆறுதல் வருவிப்பவர் ஒருவருமில்லையே, பாவியாகிய நான் உமக்கு ஆறுதல் வருவிப்பதற்குப்பதிலாய் இதுவரையில் பாவத்துக்குமேல் பாவத்தைக்கட்டிக்கொண்டு உமக்கு அதிகமான பாரத்தைச் சுமத்தினேன். ஐயோ! இதுவரையில் பாவியாய் நடந்தேன். திவ்விய இரட்சகரே! என் பாவங்களைப் பொறுத்துக்கொள்ளும். இனிமேல் பாவச்சமையங்களை விலக்கி அகற்றி என்றாலே இயன்றமட்டும் உமக்கு ஆறுதல் வருவிப்பேன். இனிமேல் உம்மைச் சிநேகித்து உமக்கு ஊழியஞ்செய்து உமது திருப்பாடுகளின் வழியிலே உண்மையோடு உம்மைப் பின்சென்றுவருவேன். எனக்குத் தயைசெய்தருளும் சுவாமி, ஆமென்சேசு.

தேவ துரோகிகள் மனந்திரும்பத்தக்கதாக 1-பர. 1-பிரி. 1-திரி, சொல்லவும்.



## 15-வது. ஜெருசலேம்பட்டணத்து புண்ணிய ஸ்திரீகள் ஆண்டவரைப்பின்சென்று அழுது புலம்பின இடம்.

---

### வரலாறு.

ஆண்டவர் தமது பாடுகளின்போது முந்த முந்த ஆறுதல் அடைந்தஇடம் இதுவே. அதெப்படியென்றால் ஆண்டவருடைய புத்திமதிகளைக்கேட்டு அவருடைய புதுமைகளைப் பார்த்திருந்தபத்தியுள்ள ஸ்திரீகள் அநேகர் ஜெருசலேம் பட்டணத்திலிருந்தார்கள். இவர்கள் நல்ல உணர்ச்சிக்குரிய இருதயமுள்ளவர்களாம். ஆகையால் கொஞ்சத்துக்குமுன் அத்தேசத்தில் மிகுந்த கீர்த்திபிரதாபம்பெற்றிருந்த இந்த ஆண்டவர் இவ்வளவு நிந்தை அவமான நிர்ப்பந்தத்தோடே வழிநடந்துபோகிறதை இவர்கள் பார்த்து மிகுந்த துக்கப்பரிதாபப்பட்டு அங்கலாய்த்து அழுது புலம்பினார்கள்.

இப்படி ஆண்டவரைக்கண்டு இவர்கள் அழுது புலம்பின இந்தச் சுகிர்த கிரிகையானது நியாயநீதிக்கடுத்ததுமாய்ப் புகழ்ச்சிக்குரியதுமாயிருக்கின்றது. ஆண்டவர் பட்டபாடுகளுக்காக அன்றி மற்றெந்தக்காரியத்துக்காகவானாலும் அவர்கள் அவ்வளவு சஸ்திப்பட்டிருக்கமாட்டார்கள். ஆகையால் அவர்கள் இருதய உணர்ச்சிகளை அறிந்த ஆண்டவர் அவர்களைத் திரும்பிப்பார்த்துத் திருவுளம்பற்றினதாவது, "ஜெரு

சலேம் ஸ்திரீகளே, நமக்காக நீங்கள் அழவேண்டாம். உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுது பிரலாபியுங்கள். ஏனெனில் பச்சைமரத்துக்கு இவ்வளவு துன்பம்நேரிட்டால் பட்டமரத்துக்கு எவ்வளவான பொல்லாங்கு நேரிடாது?" என்றார். அதாவது:—மாசற்றவர்கள் இவ்வளவு கோரமாய்த் தண்டிக்கப்படுவார்களாகில், பாவிகளுக்கு எப்பேர்ப்பட்ட ஆக்கினைதான் நேரிடாது? தேவனின் ஏககுமாரன் மாசற்றவராயிருந்தும் சிலுவைமரணத்துக்குத் தீர்வையிடப்பட்டிருக்க, அடிமைகளாயிருக்கிற பாவிகள் தங்கள் அக்கிரமங்களுக்கு ஆக்கினைப்படமாட்டார்களென்று எப்படிச் சொல்லக்கூடும்.

இவ்விடத்திலே நாம் குறித்துக்காண்பிக்கும் விசேஷம் என்னவென்றால், ஆண்டவர் தமது பாடுகளைப்பற்றி இரங்கி அழுத அந்தப் புண்ணிய ஸ்திரீகளுடைய பிரலாபக் கண்ணீர்களை அவர் புறக்கணிக்கவில்லை. ஆனால் தமது பாடுகளுக்குக் காரணமாகிய பாவங்களுக்காக அழுது பிரலாபிப்பது அவருக்கு அதிக பிரியமென்று காண்பித்தாரேயன்றி மற்றப்படியல்ல.

## மனந்தியானம்.

ஓ! உத்தமமனஸ்தாபமுள்ள இருதயத்தோடே அவரவர் தங்கள் பாவங்களுக்காகவும் புறத்தியாருடைய பாவங்களுக்காகவும் அழுது பிரலாபிக்கும் சுகிர்தம் எவ்வளவோ உத்தமமானதாம். எவ்வளவோ தெய்வீகமானதாம். ஓர் கிறீஸ்துவன் முழங்



காலிலிருந்து பாடுபட்ட சுரூபத்தைப்பார்த்துத் தன் பாவங்களுக்காக உத்தமமனஸ்தாபப்பட்டு அழுவது சம்மனசுகளுக்கும் சர்வேசுரனுக்கும் மகா மனோகரமான காட்சியாம். அர்ச். சின்னப்பர் சொல்லுவதுபோலே, "மனிதர்கள் பாவம் செய்யும்போதெல்லாம் சேசுநாதர்சுவாமியைச் சிலுவையில் அறைகிறார்கள். ஆகையால், திவ்விய மகத்துவத்துக்கு விரோதமாய் அவர்கள் தினந்தோறும் கட்டிக்கொள்ளுகிற பாவங்களுக்காக அவர்கள் சிந்துங்கண்ணீர் ஆண்டவருக்கும் மோட்சவாசிகளுக்கும் மிகுந்த சந்தோஷத்தை வருவிக்கின்றது. சௌந்தரியமுள்ளவர்கள் அணிந்துகொள்ளும் ஆபரணங்கள் அவர்களின் அழகுக்கு அழகைக் கூட்டுவதுபோலே உத்தமமனஸ்தாபக் கண்ணீர்கள் ஆத்துமத்தைச் சுத்தப்படுத்திச் சம்மனசுக்கள் சமுகத்துக்கும் சர்வேசுரனுடைய சமுகத்துக்கும் அதை அதிகமதிகமாய் அழகு சவுந்தரியமுள்ளதாகச் செய்கின்றன," என்றார்.

இன்னமும் அர்ச். பெர்நர்து என்பவர் சொல்லுகிறதாவது:—இப்பேர்ப்பட்ட மனஸ்தாபக்கண்ணீர்கள் மிகவும் விலையேறப்பெற்ற மதுர இரசமாம், தெய்வீக வாசம்அமைந்த பரிமளத்தைலமாம், தேவ திருப்பந்தியில் சம்மனசுக்களால் பரிமாறப்படும் இனிய இரசமாம். அர்ச். இலாரியார் சொல்லுகிறதாவது: இந்த மனஸ்தாபக்கண்ணீர்கள் நமக்காகத் தேவசன்னிதிமட்டும் ஸ்தானாபதிகள்போலே ஏறிச்சென்று நமது பாவங்களுக்குப் பொறுத்தலை இரந்து மன்றாடுகின்றன. ஓ! எவருக்கும் ஆச்சரியம் வருவிக்கும்

கண்ணீர்த்துளிகள் இவைகளே. ஏனென்றால் இவைகள் சிந்திக்கீழே ஓடுகையில் பரலோகமட்டும் ஏறித் தேவசமுகத்தில் பலமாய் மனுப்பேசுகின்றன. இவைகள் பூமியில்விழுந்து ஒழிந்தாலும் விலையேறப்பெற்ற பொருள்போல் பரலோக பொக்கிஷத்தில் சேர்த்துக் காப்பாற்றப்பட்டிருக்கின்றனவாம். தாவீது இராசாவானவர் அழுத கண்ணீர்கள் தேவசமுகத்தில் மௌனமாய் மனுப்பேசுகிறவிதமாயும், அவருடைய பாவப்பொறுத்தலுக்காகப் பலமாய் இரந்து மன்றாடுவதையும் அவரே பார்த்தார். ஆகையால் சர்வேசுரனைப்பார்த்து அவர் சொல்லுகிறதாவது:— "ஆண்டவரே, என்னுடைய அழுகைப் பிரலாபத்தைச் செவிகொடுத்துக்கேட்டருளும். என்னுடைய கண்ணீர்ப் பிரளயத்தைக் கிருபையாய்ப் பார்த்தருளும்," என்றார். தீர்க்கதரிசியாகிய ஜெரோமியாஸ் என்கிறவர் தமது கண்ணீர்த்துளிகளின் மன்றாட்டினாலேயே தேவகோபத்தை அமர்த்தித் தேவகிருபை இரக்கத்தைப் பெறுவித்துக் கொண்டதாகச் சொல்லியிருக்கிறார்.

ஆகையால் ஜெருசலேம் பட்டணத்தார் இது விஷயத்தில் தம்மைப்போல் நடக்கத்தக்கதாக அத்தீர்க்கதரிசியானவர் அவர்களுக்கு போதிக்கிறதாவது: "உங்கள் கண்ணிமைகள் சும்மாயிருக்கவிடாதேயுங்கள். கண்ணீர்சொரிந்து இடைவிடாமல் சர்வேசுரனைநோக்கி அழுங்கள்," என்கிறார். அர்ச். இராயப்பர் தமது ஆண்டவரை மூன்றுமுறை மறுதலித்த பிறகு தமது பாவங்களுக்காக அழுது மனஸ்தாபப்



பட்டுச் சிந்தின கண்ணீர்களைக்கொண்டுதான் அந்தப் பாவக்கறைகளை முழுதும் கழுவிச் சுத்தப்படுத்தினார்.

அர்ச். மரியமதலேனம்மாள் தன் இளமைப் பருவத்தில் செய்த அக்கிரமமான பாவங்களால் தன் ஆத்துமத்தை அசுசிப்படுத்தினது நிசமே. ஆனால் அதற்குப்பின் அவள் அழுது சிந்தின கண்ணீர் ஸ்நானத்தால்தான் தன் ஆத்துமத்தை முழுதும் கழுவிச் சுத்தப்படுத்திச் சகல பரிசுத்த கன்னியர்களிலும் உயர்ந்த அர்ச்சியசிஷ்டவளானாள்.

## மன்றாட்டு.

என் சர்வேசுரசுவாமி, மிகுந்த விலையேறப்பெற்ற இந்த உத்தம மனஸ்தாபக் கண்ணீர் வரத்தை அடியேனுக்குக் கட்டளையிட்டருளும். எனது திவ்விய இரட்சகர் சீவியகாலத்திலும், திருப்பாடுகளின்போதும் சிந்தின கண்ணீர்களைக் குறித்து அடியேனுக்கு இந்த மன்றாட்டைத் தந்தருளும் சுவாமி.

ஆண்டவரே, அர்ச். இராயப்பரைப் போலவும், மரியமதலேனம்மாளைப் போலவும், இன்னும் மனந்திரும்பின புண்ணியவாளரைப் போலவும் நான் என் பாவங்களுக்காக அழுது என் ஆத்துமத்தைச் சுத்திசெய்யக் கிருபைபுரிந்தருளும். நித்திய பிதாவே, இரக்கம் நிறைந்த தந்தையே, உமது திவ்விய குமாரனுடைய திருமுகத்தைக்குறித்து இந்த மன்றாட்டைத் தந்தருளும் சுவாமி.

உத்தமமனஸ்தாபக் கண்ணீர் வரம் கிடைக்கத்தக்கதாக 1-பர. 1-பிரி. 1-திரி. சொல்லவும்.

# 16-வது. வெரோணிக்கம்மாளின் வீடு.

## வரலாறு.

ஆண்டவர் பாடுபடும்போது அவருக்கு ஆறுதல் வருவித்த சுகிர்த கிரிகைகளில் இதுவே விசேஷித்ததாம். வெரோணிக்கம்மாள் தன்வீட்டில் அலுவலாய் இருக்கையில், திடீரென ஜனத்திரளின் பயங்கரமான கூக்குரல் சத்தத்தைக் கேட்டு ஓடிவந்து கதவைத் திறந்து பார்த்தாள். திரளான ஜனங்களும், சேவகர்களும், ஏக கூட்டமாய்க் கூடிக் கெம்பீர இரைச்சலோடே ஆண்டவரைக் கொலைக்களத்துக்குத் தள்ளிக்கொண்டு போகிறதைக் கண்டாள். ஏராளமான அந்தச் சனக்கூட்டத்துக்கு நடுவே சோதிப் பிரகாசக் கதிர்வீசும் திவ்விய இரட்சகருடைய திருமுகத்தை அவள் தெரிசித்தாள். உடனே விசுவாச வெளிச்சம் பளிச்சென்று அவள் இருதயத்தில் பிரவேசித்ததால் அவர் தேவசுதன் என்று கண்டுபிடித்தாள். இதைப்பார்த்த உடனே தேவபரவசமாய் அவள் எழுந்திருந்து விரித்து தன் முக்காட்டுச் சேலையோடு புறப்பட்டுத் தெருவீதி வழியாய் நீதி அதிபர்களுக்கும் சேவகர்களுக்கும் நடுவே உட்புகுந்து பயமின்றி நடந்துபோகிறாள். துஷ்ட சேவகரால் நேரிட்ட விக்கினம் இடையூறுகள் எல்லாம் சட்டைபண்ணாமல் நடந்து திவ்விய கர்த்தருடைய சமுகத்தில் சேருகிறாள். அவருடைய திருமுகம் முழுதும் தூசி, வேர்வை, இரத்தத்தால் அழுக்கடைந்திருப்பதைப்பார்த்து, இரங்கிப் பரிதவித்து ஆண்டவரை



ஆராதித்து வணங்குகிறாள். பூலோக பாவக்கறையென்னும் மாசுகளால் அழுக்கடைந்து மங்கி மறைபட்டிருந்த அவருடைய திருமுகத்தை மும்மடிப்பான தன் முக்காட்டுச் சேலையால் துடைக்கிறாள்.

## மனத்தியானம்.

ஓ! தயாள சற்குணமுள்ள பாக்கியவதியே, உனக்கு நிகரான ஸ்திரீகள் பூலோகத்தில் ஒருபோதும் இருந்ததில்லையாம். ஏனெனில் திவ்விய இரட்சகருடைய உயிரைக் கொல்லப் பூலோகத்தார் எல்லாரும் ஒன்றித்து முயலுகிறார்கள். பிதாவாகிய சர்வேசுரன் இத்திருச்சுதனைப் பாதகர்கள் கையில் ஒப்படைத்துவிட்டார். சம்மனசுகள் அவருக்கு யாதொரு உதவிசெய்யக்கூடாதிருக்கிறதைக்கண்டு அவர்கள் துக்கித்து அழுகிறார்கள். அப்போஸ்தலர்களும் அவரைக் காட்டிக்கொடுத்து மறுதலித்து முழுதும் அவரைக் கைவிட்டு ஓடிப்போய்விட்டார்கள். அன்புக்குரிய அவருடைய திருக் கன்னிமாதாவும், அளவற்ற துக்க சாகரத்தில் அமிழ்ந்தி இருக்கிறாள். ஜெருசலேம் பட்டணத்தார் எல்லாரும் அவரைப் பாதகன் என்று பழிமேல் பழி சுமத்தி அவரைச் சிலுவையில் அறைந்து கொல்ல வேண்டுமென்று தள்ளிக்கொண்டு போகிறார்கள். இப்பேர்ப்பட்ட சமயத்தில் நீர் மாத்திரமே உமது தேவனைத் தேவனென்று கண்டுணர்ந்தீர். அவருடைய இருதயத் துயரம் தீர இளைப்பா[illegible]ந்து மனங்குளிரப் பண்ணினீர். அவருடைய சத்துருக்கள் நடுவில் நின்று அவருக்கு ஆறுதல் வருவித்தீர். ஓ! மெய்யாகவே பூலோகத்தின் நாலா

திக்கிலும் காலாகாலத்துக்கும் மட்டற்ற மகிமைபெற்றீர் பாத்திரமானீர். மற்றொருவருக்கும் இதுவரையில் ஆண்டவர் கொடாத உச்சித வெகுமானத்தை உமக்கு இன்று அவர் கொடுத்தருளினார். இதோ பாரும், உமது முக்காட்டுச்சேலை முழுவதிலும் அவருடைய திருமுகச் சாயல் பதிந்துபோயிற்று. துக்கதுயரமான கர்த்தருடைய திருப்பாடுகளின் பரம இரகசியத்தை யாவரும் அறிய இத்திருச்சாயல் சுரூபத்தை எவர்க்கும் விரித்துக் காட்டுவீராக. அப்போஸ்தலர்களுடைய வேத உபதேசம் சென்று பரம்பாத தேசத்தார்களும் தேவசுதனுடைய திருப்பாடுகளின் வரலாறுகளை இப்படத்தின் மூலியமாய் அறிந்துகொள்வார்கள்.

நானோவென்றால், வீரத்துவமான உமது பத்திக் கிருத்தியத்தின் நிமித்தம் என் வாழ் நாளெல்லாம் உம்மை வாழ்த்தித் துதிப்பேன். பாக்கியவதியான வெரோணிக்க மாதுசிரோமணியினதும் உமது நாமதேயத்தை என் சீவியகாலத்திலும், மரண சமயத்திலும் போற்றிப் புகழ்ந்தேத்துவேன்.

## மன்றாட்டு.

திவ்விய சேசுவே; உமது திருமுகத்தைத் துடைத்து உமக்கு ஆறுதல் வருவித்த இந்தப் புண்ணியவதியின் வீரத்துவமான கிரிகையை நான் தியானிக்கையில் என் மட்டில் நான் வெட்கப்பட வேண்டியதாயிருக்கிறது.

ஏனெனில் இப்பாக்கிய மாதரசியானவள் பாதகயூதரின் பரியாச நிஷ்டூரங்களையெல்லாம் புறக்கணித்



துவிட்டுப் பத்தி இரக்கப் பரிதாபத்தோடும், மனத்திடாரிக்கத்தோடும், உமது சமுகத்தை நாடி வந்தாள். சத்துருக்கள் நடுவே நின்று உம்மைச் சந்தித்து வணங்கி உமக்குத் திருப்பணி புரிந்தாள்.

நானோ நிர்ப்பாக்கிய முகத்தாட்சணியத்தினாலும், பிறருக்கு மனத்தாங்கல் வருமென்ற அச்சத்தினாலும், எத்தனையோ விசை கோழைத்தனமாய் உம்மை நான் கைவிட்டு அகன்றுபோனேன். உமக்குப் பொருந்தாத விஷயங்களில் நான் கைகலந்து நின்று வாக்கினாலும் கிரிகையினாலும் உமது மனநோகப் பண்ணினேன், சுவாமீ.

ஓ! சபிக்கப்பட்ட முகத்தாட்சணியமே, சர்வேசுரனுக்கு நீ நிந்தையாய் முளைத்தாயே. ஏனெனில் உலோகம் மதிப்பதையே செய்விக்கிறாய். சர்வேசுரனைப்பார்க்க மனிதருக்குப் பிரியப்படத்தக்கவைகளை நாடி நடத்தி வருகிறாய். ஆண்டவரே! இனியாகிலும் மனிதர் முகத்தாட்சணியத்தை நான் சட்டைபண்ணாதிருக்கவும், தெய்வ மனப்பிரியம் என்னிருதயத்தில் ஸ்திரமாய்க் குடிகொண்டிருக்கவும் கிருபை புரிந்தருளும். மனிதருக்குப் பயப்படுவதைவிட சுவாமிக்குப் பயப்படுவதையே மேலாக நான் மதித்து நடக்கும் வரத்தை அடியேனுக்குத் தந்தருளும் சுவாமி.

இன்னமும் அன்புக்குரிய இரட்சகரே, என் மனதையும், கண்களையும் மனிதர் முகத்தாட்சணியத்தினின்று விலக்கி அவைகளை முழுதும் தேவரீர் கைவசப்படுத்தத் தக்கதாக அல்லோ அன்று ஜெருசலேம்

தெருவில் சிலுவைப் பாரத்தால் விழத் திருவுளமானீர். அப்போது தூசி வேர்வையால் அழுக்கடைந்த உமது திருமுகத்தை—முள்முடிக் காயங்களின் இரத்தத்தால் கறைபிடித்திருந்த உமது திருமுகத்தை—அடிகளால் கன்றிக்கறுத்திருந்த உமது திருமுகத்தை—நான் ஒருபோதும் மறப்பேனல்ல சுவாமீ.

மோட்ச மகிமைப்பிரதாபம் விளங்கும் நிகரற்ற உமது திருமுகத்தைப் பரலோகத்தில் நான் கண்டு தரிசிக்கத்தக்கதாக இவ்வுலகில் இருக்குமளவும் இந்தப் பிரலாபத்துக்குரிய உமது திருமுகத்தை நான் அடிக்கடி நினைப்பூட்டிக்கொள்ள வரந்தந்தருளும் சுவாமீ.

உலோக முகத்தாட்சணியத்தைப் பாராமல் சர்வேசுரனுக்கு யாவரும் பயந்து நடக்கத்தக்கதாக 1-பரி. 1-பிரி. 1-திரி. சொல்லவும்.

---

## 17-வது. ஆண்டவருடைய மரணத் தீர்ப்பு வாசிக்கப்பட்ட இடம்.

---

### வரலாறு.

ஜெருசலேம் பட்டணத்தில் மரணத்தண்டனை செய்யவேண்டிய குற்றவாளிகளைப் பட்டணத்துக்குவெளியே கொலைக்களத்துக்குக் கொண்டுபோகத்தக்கதாக ஒரு கோட்டை வாசல் நியமிக்கப்பட்டிருந்தது. நியாயாதிபதிகள் குற்றவாளிகளை ௸ கோட்டை வாசலிலே நிறுத்திக்கொண்டு மரணத் தீர்ப்



பைப் பிரசித்தமாய் வாசிப்பார்கள். வாசித்தபின் அந்த வாசல் அருகே நிற்கிற தூணிலே ௸ தீர்ப்பு நகலை ஒட்டிவைப்பார்கள். ஆகையால் அந்த வாசலானது மரணத்தீர்ப்பு வாசல் என்று பேரிடப்பட்டிருந்தது. அந்தக் கோட்டைவாசலிருந்த அடையாளம் இன்னும் அங்கே காணலாம்.

மேற்படி கோட்டை வாசலிலிருந்து கல்வாரிமலை அல்லது கபாலமலை என்று சொல்லப்பட்ட கொலைக்களத்துக்குப் போவார்கள். அந்த மலையில் கொல்லப்பட்டவர்களுடைய கபாலங்கள் திரளாய்ச் சிதறுண்டு கிடக்கிறபடியால் அதைக் கபாலமலை என்று சொல்லுவார்கள்.

ஆண்டவரை யூதர்கள் கொலைப்படுத்தத் தக்கதாக ௸ மரணத் தீர்ப்பின் வாசல் வழியாகவே அவரைத் தள்ளிக்கொண்டு போனார்கள்.

### மனத்தியானம்.

என் ஆத்துமமே! நமது திவ்விய இரட்சகர் துக்கத்துக்குரிய அந்த வாசலிலே சேர்ந்து தமது கடைசித் தீர்ப்பின் வாசகத்தைக் கேட்பதற்காக மிகுந்த தாழ்ச்சியோடே அவ்விடத்தில் முழங்காலில் இருக்கிறார். அப்போது சேவகர் அவரைப் பார்த்துச் சொல்லுகிறதாவது:—"நீ உன்னைத் தேவசுதன் என்று சொன்னபடியினாலே, நீ தேவ துரோகியாய் இருக்கிறாய். இது சகல தோஷ துரோகங்களிலும் பெரிய துரோகமென்று திருஷ்டாந்தமாயிற்று. இதற்காக இரண்டு கள்ளர் நடுவே அவமானமாய் உன்னைச் சிலுவையிலே ஆணிகளால் அறைந்து கொன்று

போட வேணுமென்று நியாயாதிபதியானவர் தீர்ப்பிட்டிருக்கிறார். அதற்காக இவ்விடத்தில் உன்னைக் கொண்டு வரலாயிற்று" என்றார்கள். அப்போது ஆண்டவருடைய திரு இருதயத்தில் உண்டான துக்க துயரத்தை யாரால் அளவிடக்கூடும். நாலாயிரம் வருஷகாலமாய் யூதர்களுக்கு வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டிருந்தவர் இவர் அல்லவா? எத்தனையோ பிதாப்பிதாக்கள் இவருக்குச் சாயலாக வந்து இவருடைய ஞாபகக் குறியாக விளங்கினார்கள். எத்தனையோ தீர்க்கதரிசிகள் இவரைப்பற்றி முன் அறிக்கை செய்திருந்தார்கள். இவர் தமது மனுஷ அவதாரத்தை வெளிப்படுத்துதற்காக எத்தனையோ ஆச்சரியங்களையும், அற்புதங்களையும், இயற்றினார். அப்படியிருக்கத் தேவதுரோகி என்றும், கள்ள ஞானியென்றும், இப்போது குற்றஞ் சுமத்தப்பட்டு தமது ஜாதி சனத்தாரால்தானே சிலுவை மரணத்தீர்ப்பு இடப்படுகிறார். இப்பேர்ப்பட்ட துக்க துயர வரலாறுகள் சகிக்கத்தகுமோ? பொறுக்கத்தகுமோ? ஆகிலும் திவ்விய செம்மறிப்புருவையானவர் இந்த அநியாயமான மரணத் தீர்ப்பை முறைப்படாமல் கேட்டு, அதற்கு உட்படுகிறார். நித்திய பிதாவின் நீதிக்கு உத்தரிப்பதற்காகவும் தமது மரணத்தால் மனுஷரை ஈடேற்றுவதற்காகவும் உடன்படுகிறார்.

மன்றாட்டு.

எனது திவ்விய இரட்சகரே! உமது அத்தியந்த நேசப்பெருக்கத்தைப்பார்த்து நான் மிகவும் நன்றியறிந்து உமக்கு ஆராதனை செய்கிறேன். இந்த நன்றி



யறிதலுக்கு அடையாளமாக நான்செய்யும் பிரதிக்கினையென்னவென்றால், தேவரீருடைய திவ்விய பராமரிப்பால் எனக்குவரும் கண்டிப்பான கட்டளைக்கெல்லாம் மனச்சந்தோஷமாய் உடன்படுவேன். எனக்கு எவ்விதமான துன்ப துயரத்தைத் தேவரீர் கட்டளையிட்டாலும் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டு உம்மை வாழ்த்தி ஸ்துதிப்பேன், சுவாமீ.

நீதியினிமித்தம் துன்பப்படும் மாசற்றவர்களுக்காக 1-பர. 1-பிரி. 1-திரி. சொல்லவும்.

---

## விபரங்கள்.

### ஆண்டவர் சிலுவை சுமந்துகொண்டுபோன போது நடந்து சென்ற தூரம்.

பிலாத்து அரண்மனைமுதல் இதோ மனிதனென்று காட்டப்பட்ட சாலைவரையிலும் 140 அடி தூரமாம். இதோ மனிதனென்று காட்டப்பட்ட சாலைமுதல் தேவமாதா எதிர்கொண்டுவந்து மயங்கிவிழுந்த இடமட்டுக்கும் 200 அடி தூரமாம்.

தேவமாதா மயங்கிவிழுந்த இடமுதல் ஆண்டவர் சிலுவைப்பாரத்தால் கீழேவிழுந்ததும் சீமோன் உதவி செய்ததுமான குறுக்குப்பாதைவரையில் 80 அடி தூரமாம்.

ஷை குறுக்குப்பாதைமுதல் ஜெருசலேம்பட்டணத்துப் பத்தியுள்ள ஸ்திரீகள் ஆண்டவரைக்கண்டு அழுத இடமட்டுக்கும் 20 அடி தூரமாம்.

ஷை பத்தியுள்ள ஸ்திரீகள் அழுத இடமுதல் வெரோணிக்கம்மாள் வீடுமட்டும் 340 அடி தூரமாம்.

வெரோணிக்கம்மாள் வீடுமுதல் ஜெருசலேம் பட்டணத்துக்கு வெளிப்போக்கான வாசலுமாய் மரணத்தீர்ப்பு வாசிக்கப்பட்ட ஸ்தலமுமான வாசல்வரையில் 120 அடி தூரமாம்.

மரணத்தீர்ப்பு வாசிக்கப்பட்ட வாசல்முதல் கல்வாரிமலை அடிவாரம்வரையில் 400 அடி தூரமாம்.

கல்வாரிமலை அடிவாரமுதல் ஆண்டவர் சிலுவையில் அறையப்பட்ட மலைஉச்சிவரையில் ஏறக்குறைய 140 அடி தூரமாம்.

ஆகமொத்தம் 1440 அடி தூரமாம் என்றறிக.



## 18-வது. கல்வாரிமலை—இரண்டு கள்ளர் நடுவாக ஆண்டவர் சிலுவையில் அறையுண்டு மரணமடைந்த இடம்.



### வரலாறு.

ஜெருசலேம் பட்டணத்துக்கு வெளியே கற்பாறையில் அமைந்த ஒரு குன்று உண்டு. அவ்விடத்தில்

பெரிய குற்றவாளிகளையும் கொலைபாதகர்களையும் மரணாக்கினை செய்வார்கள். அதற்குப்பெயர் கல்வாரிமலை அல்லது கபாலமலையென்றும் கொலைக்களமாம். இப்போது அதைச்சுற்றி வீடுகள் கட்டப்பட்டிருக்கிறபடியால் அது ஊருக்குநடுவே இருக்கிறது. அத்தமலை உள்ளடங்கியிருக்கத்தக்க ஒரு கோவிலும் கட்டப்பட்டிருக்கிறது. அந்தக்கோவில் 24 அடிச் சதுரமுள்ளது. அதில் ஏறிப்போகிறதற்கு 19 படிகளுண்டு. அப்படிகள் நம்து வீடுகளிலுள்ள சாதாரணமான படிகளுக்குச் சற்று அதிக உயரமானவையாம். ஆண்டவர் சிலுவையில் அறையப்பட்டிருந்த இடமும் சிலுவை நாட்டப்பட்டிருந்த குழியும் இன்னும் அங்கே காணலாம். தேவமாதாவும், அருளப்பரும், மரியமதலேனம்மாள்முதலிய மற்றும் பத்தியுள்ள ஸ்திரீகளும் கூடியிருந்து திருப்பாடுகளின் வரலாறுகளைத் தியானித்து அழுதுகொண்டிருந்தஇடம் அங்கே குறிக்கப்பட்டிருக்கிறதைக் காணலாம். ஆண்டவர் சிலுவை நாட்டப்பட்டிருந்த இடத்துக்கு வலதுபக்கத்தில் $4\frac{1}{2}$ அடி தூரத்திலே நல்ல கள்ளனுடைய சிலுவை நாட்டப்பட்டிருந்தது. அதற்கு இடதுபுறத்திலே $6\frac{1}{2}$ அடி தூரத்திலே பொல்லாத கள்ளனுடைய சிலுவை நாட்டப்பட்டிருந்தது. அந்த இரண்டு சிலுவைகள் நாட்டப்பட்டிருந்த குழிகள் இன்னும் அங்கே இருக்கின்றன. ஆண்டவர் மரணமடைந்தபோது சம்பவித்த பூமியின் நடுக்கத்தால் கல்வாரிமலைமேல் உண்டான ஆச்சரியமான பிளப்பு இன்னும் தெரிகிறது. அந்தப்பிளப்பு எவ்



விடத்தில் உண்டாயிற்றென்றால், பொல்லாத கள்ளனுடைய சிலுவையிருந்த இடத்துக்கு ஒரு அடிக்கு இப்பால் அந்தப் பிளப்பு உண்டாகி ஆண்டவருடைய சிலுவைக் குழியின்று பொல்லாத கள்ளனுடைய சிலுவைக் குழியை அலாதியாய்ப் பிரித்துவிட்டதாம். இது எல்லாருக்கும் ஆச்சரியம் வருவிக்கத்தக்க விசேஷமாம்.

அங்கேயுள்ள கோவிலானது உலோகத்தின் எத்திசையிலுமுள்ள சகல ஆலயங்களிலும் மிகவும் அர்ச்சிக்கப்பட்ட ஸ்தலமென்பதற்குச் சந்தேகமில்லை. ஏனெனில் நித்திய பிதாவின் திருச்சுதனை சேசுநாதர்சுவாமி சிலுவையில் மரித்து மனுக்குலத்தாருடைய இரட்சணிய அலுவலை நிறைவேற்றின இடமிதுவாம். பத்தியுள்ள ஆத்துமாக்கள் தங்கள் நினைவுசிந்தனையால் இவ்விடத்தில் அடிக்கடி பிரவேசித்து ஆண்டவருடைய திருப்பாடுகளை அடிக்கடி தியானிப்பார்கள்.

கல்வாரிமலை அடிவாரத்திலே ஆண்டவர் சேர்ந்தபோது மிகவும் களைத்துத் தவித்து அயர்ந்து மெலிந்திருந்தார். அப்போது அவர் உயர ஏறிப்போகத் திடாரிக்கம் வருவிப்பதற்கு மீரைக்கலந்த கசப்பான இரசத்தை அவருக்குக் குடிக்கக் கொடுத்தார்கள். ஆண்டவர் அதை ஏற்றுக்கொள்ளவுமில்லை, சிலுவையின் பாரத்தை சற்றும் இறக்கிவைக்க சம்மதிக்கவுமில்லை? இப்படியாய்க் கரடுமுரடான அந்தக் கற்பாறைக் குன்றின்மேல் அவர் ஏறிப்போனபோது எவ்வளவான வருத்தம் அநுபவித்திருப்பார். எந்த

னையோவிசை கல்லில் அவர் இடறி விழவேண்டியிருந்தது. தோளிலிருந்த சிலுவையானது முள்முடியில்மோதி வாக்குக்கெட்டாத வேதனையை வருவித்தது.

இப்படியாய் அவர் மலைஉச்சியில் சேர்ந்தபோது அவரைச் சிலுவையில் அறையவேண்டிய இடத்திலே ஷை சிலுவையை இறக்கி வைத்தார்கள். சில சேவகர்கள் ஆணி கயிறு சுத்தியல்முதலிய வேதனை எத்தனங்களை முஸ்திப்புப் பண்ணினார்கள். வேறு சிலர் சிலுவைப்பட்டயம் தைக்கிறதற்குச் சிலுவையின் உச்சியில் துவாரம் இட்டார்கள். இன்னும் சிலர் சிலுவை நாட்டவேண்டிய குழி தோண்டினார்கள்.

இவ்விடத்திலே மூன்றாம்விசை அவருடைய வஸ்திரங்களை உரிந்தார்கள். அப்போது காயங்களோடு ஒட்டியிருந்த வஸ்திரங்களை அவர்கள் பிய்த்தபடியினாலே முன் அவர் அனுபவித்த நோக்காடுகளையெல்லாம் திரும்பவும் அனுபவிக்கவேண்டியதாயிற்று. இதனால் ஆண்டவருடைய திருச்சரீரம் எப்பக்கத்திலும் கிழிந்துபோக இரத்தம் திரளாய் ஓடிற்று. ஆகிலும் இரக்கமற்ற கொலைக்காரர் அவரைப்பார்த்துச் சொல்லுகிறதாவது:— "அற்பப் பிராணியான மனிதனே, இப்போது உன் வாழ்நாள் முடியக்காலமாயிற்று. நிர்ப்பாக்கியமான உன் உயிர் உன் உடலை விட்டுப்பிரிய நேரமாயிற்று. துக்க வேதனைக்குரிய சிலுவைக் கட்டிலிலே நீ படுத்துத் தூங்கி உயிர்விட்டுப் போகிறாய்," என்றார்கள். அந்நேரத்தில் சில துஷ்ட சேவகர்கள் ஆண்டவருடைய தலைமயிரையும் தாடி-



யையும் பிடித்து இழுத்து சிலுவையின்மேல் விழத்தாட்டி அவரைச்சிலுவையில் அறையத் தொடங்கினார்கள். அது எப்படியென்றால், ஒருவன் முந்தமுந்த அவருடைய வலதுகையைப்பிடித்து இழுத்து அதற்கென்று சிலுவையில் துளைக்கப்பட்டிருந்த துவாரத்தின்மேல்வைத்துப் பெரிய ஆணியால் சேர்த்து சுத்தியல்கொண்டு அடித்து இறுக்குகிறான். இப்படி அடித்த அடிகளெல்லாம் அவருடைய கையில் விழுந்ததினால் அவருடைய திருச்சதை, தோல், எலும்பு, நரம்புகளுக்கு எவ்வளவோ வேதனை உண்டாயிற்றென்றும், எவ்வளவோ இரத்தம் பீறிட்டு ஓடிற்றென்றும் யோசித்துப்பார். இந்தச் சுத்தியலடிகள் அத்தனையும் தேவமாதாவுக்கு அத்தனை வாள்களாய் அவள் இருதயத்தைக் குத்தி ஊடுருவிற்று என்பதற்குச் சந்தேகமில்லை.

இதன்பின் இடதுகையை அறைவதற்காக இடப்பட்ட துவாரத்துக்குக் கை எட்டாதபடியால் அதைப் பலமாய்ப் பிடித்து இழுத்து ஷை துவாரத்தின்மேல் சேர்த்துப் பெரிய ஆணியைவைத்துச் சுத்தியல்கொண்டு அடித்து இறுக்குகிறார்கள். ஆக இரண்டு கைக்காயங்களிலிருந்தும் எவ்வளவோ இரத்தம் புறப்பட்டு ஓடிற்று.

மீளவும் அவர் கால்களில் ஆணி அறையவந்தபோது அவைகளுக்காகச் செய்யப்பட்டிருந்த துவாரங்கள்வரையிலே கால்களை நிஷ்டூரமாய்ப்பிடித்து இழுத்து நீட்டினார்கள். ஒவ்வொரு காலிலும் பெரிய

ஆணியைவைத்துச் சிலுவையோடேசேர்த்து அறைந்தார்கள்.

ஐயோ! மிருதுவான அவர் மேனியிலே காயத்துக்குமேல் காயமும் வேதனைக்குமேல் வேதனையும் உண்டாகிறதே! இரத்தப்பிரவாகம் ஓடுகிறதே! ஆ! வியாகுலமாதாவே, இதோ! பிரலாபத்துக்குரிய இந்தக் காட்சியை நீர் கண்ணுற்றகாலை உமது இருதயம் எப்படிச் சகித்ததோ! பெற்றமனம் எப்படிப் பதைத்ததோ! தாய் நேசமுள்ள உமது குலை எப்படித் துடித்ததோ! பொறுத்ததோ! அறியேன்.

இதற்குப்பின் சிலுவையை எடுத்துத்தூக்கி நாட்டும்படிக்குச் சேவகர்கள் முரட்டுத்தனமாய் அதை இழுத்துக்கொண்டுபோய் அதற்குக் குறிக்கப்பட்ட குழியிலே இடீரென்று தள்ளினார்கள். அப்போது ஆண்டவருடைய திருமேனி ஆடிக்குலுங்கினதினால் அவருடைய காயங்களிலே மிகுந்த நோவும், வலியும், இசிவும், எரிவும் உண்டாயிற்று. இதைப்பற்றி அர்ச். மெத்தில்த்தம்மாளுக்கு ஆண்டவர் திருவுளம்பற்றினதாவது:— "நமது பாடுகளிலெல்லாம் நாம் அனுபவித்த வேதனையைப்பார்க்க இச்சமயத்தில் அதிகமான வேதனை அனுபவித்தோம்," என்றார்.

### மனத்தியானம்.

என் ஆத்துமமே, இவ்விடத்திலே சற்றுநின்று தியானித்து, திருச்சிலுவைமுன்பாகச் சாஷ்டாங்கமாக விழுந்து, மரணமடையும் திவ்விய இரட்சகருடைய பாதங்களைக் கட்டி அணைத்து அழுது கண்ணீர்சிந்து



வாயாக. அவருடைய காயங்களிலிருந்து ஓடும் இரத்தத்தோடுகூட உன் இருகண்களின் கண்ணீரும் பிரளயமாய் ஓடக்கடவது. இதுவரையில் அவரை நீ புறக்கணித்து நடந்ததற்காக மனஸ்தாபப்பட்டு உன் பாவங்களால் அவருக்கு வருவித்த கஸ்தி மனத்தாங்கலினிமித்தம் துக்கப்பட்டு அழுது அவரைப்பார்த்து நீ சொல்லத்தக்கதாவது:—

### மன்றாட்டு.

ஆராதனைக்குரிய சேசுவே! சர்வவல்லபமுள்ள உமது திருக்கால்கரங்களைச் சிலுவையோடு தைத்திருக்கினது இருப்பாணிகளல்ல, என் பாவஅக்கிரமங்கள்தான் என்று கண்டுணருகிறேன். ஆகையால் உமது திருத்தலை முள்முடிக்கும் உமது கைகால் ஆணிகளுக்கும் என் பாவங்களல்லோ காரணம். இந்தச் சிலுவைமரத்தில் உம்மை அறைந்துகொன்றதற்கு என் பாவங்களே காரணம். ஆ! நன்மைத்தனமுள்ள சர்வேசுரா, என் அன்புக்குரிய சிலுவைச்சிம்மாசனனே, பாவியாகிய என்பேரில் இரக்கமாயிருந்து என் பாவங்களைப் பொறுத்துக்கொள்ளும். மனஸ்தாபப்படும் இருதயம் உமக்குப் பிரியமானதென்று காண்பித்தருளும். உமது திரு இரத்தத்தாரையிலிருந்து ஓடிவிழுகிற இரத்தத்தைப்பார்த்து— திருமுள்முடியின் காயத்தால் உமது திருச்சிரசிலிருந்து ஓடிவிழும் இரத்தத்தைப்பார்த்து— ஆணிகளின் காயத்தால் உமது திருக்கைகால்களினின்று ஓடிவிழும் இரத்தத்தைப் பார்த்து, என் சகல பாவங்களையும் பொறுத்துக்கொள்ளும். உமது திவ்விய இஷ்டப்

பிரசாதத்தை அடியேனுக்குக் கட்டளையிட்டருளும். சுவாமி, எனக்குப் பொறுதல் கொடுக்கச் சித்தமாயிருக்கிறீர் என்பதற்கு அடையாளமாகவே சிரத்தை சாய்த்து மரிக்கத் தேவரீர் திருவுளமானீரென்று உணருகிறேன். இந்தத் திரு அடையாளத்தைக் கொண்டு நான் தேற்றரவு அடைந்து உத்தமமனஸ்தாபப்பட்டு இனி ஒருபோதும் உமக்குத் துரோகஞ் செய்வதில்லையென்று கெட்டியான பிரதிக்கினை செய்கிறேன். ஆகையால் ஆராதனைக்குரிய சேசுவே, என் நன்மனப் பிரதிக்கினையைத் தயவாய்க் கையேற்றுக்கொள்ளும். சிலுவைச் சிம்மாசனத்தினின்று அடியேனை ஆசீர்வதித்தருளும். உமது திருச்சித்தத்துக்கு நான் இசைந்து நடக்க எனக்குக் கிருபை புரிந்தருளும் சுவாமி.

பாவத்தையும் பாவச்சமையங்களையும் யாவரும் விலக்கி நடக்கத்தக்கதாக 1-பர. 1-பிரி. 1-திரி. சொல்லவும்.

---

## 19-வது. திருக்கல்லறை—ஆண்டவருடைய திருச்சரீரம் அடக்கம் பண்ணப்பட்ட இடம்.

---

### வரலாறு.

ஜோசேப் அரிமத்தியா என்பவருக்குக் கல்வாரிமலைச்சார்பிலே ஒரு தோட்டம் இருந்தது. இவர் அந்தத் தோட்டத்தின் கற்பாறையிலே தமக்காக ஒரு



கல்லறை வெட்டிக் கட்டிவைத்திருந்தார். அதுவரையில் ஒருத்தரும் அதில் அடக்கப்படவில்லை. திவ்விய உபாத்தியாயராகிய சேசுநாதர்பேரில் இந்த அரிமத்தியா என்பவர் வைத்திருந்த நேசப் பற்றுதலுக்கு அத்தாட்சியாக அக்கல்லறையை அவருக்குக் கொடுத்தார். அந்தக் கல்லறையானது 7 அடிச் சதுரமும் 8 அடி உயரமுமுள்ள ஒரு சிறு அறைக்குச் சமானம். பீடத்தைப்போல் ஒரு நீண்டகல் அதற்குள் கொத்தப்பட்டிருந்தது. ஆண்டவருடைய திருச்சரீரம் இந்தக் கல்லின்மேல் வைத்து அடக்கஞ் செய்யப்பட்டது. அந்தக் கல்லறையினுடைய வாசல் கீழ்ப்பக்கமாய் இருந்தபடியால் அதற்குள் போகிறதற்கு மிகவும் குனிந்துகொண்டு உள்ளே பிரவேசிக்கவேண்டியதாம். பிற்காலத்தில் மலையினின்று அந்தக் கல்லறையைத் தனியாகவெட்டிப் பிரித்து அதைச்சுற்றி ஒரு கோவில் கட்டினார்கள். மலைச்சாரலை வாட்டமாய்வெட்டி மிகுதியான கல்லையெடுத்து அந்தக் கல்லறையைச் சுத்தப்படுத்தியிருக்கிறார்கள். ஆகையால் கொத்துவேலைப்பாட்டினால் செய்யப்பட்ட ஒரு கோவில்போலக் கல்லறை விளங்குகிறது. சிறந்ததோர் பெட்டகத்துக்குச் சமானமான இக்கோவிலில் ஆண்டவருடைய திருச்சரீரம் பூச்சியத்தோடே காப்பாற்றப்பட்டிருந்தது.

நவமணியிழைத்த 43 விளக்குகள் இராவும் பகலும் அத்திருஸ்தலத்தில் இப்போது எரிந்துகொண்டிருக்கிறது. ஷை. விளக்கெரிவதால் உண்டாகிய கா

கையிலிருந்தும் அதற்குள் மனிதர் நெடுநேரம் தங்கியிருப்பது வெகு வருத்தமாயிருக்கிறது.

### மனத்தியானம்.

பத்தியுள்ள ஆத்துமாக்களே, கல்வாரிமலையின் உச்சியிலே உங்கள் நினைவு சிந்தனையால் நின்று அங்கு நடக்கும் விசேஷங்களைப்பற்றும் பற்றுய்த்தியானித்துப்பாருங்கள். ஆண்டவர் தமது பிதாவின் கையிலே தமது ஆத்துமத்தை ஒப்புக்கொடுத்து மரித்தவுடனே ஜோசேப் அரிமத்தியாவென்ற சங்கத்தாரானவர் பிலாத்துவின் அண்டைக்குத் தைரியமாய்ப் போய்க் கர்த்தருடைய திருச்சரீரத்தைத் தனக்குக் கொடுக்க வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்து, தனக்காகக் கட்டப்பட்டிருந்த கல்லறைக்குள் அத்திருமேனியைவைத்து நல்லடக்கஞ்செய்ய உத்தாரம் கேட்டார். அவ்வுத்தாரவைப்பெற்றபின் அருளப்பனையும், நீக்கோதேமுஸ் என்பவரையும் கூட்டிக்கொண்டுவந்து ஆண்டவருடைய திருச்சரீரத்தைச் சிலுவையினின்று இறக்கினார்கள். அப்போது சிலுவையினடியில் நின்ற வியாகுலமாதா கர்த்தருடைய திருச்சரீரத்தை மிகுந்த ஆசை நேச ஆவலோடேயெடுத்துக் கரங்களில் வாங்கினமாத்திரத்தில் அவருடைய திருமேனிமுழுதும் ஏக காயமாயிருப்பதைப் பார்த்து ஏங்கிப் பரிதவிக்கிறாள். பெற்றமனம் பதைக்கப் பெருமூச்செறிந்து பிரலாபிக்கிறாள். ஐயோ! ஆயிரம் அம்புகள் அப்போது அவளிருதயத்தில் ஒருமிக்கப் பாய்ந்தாற்போலாயிற்று. பின்னும் திருமேனியை மடிமேல் வளர்த்திக்கொண்டு கட்டியணைத்துத்



திருக்காயங்களை முத்தமிட்டு உரைத்த துயர வசனங்களைக் கேளுங்கள்:— "ஆ! என் நேசமகனே, என் கண்மணியே, என் அன்பே, என்னுருயிரே, தேனே, தெள்ளமிர்தமே, தேவாதிதேவனே, ஐயையோ உம்மை இப்படி மானபங்கப்படுத்தி வாதித்ததார்? ஐயோ! உமது திருச்சரீரமெல்லாம் ஏக காயமாய் கன்றிக் கறுத்துப்போச்சுதே, ஆ! நான் அமுதூட்டி வளர்த்த தெய்வீக வடிவலங்காரம்தங்கிய உமது திருமேனி— சம்மனசுக்களையும் பரவசமாக்கும் அழகிய உமது திருமேனி—மெல்லிய புஷ்பத்திலும் மிருதுவான உமது திருமேனி—இதுவோ? இதோ, உமது திருமுகம் முள்முடியின் காயங்களால் மாறுபட்டுப் போயிற்றே, திருவிழிகளும் மங்கிப் பஞ்சடைந்துபோயிற்றே, சுவாமி, காரிரும்பிருணியால் உமது திருக்கரங்கள் தைத்து நொந்து காயப்படுவானேன்? அன்று ஆறுகுடந்தண்ணீரை அமிர்த இரசமாக ஆசீர்வதித்ததற்கோ? ஐயாயிரம்பேர்க்குப் பசியையாற்ற ஐந்தப்பம் பெருகப்பண்ணினதற்கோ? குருடர் செவிடர்களைக் குணப்படுத்தினதற்கோ? குஷ்டரோகிகளைச் சொஸ்தப்படுத்தினதற்கோ? மரித்தோரை உயிர்ப்பித்ததற்கோ? ஐயோ! என்னென்று சொல்வேன்? சுவாமி. அருள்வேதம்போதிக்க அன்பாய் நடந்துசென்ற உமது திருப்பாதகமலம்—பாவிகளை இரட்சிக்கத்தேடித்திரிந்த உமது திருப்பாதகமலம்—கடல் நீர்மேல் கால்நனையாமல் அற்புதமாய்நடந்த உமது திருப்பாதகமலம்—ஆணிகளால் அறையுண்டு காயப்படுவானேன்? பேரின்ப ஞானப்பிரசங்கம்

உலோக்கும் உமது திருவாய் மலர்தழ்கள்—காற்றையும் புசலையும் அமர்த்தி அடங்கச்செய்யும் உமது திருவாய் மலர்தழ்கள்—எவ்வித அற்புதங்களையும் இயற்றவல்லவைகளாகுமே உமது திருவாய் மலர்தழ்கள்—இப்படிவாடி வதங்கிக் காய்ந்துலர்ந்து போயிற்றே? ஆவிபிரிந்து மூச்சடங்கிப்போயிற்றே! சுவாமீ, ஓர் மொழியால் உலகனைத்தும் உண்டாக்கிய தேவன் நீரல்லவோ? சர்வசிருஷ்டிகளுக்கும் அமுதூட்டி வளர்க்கும் தேவன் நீரல்லவோ? அன்றுமது திருப்பிரசைகட்குச் செங்கடலைப்பிளந்து வழிவிடுவித்த தேவன் நீரல்லவோ? யோர்தான் நதி நீரோட்டத்தை நிறுத்திப்பிரித்து வழிவிடுவித்த தேவன் நீரல்லவோ? இவ்வளவான நிஷ்டூரவேதனை நிர்ப்பந்தப் பாடுகளுக்குத் தேவரீர் உள்ளானதேன்? என்னுடன் குலத்தாரான மனுஷசந்ததியை மீட்கவே வலிய சிநேகபலியாய்மரித்தீரென்று உணருகிறேன். இதற்காகவே அற்புதமாய் என்னுதரத்தில் அவதரிக்கத் திருவுளமானீரென்று அறிகிறேன். ஆகிலும் நன்றிகெட்ட மனிதர் இவ்வளவு சிநேகப்பெருக்க கருணியான உமது இருதயத்தையும் இப்படிக் குத்தித்திறந்து காயப்படுத்தினார்களே! சுவாமீ, அவர்களுக்குப் பொறுத்தல் கொடுத்தருளும். அறியாமல் செய்தார்கள், இன்னம் அறியாமல் செய்கிறார்கள், அவர்கள்பேரில் இரக்கமாயிரும்சுவாமி, இரக்கமாயிரும்," என்று வசனித்தாள்.

அந்நேரத்தில் மரியமதலேனம்மாளும் வியாகுலமாதாவின் அருகேயிருந்து, துக்க துயரப்பட்டு வாய்



விட்டழுது, "அன்புள்ள சுவாமீ, என்னிருதய உருக்கமான மனஸ்தாபத்தைப் பார்த்திரங்கின சுவாமீ, என் அக்கிரம தோஷ துரோகங்களையெல்லாம் ஒரு நொடியில் பொறுத்துக்கொண்டு எனக்குத் தயைபாராட்டின சுவாமீ, என் மித்திரம் தேவரீர் இவ்வளவாய் [illegible]பட்டிருக்க, உம்மைவிட்டு நான் இனி ஒரு [illegible]தும் பிரிந்திருக்கமாட்டேன். உமது திருச்சிலுவையடியிலேயே ஜீவித்துச் சகல துன்ப துரிதங்களையும் உமக்காக அனுபவித்து உமது திருப்பாதத்திலேயே மரிப்பேன்," என்றுசொல்லி அழுது புலம்பிக் கண்ணீர் சிந்தினாள்.

இதற்குப்பின் ஆண்டவருடைய திருச்சரீரத்தைக் குளிப்பாட்டிப் பரிமளவர்க்கங்கள்பூசி சிறந்தமென்று பரிவட்டங்களாலேமூடிக் கல்லறையில்வைத்து நல்லடக்கம் பண்ணினார்கள்.

என் ஆத்துமமே, ஆண்டவருடைய பாடுகள் மரணத்துக்குக் காரணமான உன் பாவங்களுக்காக நீ அழுது பிரலாபித்து பொறுத்தல் அடையவேண்டியது. இதற்காக இத்திருக் கல்லறையை உன் வாசஸ்தலமாக ஏற்படுத்திக்கொள். இதிலே அடக்கவொடுக்க அந்தரங்க ஜீவியமாகவும், உலோக இன்பசுகங்களுக்கு மரித்தவனாகவும், செபதப ஒறுத்தல் உபவாசமாய் நீ ஜீவித்து மரிக்கவேண்டியது. இப்படியாய் ஆண்டவருடைய திருப்பாதத்தில் எந்நாளும் ஜீவித்து நல்ல மரணத்துக்கு ஆயத்தம் பண்ணக்கடவாய்.

### மன்றாட்டு.

சிநேகப்பலியான செம்மறிப்புருவையே! திவ்விய சேசுவே, என் இரட்சணியத்தின் நிமித்தம் தேவரீர் இவ்வளவு பாடுகள்பட்டு மரிக்கத் திருவுளமானீரே, உமக்கே ஸ்தோத்திரம். உமக்கு என் நன்றியறிதலைக் காட்டத்தக்கதாக உமது திவ்விய வேதப்பிரமாணத்துக்கு ஒத்தவிதமாய் நான் சீவித்து மரிக்க எனக்கு மனத்திடனைத் தந்தருளும் சுவாமி.

தயை நேசமுள்ள கன்னிமாதாவே, சகல தாய்மார்களிலும் வியாகுலம் நிறைந்த தாய் நீரே, உமக்கு ஆறுதலாயிருந்த உமது ஏக குமாரன் என் நிமித்தம் மரித்ததினால் தேவரீருடைய வியாகுலப் பெருக்கத்துக்குக் காரணமாயிற்று.

துக்கசாகரத்தில் அமிழ்ந்தின மாதாவே, "எனக்காக உமது திருக்குமாரனைச் சாகக்கொடுத்ததற்காக நான் உமக்கு மிகவும் நன்றியறிந்திருக்கிறேன். என்னால் இயன்றமட்டும் தபசுக்குரிய சீவியமாய் நடந்து உமக்கு ஆறுதல் வருவிக்க ஆசையாயிருக்கிறேன். உமக்குப் பொருந்தாத எவ்வித துர்க்குணங்களையும் வெறுத்துவிடுகிறேன். திவ்விய கர்த்தருடைய சிநேகமும், அவருடைய இஷ்டப்பிரசாதமும் என் இருதயத்தில் எப்போதும் குடிகொண்டிருக்கச் செய்தருளும் தாயே, ஆமென் சேசு.

பிரபஞ்ச நன்மைகளின் ஆசாபாசக் கட்டுக்களையெல்லாம் நமது இருதயத்திலிருந்து அகலத்தக்கதாக, 1-பர. 1-பிரி. 1-திரி. சொல்லவும்.

---



## 20-வது. ஆண்டவர் உயிர்த்தெழுந்து மோட்சத்துக்கு ஆரோகணமாகிறார்.

### வரலாறு.

வேதப்பிரமாண வாக்கியத்தின்படியே ஆண்டவர் மரித்தடக்கப்பட்ட மூன்றாம் நாள் ஒட்டோலகராய் உயிர்த்தெழுந்தருளினார். அது எப்படியென்றால், அவருடைய திருச்சிரசிலே நட்சத்திர கிரணங்களைப் பழிக்கும் சோதிக்கிரீடம் விளங்க, அவருடைய திருமுகம் வடிவலங்காரச் சுடரொளிபோல் துலங்க, அவருடைய ஐந்துகாய வடுக்கள் ஐந்து சூரியர்கள் போலிலங்க, அவருடைய திருமேனி முழுதும் அட்சயம், சூட்சம், இலகு, பிரகாசம் என்கிற நாலு வரங்கள் அமைந்து உன்னத சுப சௌந்தரிய சோதிப் பிரகாசம் வீச உயிர்த்தெழுந்தருளினார். இந்தக் காட்சி எத்தன்மையாய் இருந்ததென்றால், சந்திர சூரிய நட்சத்திர வான சோதிகள் யாவும் தாங்கள் உண்டாக்கப்பட்ட கால்முதல் தந்த பிரகாசக் கிரணங்களெல்லாம் கர்த்தருடைய திருமேனியின் பிரகாசத்திற்குமுன் எவ்வளவும் நிகரற்றதென்றே சொல்லவேண்டியிருக்கும். இவ்விதமாய் அவர் உயிர்த்தெழுந்தபின், தமது திரு மாதாவுக்கும், சீஷர்களுக்கும் காட்சிகொடுத்து, நாற்பது நாள்மட்டும் அவர்களோடே சஞ்சரித்திருந்தார். நாற்பதாம் நாள் மிகுந்த மகிமைப்பிரதாபத்தோடே பரலோகத்துக்கு ஆரோகணமானார். இது எப்படியென்றால், ஜெருச

லேம் பட்டணத்துக்குக் கிழக்கே 2000 அடி தூரத்திலே ஒலிவேத்து என்ற ஒரு மலை உண்டு. அந்த மலைக்கும் பட்டணத்துக்கும் நடுவே ஜோர்ச்வாரே என்ற கணவாய் இருக்கிறது. அந்த ஒலிவேத்து மலைமேலே மூன்று சிகரங்கள் உண்டு. அந்தச் சிகரங்களில் நடுவேயுள்ளது மற்ற இரண்டையும் விடச் சற்றதிக உயரமுள்ளதாம். அது அந்த மலை அடிவாரத்திலிருந்து 1200 அடி உயரமாம். இந்தச் சிகரத்தில் ஆண்டவர் தங்கி நின்று தமது இடது கால் அடித்தடம் அதில் பதிந்திருக்கவிட்டு அவ்விடத்திலிருந்து ஆரோகணமானார். அவருடைய இடதுகால் அடித்தடம் அந்தப் பாறைமேல் பதிந்திருக்கிறதை இன்னம் காணலாம். அந்த மலை உச்சியிலிருந்து ஆண்டவர் தமது சுயபலத்தால் ஆகாயத்தில் எழும்பி வானமண்டலத்தை நோக்கிப்போகிறார். அப்போது நவவிலாச சபையின் இலட்சாதி லெட்சம் சம்மனசுக்கள் ஒரு பக்கமும், கர்த்தருடைய திருப்பாடுகளால் மீட்டிரட்சிக்கப்பட்ட எண்ணிறந்த ஆத்துமாக்கள் ஒரு பக்கமும், புடைசூழ்ந்து கர்த்தருடைய மனுஷாவதாரம், உலக இரட்சணியம், உய்த்தானம், ஆரோகணம், என்ற பரமஇரகசியங்களை உன்னத கீர்த்தனையாய்ப்பாடித் துதிக்கிறார்கள். பரலோகவாத்தியக் கருவிகளெல்லாம்முழங்க வானமண்டலத்தின் எட்டுத்திசையும் பதிற்றுகோணமும் அதிர்ந்து ஒலிக்கின்றன. சென்மப்பாவத்தால் அடைபட்ட மோக்ஷவாசல் திறக்கப்படுகிறது. நல்ல



மானதுபோல சமஸ்தருக்கும் இரட்சணியம் அப்போது தான் நிலைவரமாயிற்று.

## மனத்தியானம்.

என் ஆத்துமமே, துக்கத்துக்குப்பின் சந்தோஷமும் துன்பத்துக்குப்பின் இன்பமும் தொடர்ந்துவருவது வழக்கமாம். ஆகையால் ஆண்டவருடைய பாடுகள் மரணம் இவைகளின் வரலாறுகளைத் துக்கத்தோடு நீ தியானித்தபின் இப்போது அவருடைய உயிர்த்தல், ஒட்டோலக ஆரோகணத்தைச் சிந்தித்து சந்தோஷப்படக்கடவாய். அர்ச். சின்னப்பர் எபிரேயர் 2-ம். அதி. 9-ம். வசனத்தில் சொல்லுவது போலே "திருப்பாடுகள் மரணத்தின் நிமித்தமே சேசுநாதர்சுவாமி மகிமைப்பிரதாபத்தாலே முடிசூட்டப்பட்டிருக்கிறதைக் காண்கிறோம்," என்றார். அவர் அனுபவித்த அளவற்ற பாடுகள் நிமித்தமே அவருக்கு அளவற்ற சம்பாவனை உண்டாயிற்று. இப்போது ஒலிவேத்துமலைமேல்போய் அவ்விடத்தில் கூடியிருந்த அவருடைய சீஷர்களோடே ஒன்றித்துத் திவ்விய இரட்சகருடைய மகிமைப்பிரதாபத்தை வாழ்த்தி ஸ்துதிப்போம். அவர் பாடுபடும்போது அவருக்கிருந்த துக்க சஞ்சலத்துக்கும் வேதனை நிர்ப்பந்தத்துக்கும் இப்போது அவருக்குண்டாயிருக்கிற பேரின்ப சந்தோஷ மகிமைப்பிரதாபத்துக்கும் எவ்வளவோ வித்தியாசம். ஆகையால் அவரோடே பாடுபடுகிறவன் அவருடைய மகிமைப்பிரதாபத்துக்கும் பங்காளியாவான் என்றறிந்துகொள்.

## மன்றாட்டு.

திவ்விய கர்த்தருடைய திருப்பாடுகளே! துன்ப வேதனைகளே, சிலுவைமரணமே, நானுங்களை வாழ்த்தித் துதிக்கிறேன், வணங்கி நமஸ்கரிக்கிறேன். என் சீவியகாலமெல்லாம் பத்தி உருக்கத்தோடு உங்களைத் தியானித்துவருவேன். உங்களைப்பற்றி அடிக்கடிபேசவும், பிறர் பேசுகிறதைக் கேட்கவும் பிரதிக்கினைசெய்கிறேன். திவ்விய கர்த்தரைப்போலே பிறர் சிநேகத்தினிமித்தம் துன்ப வருத்தங்களைச்சகிக்க என்னைமுழுதும் ஒப்புக்கொடுக்கிறேன். சிலுவைச்சிம்மாசனத்தில் மரித்தசேசுவே, தேவரீர்சமுகத்தில் நான்செய்யும் இந்த நல்ல பிரதிக்கினைகளை ஆசீர்வதித்து அவைகளை நிறைவேற்றியளிக்க எனக்குப்போதுமான வரப்பிரசாதத்தைத் தந்தருளும் சுவாமி, ஆமென்சேசு.

சிலுவைப்பாதை சேவிப்பதின்மட்டில் யாவர்க்கும் பத்தியுண்டாகத்தக்கதாக 1-பர. 1-பிரி. 1-திரி. சொல்லவும்.



# அநுபந்தம்.

## திருப்பாடுகளின் அருளிக்கங்கள்.

### 1-வது. கல்தூண்.

கசை வார்களினால் ஆண்டவர் அடிபட்டபோது அவரைக் கட்டிவைத்திருந்த கல்தூணானது வெள்ளை நிறமுள்ள சலவைக்கல்லால் செய்யப்பட்டிருந்தது. இது ஒன்றரை அடி உயரமும் ஒரு அடி குறுக்களவுமுள்ளதாம். குற்றவாளிகளைக் கட்டிவைக்கிறதற்கு இரும்பு வளையங்கள் அதிலே தைக்கப்பட்டிருந்தன. அந்த வளையங்களும், அப்போது அதில் பட்ட இரத்தக்கறைகளும் இன்னம் அதில் இருக்கின்றன. இந்தத் தூணின் அடிப்பக்கம் ஜெருசலேம் பட்டணத்திலுள்ள கல்லறைக் கோவிலிலே இப்போது ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அதின் மேற்பக்கம் ரோமாபுரியில் புரோகசதேஸ் என்பவருடைய ஆலயத்தில் பூச்சியத்தோடு காப்பாற்றி வைக்கப்பட்டிருக்கிறது.

## 2-வது. முள்முடி.




ஆண்டவருடைய திருத் தலையில் வைத்து அழுந்தப்பட்டிருந்த முள்முடியானது எப்படிச் செய்யப்பட்டிருந்ததென்றால், நாணல் குச்சிகளால் பின்னப்பட்ட வளையத்தைச் சுற்றிக் கூர்மையான நீண்ட முள்கள் சொருகியிருந்ததாகத் தெரியவருகிறது. ஆகிலும் அவற்றில் சில முள்கள் இப்போது எடுபட்டுப் போய் இருக்கின்றன. பார்வைக்கு இது மிகவும் பயங்கரமான வேதனை எத்தனமாம்.

1238-ம் வருஷம் வரையில் தார்க்கி தேச ... லத்தைச் சேர்ந்த கொன்ஸ்தாந்திநோப்பிள் என்கிற ... ராஜதானிப் பட்டணத்தில் ... ப்ப ... திலவைக்கப்பட்டிருந்த திருப்பாடுகளின் அ ... க்க ... களுக்குள் திரு முள்முடியும் இருந்தது ... ஷை. வரு ... த்தில் அத்தேசத்தில்



இராச்சியபாரம் செய்த 2-ம் பால்ட்வின் என்ற சக்கரவர்த்தியானவர் வெனிஸ் நகரத்தாரிடத்தில் ஏராளமான கடன்பட்டிருந்தபடியால் அந்தக் கடனை உத்தரிக்கக்கூடாமல் பிரான்ஸ் தேச இராசாவாகிய லூயிஸ் என்பவரிடத்தில் அவர் கடன் வாங்கினர். இந்தக் கடனுக்கு ஈடாகத் திரு அருளிக்கங்களை அந்த இராசாவுக்கு அவர் கொடுத்தார். பத்தியுள்ள இந்த அர்ச். லூயிஸ் (St. Louis) இராசாவானவர் மிகுந்த பூசியத்தோடு அந்த அருளிக்கங்களை வாங்கி அதற்காகப் பாரிஸ்பட்டணத்திலே சிங்காரமான ஒரு தேவாலயத்தைக்கட்டி அதிலே அந்த அருளிக்கங்களை ஸ்தாபித்துவைத்தார். அந்த அருளிக்கங்களோடுகூட திரு முள்முடியும் இருந்தது.

## 3-வது. திரு ஆணிகள்.



சிலுவையில் ஆண்டவர் அறையப்பட்டபோது நாலாணிகளால் அறையப்பட்டாரென்று பூர்வீக திருச்சபையார் சொல்லியிருக்கிறார்கள். ஷை ஆணிகள் ஒன்றின் அனுகலே வைத்து சாதாரணமான பன்னிரண்டு ஆணிகள் செய்யப்பட்டன. அவை



கள் இப்போது பற்பல திருஸ்தலங்களிலே பூச்சியத்தோடே காப்பாற்றப்பட்டிருக்கின்றன.

கொன்ஸ்தந்தீன்ராயர் யுத்த விஷயங்களை நடத்தும்போது தமக்கு நிச்சயமான உதவி கிடைக்குமென்கிற விசுவாசத்தினாலே, ஷை திரு ஆணிகளில் ஒன்றை எடுத்துத் தமது யுத்தக் குதிரைக் கடிவாளத்து இரும்போடே சேர்த்துச் செய்து வைத்துக்கொண்டார். அது இப்போது கார்ப்பேன்றிறஸ் (Carpentras) என்ற பட்டணத்தின் தேவாலயத்தில் இருக்கிறது.

ரோமாபுரி ராயர்களின் பட்டாபிஷேகக் கிரீடத்தில் ஷை திரு ஆணிகளில் ஒன்றைச் சேர்த்துச் செய்திருக்கிறார்கள். ஷை திரு ஆணிக்குச் சங்கையாக அந்தத் தங்கக் கிரீடம் இருப்பு முடியென்று பெயரிடப்பட்டிருக்கிறது. கொன்ஸ்தந்தீன்ராயரின் தாயாரான அர்ச். எலேனம்மாள் ஷை திரு ஆணிகளில் ஒன்றைப் பூர்வீகநகரமாகிய திரேவ்ஸ் நகரத்தாருக்குக் கொடுத்ததாகச் சொல்லுகிறார்கள். ஆகிலும் இப்போது அது பிரான்சு தேசத்து தூல் நகரத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

---

## 4-வது. திரு ஈட்டி.

---

கர்த்தருடைய திரு விலாவைக் குத்தித்திறந்த திரு ஈட்டி துலுக்கருடைய அதிகாரத்துக்குள்ளிருந்த அந்தியோக்கிய நகரத்தின் இராஜ அரண்மனைச் சுரங்கத்தில் மறைந்து கிடந்தது. பிற்காலத்தில்

சிலுவை யுத்தத்தின்போது அப்போஸ்தலராகிய அர்ச். பிலவேந்திரருடைய அற்புதமான உதவியால் அது கண்டெடுக்கப்பட்டது. இப்போது ரோமாபுரி அர்ச். இராயப்பருடைய ஆலயத்தில் அது ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அதன் நுனியை மாத்திரம் பிரான்சுதேச அர்ச். லூயிஸ் ராஜா வாங்கி பாரிஸ் பட்டணத்தில் நோத்ருதாம் (Nótre-Daine) என்னும் ஆலயத்தில் ஸ்தாபித்து வைத்தார். இப்போது அது அங்கே இருக்கிறது.

---

## 5-வது. திருச்சிலுவை.

ஆண்டவர் அறையுண்டிருந்த சிலுவை மரமானது (Pine) தேவதாரு மரத்தால் செய்யப்பட்டதென்று அநேகர் சொல்லியிருக்கிறார்கள். அது பத்து முழம் நீளமாகவும், குறுக்குச் சட்டம் ஐந்து முழம் நீளமாகவும் இருந்தது. அர்ச். எலேனம்மாள் பட்ட பிரயாசத்தாலே அந்தத் திருச்சிலுவை கண்டெடுக்கப்பட்டது. அதில் சிற்சில பாகங்களை எடுத்து பற்பல தேவாலயங்களுக்கு அனுப்பினார்கள். ஆகிலும் அதினுடைய பிரதான பாகம் ரோமாபுரி பெரிய தேவாலயத்தில் காப்பாற்றப்பட்டிருக்கிறது. சிலுவைக்கு மேல் வைக்கப்பட்டிருந்த பட்டயம் ஒன்றரை முழம் நீளம், அரை முழம் அகலமுள்ள பலகை. அதில் யூதர்களின் இராஜாவென்று மூன்று பாஷையில் எழுத்துக்கள் கொத்தப்பட்டிருந்தன. இது ரோமாபுரி திருச்சிலுவைக் கோவிலில் இப்போது ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.



## 6-வது. கடற்காளான்.

ஆண்டவருடைய தாகத்தைத் தீர்க்கக் கசப்புக் கலந்த புளித்த ரசத்தில் கடற்காளானைத் தோய்த்துக் கொடுத்தார்களல்லவா? அந்தக் கடற்காளான் இப்போது ரோமாபுரியின் திருச்சிலுவை ஆலயத்தில் காப்பாற்றப்பட்டிருக்கிறது.

---

## 7-வது. திருப்பரிவட்டம்.

ஆண்டவருடைய திருச்சரீரத்தைக் கல்லறையில் அடக்கஞ் செய்தபோது அதன்மேல் இரண்டு துப்பட்டி போர்த்தப்பட்டிருந்தது. திருச் சரீரத்தைப் பரிமளவர்க்கங்களால் பூசி ஒரு துப்பட்டியின்மேல் வைத்து சர்வாங்கத்தையும் இரண்டுமுறை சுற்றிவர மூடியிருந்தது. இன்னொன்று மேலே போர்த்தப்பட்டிருந்தது. திருச்சரீரம் சுற்றப்பட்டிருந்த முந்தின துப்பட்டி இப்போது இத்தாலி தேசத்தில் காப்பாற்றிவைக்கப்பட்டிருக்கிறது.

1897-ம் வருஷத்தில் இந்தத் துப்பட்டியை ஒளிச்சித்திரக்கண்ணாடியில் (Photography) படமாக எடுக்கவேணுமென்று பிரயத்தனஞ் செய்தார்கள். ஆனால் அப்போது சம்பவித்த ஆச்சரியத்துக்குரிய விசேஷமாவது: அத்துப்பட்டியில் பார்வைக்கு வேறொன்றும் காணப்படாவிட்டாலும், இத்துப்பட்டியின் படத்தில் ஆண்டவருடைய திருமேனியின் வெளிச்சாயல் மங்கலாய்ப் பதிந்திருந்தது.

இது யாவருக்கும் ஆச்சரியமாகத் தோன்றினது. அந்த ஒளிச்சித்திரக்கண்ணாடிக்காரனுடைய வேலைக் கூடத்துக்கு ஆயிரமடங்கான யாத்திகாசாலிகள் அப்போது நாடோறும் போய்க்கொண்டிருந்தார்கள். இதை அநேக வருஷகாலமாய் ஒருவரும் கவனிக்க

வில்லை. இப்போது சொல்லப்பட்டவைகளெல்லாம் ஆண்டவருடைய திரு மேனியை மூடின நெடும் போர்வையைப்பற்றினதே.

ஆண்டவருடைய திருச் சிரசை மூடியிருந்த வஸ்திரமோவென்றால், இப்போது பிரான்சுதேசத்தில் காதூயின் (Cadouin) என்னும் பூர்வீக சந்நியாச மடத்தில் காப்பாற்றப்பட்டிருக்கிறது.

---

## 8-வது. ஆண்டவருடைய உட்சட்டை.

ஆண்டவர் அணிந்திருந்த உட்சட்டையானது அடிதுவக்கி நுனிவரையில் தையலில்லாமல் பின்னப்பட்ட உடையாம். இது ஊதா நிறமுள்ளது. இதன் முன்பக்கம் நாலடி பதினொரு அங்., பின்பக்கம் ஐந்தடி இரண்டு அங்., அடிபக்கம் அகலம் ஒன்பதடி. கை நீளம் ஒரு அடி நாலு அங்குலம், உள்விலாசம் பன்னிரண்டு அங்குலம். இந்தச் சட்டை, இப்போது ஜெர்மானியா (Germany) தேசத்தில் மிகவும் பூர்வீக பட்டணமாகிய திரேவ்ஸ் (Treves) நகரத்தில் பூச்சியத்தோடே காப்பாற்றப்பட்டிருக்கிறது. இந்த உட்சட்டைதவிர இன்னொருவித உள் உடையை ஆண்டவரணிந்திருந்தார். இது இப்போது பிரான்சுதேசத்தில் பரீஸ்பட்டணத்துக்கருகே வேர்சாயில் (Versailles) மேற்பிராசனத்தைச் சேர்ந்த அர்ஜான்தைல் (Argentouil) என்னும் ஊரில் காப்பாற்றப்பட்டிருக்கிறது.



## 9-வது. திருமுகம்.



ஆண்டவர் சிலுவைசுமந்துகொண்டு கல்வாரிமலைக்குப்போகையில் இரத்தத்தாலும் தூசி வேர்வையாலும் அழுக்கடைந்திருந்த அவருடைய திருமுகத்தைத் துடைப்பதற்காக வெரோணிக்கம்மாள் தன் முக்காட்டுச்சேலையை எடுத்துக்கொடுத்தாள். ஆண்டவர் மதுரகுணத்தோடே அதை வாங்கித் தமது முகத்தைத் துடைத்தபின் அதை அவள்கையில் கொடுத்தார். அப்போது அவருடைய கன்னத்தின் காயங்கள்

உள்பட அவருடைய முகச்சாயல் முழுதும் அதில்பதிந்துபோயிற்று. இந்த ஆச்சரியமான திருமுகச்சாயலை வெரோணிக்கம்மாள் மிகுந்த பக்தியோடு சிலகாலந்தன்னிடத்தில் வைத்திருந்தாள். பின் தேவசித்தத்தையறிந்து உரோமாபுரிக்கு அதைக்கொண்டுபோய் அர்ச். இராயப்பருக்கு உதவியாக அப்போது திருச்சபையின் காரியஸ்தராயிருந்த அர்ச். கிளமென்றுவின்கையில் அப்படத்தைக் கொடுத்துவிட்டாள். இப்போது அது உரோமாபுரியின் பெரிய ஆலயத்தில் பூச்சியத்தோடு ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.



ஜெருசலேம் பட்டணத்தின் படம்.




PLAN OF JERUSALEM.

# ஜெருசலேம் பட்டணத்தின் குறிப்பு விவரம்.

*A.* பூங்காவனத் தோட்டம்.

*B.* ஜோசபாத்து என்னும் கணவாயிலுள்ள தேவமாதாவின் கல்லறைக் கட்டடம்.

*C.* செதிரோன் என்னும் ஆறு.

*D.* சாலொமோனுடைய தேவாலய ஸ்தலம்.

*E.* அந்தோனியா என்னும் கோபுரம்.

*F.* கல்வாரிமலை.—திருக்கல்லறைக் கோவிலுக்குள் அமைந்திருக்கிறது.

*G.* தமாஸ்க்பட்டணத்தின் தலைவாசல்.

*H.* சீயோன்மலை.

1. ஆண்டவர் மரண அவஸ்தைப்பட்ட குகை.
2. ஆண்டவர் பிடிபட்ட இடம்.
3. அப்போஸ்தலர்கள் தூங்கிவிழுந்த இடம்.
4. செதிரோன் நதிப் பாலம்.—இவ்விடத்தில் நின்றுதான் ஆண்டவரை வெள்ளத்தில் விழத்தாட்டினார்கள். பூங்காவனம் முதல் இதுமட்டும 600 அடி தூரம்.
5. ஸ்தெர்க்குலின் தலைவாசல்.—இதன் வழியாய்த்தான் பட்டணத்துக்குள் ஆண்டவரை இழுத்துக்கொண்டு போனார்கள்.
6. ஆனாஸ் என்பவன் வீடு.

7. சியோன்மலைத் தலைவாசல்.
8. கைப்பாஸுடைய வீடு.—இது முதல் பிலாத்து அரண்மனைமட்டும் ஏறக்குறைய 4000 அடி தூரமாம்.
9. தாவீது ராஜாவின் அரண்மனை.
10. திரு அசனசாலை.
11. கைப்பாஸிடமிருந்து பிலாத்தண்டைக்கு ஆண்டவர் அனுப்பப்பட்டபோது அவர் நடந்துபோன வழி.
12. பிலாத்து அரண்மனையின் நியாயசாலை. இதுதான் முதல் ஸ்தலம்.
13. கல்தூணில் ஆண்டவர் கட்டுண்டு அடிபட்ட இடம். நியாயசாலை முதல் இதுவரையிலும் 30 அடி தூரம்.
14. எரோது இராஜாவின் அரண்மனை.—பிலாத்து அரண்மனைமுதல் இதுவரையிலும் ஏறக்குறைய 300 அடி தூரம்.
15. இதோ மனிதனென்று ஆண்டவர் காட்டப்பட்ட மேடைக்கிராதி.
16. 2-ம் ஸ்தலம்.—முதல் ஸ்தலம் முதல் இதுவரையில் ஏறக்குறைய 60 அடி தூரம்.
17. 3-ம் ஸ்தலம்.—மேடைக்கிராதி முதல் இதுவரையில் ஏறக்குறைய 800 அடி தூரமாம்.
18. தேவமாதா தமது திவ்விய குமாரனைச் சந்திக்கத்தக்கதாக நடந்துபோன தெரு.
19. 4-ம் ஸ்தலம்.—3-ம் ஸ்தலம் முதல் இதுவரையில் ஏறக்குறைய 145 அடி தூரம்.



20. 5-ம் ஸ்தலம்.—4-ம் ஸ்தலம் முதல் இதுவரையில் 120 அடி தூரம். இந்தத்தெரு மேலே போகப்போக மேடு.
21. 6-ம் ஸ்தலம்.—அர்ச். வெரோணிக்கம்மாள்வீடு. சுவிசேஷத்தில் சொல்லப்பட்ட லாஸார் என்பவனுடையவும், ஐசுவரியவானுடையவும் வீடு இந்தத் தெருவில்தானிருக்கிறது. 5-ம் ஸ்தலம் முதல் இதுவரையிலும் 345 அடி தூரம்.
22. 7-ம் ஸ்தலம்.—6-ம் ஸ்தலம் முதல் இதுவரையிலும் 180 அடி தூரம்.
23. குற்றவாளிகளைக் கொலைக்களத்துக்குக் கொண்டுபோகும் தலைவாசல்.
24. 8-ம் ஸ்தலம்.—இவ்விடத்தில் பாதை அதிக செங்குத்தானது. இது பட்டணத்துக்கு வெளியேபோகும்பாதை, 7-ம் ஸ்தலம் முதல் இதுவரையிலும் 180 அடி தூரம்.
25. 9-ம் ஸ்தலம்.—ஆண்டவர் கல்வாரிமலைக்கு நடந்துபோன வழியிது. ஆகிலும் வீடுகள் கட்டடங்களால் இப்போது அது நிறைந்திருக்கின்றது.
26. கடைசியான ஐந்து ஸ்தலங்கள் திருக்கல்லறைக் கோயிலுக்குள் அமைந்திருக்கின்றன.



# திருச்சிலுவைப்பாதை.

விவரம்: குறிக்கப்பட்ட ஒழுங்குப்பிரகாரம் சிலுவைப்பாதையைச் சேவிப்பவர்கள், சேசுநாதர்சுவாமி பாடுபட்ட திருஸ்தலங்களைச் சேவிப்பதினாலே அடையக்கூடுமான பரிபூரண பலன்களையும் தனிப்பலன்களையும் அடைவார்கள்.

இந்த ஒழுங்குகள் ஏதென்றால், ஒவ்வொரு ஸ்தலத்தையும் ஒன்றுக்குப்பின் ஒன்றாய்ச் சந்திப்பதும்



ஆண்டவருடைய பாடுகளைப் பத்தியோடு யோசிப்பதுமாகிய இவ்விரண்டு மாத்திரம் அவசியமானவைகள். பலன்கள் அடையத்தக்கதாகப் பரமண்டல மந்திரம் பிரியத்தந்த மந்திரம் முதலிய மற்றச் செபங்கள் சொல்ல அவசியமில்லை.

## ஆயத்த செபம்.

ஆ! என் சேசுவே! இரக்கம் நிறைந்த சர்வேசுரா! தேவரீர் எவ்வளவோ தயையும் அன்பும் உள்ளவர். எல்லாத்தைப் பார்க்கிலும் உம்மை மிகவும் சிநேகிக்கிறேன். ஐயோ! சர்வ நன்மையுமுள்ள உமக்குத் துரோகஞ்செய்து துக்கம் வருவித்ததினாலே, என் மனம் வருந்திப் புண்ணாய்ப் போகின்றது. உமது பாடுகளை நினைத்து என் பாவங்களுக்கு மனஸ்தாபப்படத்தக்கதாக இப்போது சிலுவைப்பாதையை நான் சேவிக்கப்போகிறேன். நான் பாவி, அபாத்திரன் என்பது மெய்தான். ஆனால் தேவரீருடைய அளவில்லாத தயவின்பேரில் என் நம்பிக்கையாவும்வைத்து, உமது பாடுகளின் பாதையைச் சிந்தித்துத் தியானிக்க வருகிறேன். இந்தச் சுகிர்த முயற்சியால் அடையக்கூடுமான பலன்களையெல்லாம் அடையும்படி ஆசையாயிருக்கிறேன். தேவரீர் உமது தயாள இரக்கத்தை, நான் உயிரோடிருக்குமட்டும், எனக்குக்காட்டி, நான் மரித்தபின்பு உம்மைத் தரிசித்து சிநேகிக்கும் பாக்கியம் எனக்குக் கிடைக்கும்படியாகக் கிருபைசெய்தருளும் சுவாமி. ஆமென் சேசு.

தேவாரம்.

செழுந்திரி புவனமாளும்
தேவனே, எனை யீடேற்றிப்
பழுதகற்றிட நீர்பட்ட
பாடுகள் தனையிப்போது
ஒழுங்குடன் நான் தியானித்து
உத்தம மனஸ்தா பத்தால்
அழுது கண்ணீர்கள் சிந்த
ஆயனே! அருள்செய்வீரே.

நீலாம்புரி.

புவனரட்சகா சேசுநாதா, மோட்ச நெறியைப்
போதித்தருளுஞ் சத்திய வேதா!
தவமாமரிதிருக் குமாரா, பாவிக ளானோர்
தம்மை யீடேற்று முபகாரா.

முதல் ஸ்தலம்.

திவ்விய சேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் பண்ணுகிறோம்.

ஏனென்றால் உம்முடைய அர்ச். சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டிரட்சித்தீர்.

சேசுநாதரைச் சாவுக்குத் தீர்வை இடுகிறார்கள்.

சேசுநாதரோ மவுனமாய்க் கேட்கிறார்...ஆகிலும் அவர் மாசற்றவர்...சகல ஜீவகோடிகளுக்கும் அவர் தான் உயிர் கொடுப்பவர்...இது எனக்கு ஏற்ற நல்ல படிப்பினை அல்லவா?...

ஆ! சுவாமி, நான் எத்தனையோ விசை பிறரை நிந்தித்துப் பேசினேன்; அகங்காரமாய்ப் பிடிவாதஞ்



செய்தேன். அடக்கமரியாதையோக்கியதைப்பிலீம்பு [illegible]தேன். சுவாமி! இனிமேலாக நான் எந்தச் சமயத்திலும் பொறுமையாயிருந்து மவுனங்காப்பாற்றும்படி இருவை செய்தருளும். பர. பிரி. திரி.

எங்கள்பேரிலிரக்கமாயிருஞ்சுவாமி, இரக்கமாயிரும்.

தேவாரம்.

பாரினில் பூதரும்மைப்
பாதகனெனவே கட்டிக்
கோரமாய்ப்பிலாத் தூஸ் முன்பாய்க்
கொண்டுபோய் வசைகள்பேசப்
பூரண நேசமாகப்
பொறுத்தவனிடம் தீவுரேத்
தீர்வைக்குள்ளான எங்கள்
சேசுவே! அருள்செய்வீரே.

நீலாம்புரி.

சேசுநாதரே சுவாமி, தோத்திரம் எங்கள் பாவத்
செகத்தில் அவதரித்தீர் தோத்திரம் [தால்
தோஷரெங்களை மீட்க மெய்யாய் உயிர்ப் பலி
துஷ்டதீர்வைக் குள்ளானீர், ஐயோ! [யாம்

இரண்டாம் ஸ்தலம்.

திவ்விய சேசுவே......

ஏனென்றால்......

சேசுநாதர் தோள்மேல் சிலுவையைச்
சுமத்துகிறார்கள்.

அவரும் சந்தோஷத்தோடு, அதை வாங்கித் தமது இருதயத்தோடு சேர்த்து அணைத்துக்கொள்ளுகிறார்.

ஆ! நமதுபேரில் எவ்வளவு சிநேகம்!

ஆ! என் சேசுவே! தேவரீர் உமது சிநேகத்தின் அடையாளமாக எனக்குத் துன்ப வருத்தங்களை அனுப்பினீர். நானோ அவைகளை நல்ல மனதோடு ஏற்றுக்கொள்ளவில்லை. முறுமுறுத்துப் பேசினேன். முறைப்பட்டேன். பொறுத்துக்கொள்ளுஞ் சுவாமி. இனிமேலாக எனக்குத் தேவரீர் அனுப்புந் துன்ப வருத்தங்களைச் சந்தோஷமாய் ஏற்பது எனக்குப் பாக்கியமென்று நான் எண்ணி நடக்கும்படி தயை செய்வீராக.

### தேவாரம்.

ஆரணா பிசெசன்பாவ
அருஞ்சுமைதனைக் கையேற்று
நீதிசேர் பிதாவின் முன்பாய்
நிவர்த்திசெய் தெனையீடேற்றப்
பாதகர் சுமத்துவித்த
பாரமாஞ் சிலுவைதன்னைத்
தீதறச் சுமந்து சென்ற
சேசுவே! அருள்செய்வீரோ.

### நீலாம்புரி.

பாவச்சுமை சுமக்குங் கடமை, எங்கள் மேல்
பாரம் பொறுக்கோமென்ற திடமோ [மிகத்
தேவரீர் தயவாகப் பூமி, மீது களைத்த
சிலுவை சுமக்கலானீர் சுவாமி!

---

## மூன்றாம் ஸ்தலம்.

திவ்விய சேசுவே......
ஏனென்றால்.....



### சேசுநாதர் சிலுவையின் பாரத்தால கீழே விழுகிறார்.

ஓ திவ்விய பிதாவே! இதோ! உமது நேச குமாரன் கீழே விழுந்து கிடக்கிறதைப் பாரும். நான் பிறத்தியாருக்குத் துர்மாதிரிகைகாட்டி அவர்கள் இடறிவிழும்படி செய்த பாவங்களுக்குப் பரிகாரமாக இங்கே விழுந்து கிடக்குஞ் சேசுநாதரை உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன்.

சுவாமி! இவ்வித அவமான வருத்தத்துக்குள்ளான உமது பிரிய குமாரன் சேசுநாதரைப்பார்த்து, என்பேரில் இரக்கமாயிரும். இனிமேலாகப் பாவம் உண்டாகாதபடி தடுக்க என்னாற்கூடியமட்டும் பிரயாசப்படுவேன். மனிதர் உம்மை அறிந்து சிநேகிக்கும்படி என்னாலானதெல்லாஞ் செய்வேன். என்னுடைய பிரதிக்கினையை ஆசீர்வதித்தருளும்.

### தேவாரம்.

பகைத்தும்மை படித்துமான
பங்கமாய்ப் பிடித்துத்தள்ளி
நகைத்திடச் செருசலேமா
நகரத்தின் தெருவினூடே
தகைத்திதோ சிலுவைப்பாரந்
தாங்கிடப் பெலனில்லாமல்
திகைத்துத் தள்ளாடி வீழ்ந்த
சேசுவே! அருள்செய்வீரோ.

### நீலாம்புரி.

அடியால் முள்ளின்முடியால் மிக்க, உதிர வெ
ஆற்றால் இடறுமற்று நிற்க [ள்ள

கொடிய சிலுவைப்பாரம் ஐயோ! தாளா
கொலைக்காரர் ராஜேமிது பொய்யோ.

---

## நான்காம் ஸ்தலம்.

திவ்விய சேசுவே......

ஏனென்றால்......

சேசுநாதர் தமது பரிசுத்த தாயாரைச் சந்திக்கிறார்.

ஓ! தாயுமகனுஞ் சந்திக்கும் இந்தச் சமயம் எவ்வளவு துயரவியாகுல நிறைந்தது! பாரச்சிலுவையைத் தோளில்தாங்கித் தளர்ந்து சோம்பிநின்ற மகன், இரத்தத்தில் தோய்ந்து மூடியிருந்த தமது கண்களைத் திறந்து, தமக்கெதிரே நின்ற வியாகுலத்தாயைப் பார்க்கிறார். தாயும் தனது இனிய மகனை அன்பாய் நோக்கி உற்றுப்பார்க்கிறாள். ஓ வியாகுலமே! ஓ துக்கப்பிரவாகமே! ஓ மரியே! உமது வியாகுலத்துக்குச் சரியான வியாகுலமுண்டோ?

நித்திய பிதாவே! இதோ! தாயுமகனுஞ் சிந்துங் கண்ணீர்த்துளிகளை எல்லாங்கூட்டி உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். நான் என் சுகசௌக்கியத்தை ஆவலாய்த் தேடுவதிலே கட்டிக்கொண்ட குற்றங்குறைகளை எல்லாம் பொறுத்துக்கொள்ளும் சுவாமி.

தேவாரம்.

கொன்றிடப் பறைகள் சாற்றிச்
கொலைக்களத் தேகும்வேளை



சென்றிதோ எதிராய் வந்து
திருமகன் தனை யணைத்து
நின்றவர் படும்பாடெண்ணி
நினைத்துவாளூடுருவ
அன்றழுத லறிவிழந்த
அன்னையே, அருள்செய்யம்மா.

நீலாம்புரி.

தாயேயாகில்லாமரி யம்மா, ஓ, ஓ என் சொல்
தளர்ந்துநின் றிருமகன் எம்மால் [வோம்
தூயகல்வாரிமலை மீதே உயிர்கொடுக்கச்
சிலுவை சுமந்துபோறா ரீதோ!

---

## ஐந்தாம் ஸ்தலம்.

திவ்விய சேசுவே......

ஏனென்றால்......

சீரோனை சீமோன், சேசுநாதர் தமது சிலுவையைச் சுமக்கும்படி, உதவி செய்கிறார்.

ஆ! என் ஆத்துமமே! இதோ பார், அந்நியனொருவன் சேசுநாதருக்கு உதவி செய்கிறான். நீ அவருடைய செல்வப்பிள்ளையாயிருந்தும், அவருக்கு உதவி செய்ய வரமாட்டாயோ? உனக்கு அவர் அன்பாய் அனுப்பும் துன்ப வருத்தங்கள் அவருடைய பரிசுத்த சிலுவையின் பாகங்களல்லவா? ஆ! நன்றிகெட்ட ஆத்துமமே! வெட்கப்பட்டு [illegible] கேள்.

ஓ! என் இனிய சேசுவே! நான் இதுமட்டும் செய்த தப்பிதத்தைப் பொறுத்துக்கொள்ளும்; இனிமேலாகத் தேவரீர் எனக்கு அனுப்பும் தாழ்மை நிந்தை அவமானங்களைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொள்ளுவேன்; சுவாமி.

தேவாரம்.

சுமையெனு மூலோகதுன்பத்
துயர்வழிதனில் நடந்து
தமியேனுனைப் பின்செல்லத்
தயையுடன் படிப்பித்தன்று
அமைவுடன் சிலுவைப்பாரம்
ஆனதைச் சுமப்பதற்குச்
சிமியோனை உதவியேற்ற
சேசுவே! அருள்செய்வீரோ.

நீலாம்புரி.

சகல படைப்புகட்கும் இறைவன் பரதேசி தவித்துத் தள்ளாடி நின்ற முறையால் [போல் சுகிர்த சிமோனென்றவர் உதவச் சிலுவைதனைச் சுமந்து நடக்கலானார் வலைய.

---

ஆறாம் ஸ்தலம்.

திவ்விய சேசுவே......

எம[illegible]ல்......



இரத்தக்கறைபிடித்த சேசுநாதருடைய திருமுகத்தை ஓர் பெண்பிள்ளை துடைக்கிறாள்.

திவ்விய சேசுவே! பாவிகள் உமக்குச் செய்யும் நிந்தை அவமானங்களை நான் இன்னம் எத்தனைகாலம் சும்மாநின்று பார்த்துக்கொண்டிருப்பேன்? இவைகளை எல்லாம் என் கண்ணீரால் கழுவித்துடைக்கும்படி நான் வரவேண்டாமோ? இனிமேலாக உமது ஊழியத்தில் நான் பிரமாணிக்கமாயிருப்பேன், உம்மை என் இருதயத்தின் ஆசை அளவாய்ச் சிநேகிப்பேன். இவ்விதமாய் உமது இருதயத்துக்குப் பாவிகள் வருவிக்குந் துக்கத்தைக் குறைத்து, உமக்கு ஆறுதல்வருவிக்கப் பிரயாசப்படுவேன். உமது இஷ்டப்பிரசாதத்தால் என் மனதை ஸ்திரப்படுத்துஞ் சுவாமி!

தேவாரம்.

இருநேரத் தாசிவேர்வை
இரத்தத்தால் நிறைந்ததேவ
அருளூறு முகத்தை நோக்கி
அழுகிதோ விரோணிக்கம்மாள்
மருளறத் துடைத்த துய்ய
வஸ்திர மதனிலுந்தன்
திருமுகம் பதியச்செய்த
சேசுவே! அருள்செய்வீரோ.

நீலாம்புரி.

அழுதகண்ணீர் துடைத்துக்காக்கும் [illegible]ண்டவரை
அந்தக் கொலைக்குள்ளாயாக்க [illegible]

பழுதற்ற மாதொருத்தி கண்டுருகத் துடைக்கப்
பார்த்தோம் கல்நெஞ்சர் நம்போலுண்டோ.

---

## ஏழாம் ஸ்தலம்.

திவ்விய சேசுவே......

ஏனென்றால்......

சேசுநாதர் சிலுவையின் பாரத்தால் இரண்டாம்விசை தரையில் விழுகிறார்.

ஓ! உலக இரட்சகரே! இதென்ன கோலம்! தேவசுதத்துவ நிறைந்த சர்வேசுரனான நீர் தரையில் முகம்படிய விழுந்துகிடப்பதேதன்? ஏனோ இதற்குச் சம்மதித்தீர்? ஆ! சுவாமி! ஏன் என்று எனக்குத் தெரியும். ஆங்காரம் என் மனதில் பொங்க, நான் என்னை எல்லாருக்கு மேலாய் உயர்த்தினேன், பெருமை பாராட்டினேன். என் ஆங்கார பாவத்துக்குப் பரிகாரமாகத் தேவரீர் தரைமட்டும் விழும்படி சித்தமானீர். இனி நான் ஆங்காரத்தை அடக்கித், தாழ்ச்சி உள்ளவனாயிருப்பேன். தாழ்ச்சியுஞ் சாந்த இருதயமும் உள்ள சேசுவே! என் இருதயமும் உமது இருதயத்தைப் போலிருக்கும்படி தயைசெய்வீராக.

### தேவாரம்.

ங்குறும் யூதராலேறோர்
லிரித்துமை நடத்தி
ற்றிய சிலுவைப்பாரம்
த்திட அடித்துத் தள்ளத்



தாங்கிடப் பெலனில்லாமல்
தரையதில் மயங்கி மீண்டும்
ங்கு குப்புறவே வீழ்ந்த
சுவே! அருள் செய்வீரே.

நீலாம்புரி.

மூவுலகத்தை யேந்துந் தேவன் அடியால் நொந்து
மீண்டுங் குப்புற வீழ்ந்தார் ஆ! ஆ!
பாவிகளான நமதடிமை நீக்கிட இந்தப்
பாடோ? ஐயையோ? என்ன கொடுமை!

---

## எட்டாம் ஸ்தலம்.

திவ்விய சேசுவே......

ஏனென்றால்......

சேசுநாதர் தமது பின்னால் அழுதுவந்த ஸ்திரீகளுக்கு ஆறுதல் சொல்லுகிறார்.

ஓ! சேசுநாதர் எவ்வளவோ தயை இரக்கமுள்ளவர், தாம் படுங்கொடிய வருத்த உபாதையை மறந்துபோய், தமது பின்னால் அழுதுகொண்டுவந்த ஸ்திரீகளுக்கு ஆறுதல் சொல்லும்படி கவலையாயிருக்கிறார். அவர்கள் சிந்துங் கண்ணீர் பிரயோசனமாயிருக்கும்படி, தம்மைப்பற்றி அழாமல், அவர்கள் சாதியார் செய்யும் பெரும் பாவ துரோகத்தைப்பற்றி அழக் கற்பிக்கிறார்.

ஆண்டவரே! நானும் அப்படியே உமது பாடுகளுக்குக் காரணமாயிருக்கும் என் பாவங்களை நினைத்து அழும்படிக்குத் தயவு செய்யும். என் மனம்

சாபம் மெய்யான மனஸ்தாபமாயும், நான் சிந்தும் கண்ணீர், அக்கக் கல்லணீராயும் இருக்கக்கடவது.

### தேவாரம்.

கூறுதற்கரிய பாவக்
கொடுமையா லும்மதுமேனி
மாறுதலாய்ச் சர்வாங்க
வாதனை கோவைக் கண்டு
தேறுதலில்லா நெஞ்சும்
செருசலே மாதர்க்கன்பாய்
ஆறுத லுரைத்த எங்கள்
ஆயனே! அருள்செய்வீரோ.

### நீலாம்புரி.

இசருசேலம் மாதர்கண்டு புலம்ப—ஆறுத லவர்க்
கீதோ! உலக நாதர் விளம்ப
அசையா நமதுமனங் கல்லோ? நாம் கரையேற
அடுத்த சமய மிதுவல்லோ?

---

## ஒன்பதாம் ஸ்தலம்.

திவ்விய சேசுவே......
என்னென்றால்......

சேசுநாதர் மூன்றாமுறை கீழே விழுகிறார்.

ஓ! ஆச்சரியமே! சர்வவல்லபரான சர்வேசுரன் நடந்துபோகச் சக்தியின்றி பலனற்றவனைப்போல் கீழே விழுந்துகிடக்கிறார். ஆனால் கல்வாரி மலைமேலே சிலுவைக் கொடியை உலகமெல்லாம் பார்க்க நாட்டவேண்டியிருந்ததால் தமது பலமெல்லாம்



…டி. எழுந்து திருச்சிலுவையைத் தோளின்மேலே வைத்து நடந்துபோகிறார்.

…ன்ப வருத்தங்களாகிற சிலுவையைக் கடைசிமட்டும் துணிந்து தூக்கிநடந்துபோகிறவர்கள் எவ்வளவோ கொஞ்சம்! நானோ! ஓர் அற்ப சொற்ப வருத்தம் வந்தமாத்திரத்தில் மனஞ்சோம்பிப் பயந்து பின் விட்டேனே! ஓ! கோழைத்தனமுள்ள ஆத்துமமே! சேசுநாதரைப்பார். இனிமேலாகிலுந் தைரியமாய் மனஞ்சோராமல் உனக்கு வரும் அற்பச் சிலுவையைச் சுமந்து நட. சுவாமி! என்னுடைய சிலுவையை நான் சுமந்துகொண்டு தைரியமாய் உம்மைப் பின்சென்றுவர உமது வரப்பிரசாதத்தால் என் மனதை ஸ்திரப்படுத்தியருள்வீராக.

### தேவாரம்.

பயனுறுமுமதிரத்தப்
பலனதை யிழந்துகெட்டு
இயல்பறநரகில் வீழும்
எண்ணிலாமனிதர் தம்மைத்
துயருறநினைத்தே வங்கிச்
சுமையொடு களைத்து மீண்டும்
அயர்ந்து குப்புறவே வீழ்ந்த
ஆயனே! அருள் செய்வீரோ.

### நீலாம்புரி.

சீலதேகம் நொறுங்கிச் சிதைய மூன்று முறையும்
சிலுவையுடனே வீழ்ந்தார் வதைய
பாலரும் பால்குடியார் கண்டால் ஆண்டவர்படும்
பாடுகள் சொல்ல நாவு முண்டோ?

## பத்தாம் ஸ்தலம்.

திவ்விய சேசுவே......

எனென்றால்......

சேசுநாதருடைய வஸ்திரங்களை உரிகிறார்கள்.

ஓ! என் சர்வேசுரா! என்னிடத்திலிருக்கும் துர்க்குணங்களையும் பாவங்களையும் என்னை விட்டு உரிந்துபோடும். சுயபட்சமாகிற அசுத்த வஸ்திரம் என்னை முழுதுஞ் சுற்றிக்கொண்டு இருக்கிறது. அது கழன்று விழும்படி செய்வீராக. உமது சரீரமெங்குமிருந்து ஓடிவிழும் இரத்தத்தால் என்னைக் கழுவிச் சுத்தமாக்குவீராக. உமது இரத்தம் என் மனதில் பாயவும், தாழ்ச்சியும் பரிசுத்த கற்பும் அதில் துளிர்த்து புஷ்பிக்கவுங் கடவது.

### தேவாரம்.

ஆபமான மலையிலுச்சி
யானதில் சேர்ந்த பின்னும்
காயங்களோடே யொட்டிக்
காய்ந்த வஸ்திரத்தைப் பிய்த்து
நீயவுரிந்த போது
திருச்சதை கிழிந்து மெத்தக்
காயம் நோவனுபவித்த
கர்த்தனே! அருள் செய்வீரே.

### நீலாம்புரி.

தூர்த்தருடலோடொட்டிக் காய்ந்த திருச்சட்டை
தோலுரிபோலுரிக்க நேர்ந்தார், [ யை
பார்க்கக்கூடுமோ இந்தக் கோரம், வானோர்களே
பாரை மறைக்காரோ இக்கோரம். [ ளுய்



## பதினோராம் ஸ்தலம்.

திவ்விய சேசுவே.....

எனென்றால்.....

சேசுநாதரைச் சிலுவையில் அறைகிறார்கள்.

சேசுநாதர் துஷ்ட யூதர்கள் கையில் தம்மை ஒப்புவித்து அவர்கள் தங்களிஷ்டம்போல் தம்மை இழுத்துப்பிடித்துத் தள்ளிச் சிலுவையில் கிடத்தி, கைகால்களில் ஆணி அறையும்படி விட்டுவிடுகிறார். ஓ! என் சேசுவே! உம்மோடு நானும் ஒன்றாய்ச் சேர்ந்து அந்நியோந்நியமாய் ஒன்றித்திருப்பது எப்போ?

சுவாமி, உமது திருவுள ஏற்பாட்டின் பிரகாரம் எனக்கு எந்த வேலை அலுவல் வந்தாலும், என் ஆத்தும இரக்ஷணியத்துக்காகத் தேவரீர் எனக்குக் குறித்த சிலுவை அது என்று எண்ணி, முறைப்படாமல் அதை நிறைவேற்றும்படி எனக்கு உதவி செய்தருளும்.

### தேவாரம்.

மிருதுவா முமது மேனி
வேதனையாலே நொந்து
குருசதில் மரிப்பதற்குக்
கொலைக்களமதனில் சேர்ந்து
பரு மிருப்பாணியாலே
பாதகரடித்துச் சேர்க்கத்
திருக் கைகால் விரித்துத் தந்த
சேசுவே! அருள்செய்வீரே.

நீலாம்புரி.

ஐயோ! மூன்றாணியாலே சிலுவைமீதுகர்த்தரை
அறைந்து கொல்லுவதென்ன வலுமை!
மெய்யாய் நம்மை ரட்சிக்கும் வான ஆண்டவர்
விரும்பிச்செய் நன்றி யிது தானோ? [க்கு நாம்

---

## பன்னிரண்டாம் ஸ்தலம்.

திவ்விய சேசுவே
வனென்றால்......

சேசுநாதர் சிலுவையில் மரிக்கிறார்.

நித்திய பிதாவே! சர்வவல்லமையுள்ள அநாதி
கர்த்தரே! உயிரின்றிச் சிலுவையில் தொங்கும் உம்
முடைய திவ்விய குமாரனைப் பாரும். தேவரீர் என்
மேல் பொழிந்தருளிய நன்மை உபகாரங்களுக்கு
நன்றியறிதலாகவும், நான்செய்த பாவங்களுக்கெல்
லாம் பரிகாரமாகவும், என் சேசுவின் பாடுகளையும்,
அவருடைய திருக்காயங்களையும், அவர் சிந்தின அ
ளவில்லாப் பேறுள்ள இரத்தத்தையும், அவர் உயி
ர்விடும்போது விட்ட கடைசிப் பெருமூச்சையும்,
தேவரீருக்கு ஒப்புக்கொடுக்கிறேன். உமது திருக்
குமாரன் முகத்தைப்பார்த்து, உம்மிடத்தில் மூன்று
விசேஷித்த மன்றாட்டைக் கேட்கிறேன்.

எனக்கும் என் சகோதரர் சிநேகிதரானவர்களுக்
கும், உத்தமமனஸ்தாப வரமும், உமக்கு என்றுஞ்
சொந்தமாயிருக்கும்படியாய் ஸ்திரமான மனசுகொ



டுத்தருளும். நிர்ப்பாக்கிய பாவிகள் பாவத்தை வி
ட்டு மனந்திரும்பச் செய்தருளும்; எங்கள் அன்புள்
ள தாயாகிய திருச்சபைக்கு இக்காலத்தில் தேவை
யாயிருக்கும் உதவியெல்லாந் தேவரீர் தயவாய் இர
ங்கிக் கொடுத்தருளவும் மன்றாடுகிறேன்.

ஆண்டவரே! நான் பெரும் பாவி என்பதைப் பா
ராட்டாதேயும். உமது நேசகுமாரன் திருமுகத்
தைப் பார்த்தருளும். எங்களை அளவுகடந்த வகை
யாய்ச் சிநேகிக்கும் அவருடைய இருதயத்தைப் பா
ர்த்து, எங்கள்பேரில் இரக்கமாயிருஞ் சுவாமி, இர
க்கமாயிரும்.

தேவாரம்.

தொருளுறக்குருசில் தொங்கி
திரேகம் புண்ணுன பின்னும்
அருளுறு மேழு வாக்கியம்
அன்புடனுரைத் தெங்கட்காய்
இருகள்ளர் நடுவராக
இருந்திதோ சிலுவைமீது
திரு உயிர் விடுத்த எங்கள்
சேசுவே! அருள் செய்வீரோ.

நீலாம்புரி.

பொதுவில் மன்னுயிர்களை மீட்கச் சிலுவை மீது
பலியாய்த்தன் னுயிர்தந்தார், பார்க்க
கதிரோன் சுடருமங்கிப் போச்சே, நமது மனங்
கலையாததென்ன? இரும்பாச்சோ?

---

## பதிமூன்றாம் ஸ்தலம்.

திவ்விய சேசுவே......

ஏனென்றால்......

மரித்த சுவாமியை அவர் தாயார் மடியில் வளர்த்துகிறார்கள்.

ஓ! இவ்வழியாய் நடந்துபோகிற ஜனங்களே, சற்றே நில்லுங்கள். நான் படும் அயரத்தைக் கவனித்துப்பாருங்கள். என்னைப்போலே துன்ப வியாகுல சாகரத்தில் அமிழ்த்திக்கிடக்கும் தாயை எங்கேயாவது நீங்கள் பார்த்ததுண்டோ?

ஆ மரியாயே! வியாகுலமாதாவே! உமது வியாகுலம் நிகரற்றது என்று காண்கிறேன். ஆனால் இவ்வளவு துயர வியாகுலத்துக்கு நான்தான் காரணமானவன். ஓ! தாயும் உம்மோடுகூடச் சிலுவை அருகிலிருந்து கண்ணீர் சிந்தி அழும்படி உத்தரம் தாரும். பாவஞ்செய்தவன் நான்தான். கண்ணீர்ப் பிரளயமாய்ச் சிந்தி அழவேண்டியவன் நான்தான். என் கண்களுக்குக் கண்ணீர்ச்சுனையைக் கொடுப்பவர் யார்?

ஆ! என் அன்புள்ள தாயே! உமது திருக்குமாரனிடத்தில் எனக்காக மன்றாடி, நான் சாகுமட்டும் என் பாவங்களை நினைத்துக் கண்ணீர் சிந்தி அழவும், இனிமேலாக யாதொரு பாவத்தையுஞ் செய்யாமலிருக்கவும், வேண்டிய உதவி வரம் பெற்றுத்தாரும்.



### தேவாரம்.

அழுவற மரித்த ஏக
மகன்தனை மடியிலேந்தித்
தொழுதவர் காயமெல்லாம்
துடைத்து தொந்தமேனைத் தன்பாகத்
தழுவியே மனது துக்க
சாகரத்தமிழ்ந்தி மிக்க
அழுதிதோ புலம்புமெங்கள்
அன்னையே! அருள்செய்யம்மா.

### நீலாம்பரி.

மரியே, ஐயையோ! உயிர் பிரிந்த நின்மகன்தனை
மடிமேல் வளர்த்தி மனங் கசிந்தே [ன்னை
இருகண்ணீர் ஆறுயோட முகமும் சோரப்புலம்ப
இக்கோலம் காணவைத்தார் தகுமோ.

---

## பதினான்காம் ஸ்தலம்.

திவ்விய சேசுவே......

ஏனென்றால்......

சேசுநாதரைக் கல்லறையில் அடக்கஞ் செய்கிறார்கள்.

என் சேசுவே! என் அன்புள்ள இரட்சகரே! சகல லோகங்களெங்கும் பூரணமாய் நிறைந்திருக்கிறீர், இந்தச் சிறு கல்லறைக்குள்ளே அடக்கப்பட்டிருக்கிறீரோ?

சுவாமி! தேவரீரைத் தனிமையாய் நான் விட்டபோ
ட்டேன். இதோ! நானுந் தேவரீரோடேகூட உலக
த்தாருக்கு மரித்தவனாய் மறைந்த சீவியஞ் சீவிக்கவிரு
க்கிறேன். இதுவும் போதாது சுவாமி. உமது திரு
இருதயத்திலே எனக்கு இடங்கருளும். இந்த இருத
யந்தான் நான் தங்கும் இல்லிடம். இதற்குள்ளே நா
ன் சீவித்து இதிலே நான் உயிர்விடவேணும்.

தேவாரம்.

மரித்த நின்னுடலையே போற்றி
வாசனைத் தயிலம் பூசி
பரிவுறத் தூய வெள்ளைப்
பரிவட்டத்தாலே மூடி
அரிய கல்லறையில் வைத்தார்
அதனை நான் மறவாதுன்றன்
நெறி தவறாது செல்ல
நேயனே! அருள் செய்வீரே.

நீலாம்புரி.

கர்த்தர் திருக்கல்லறை யருகில் நெருங்கியன்பால்
கண்ணீர் சொரிந்த மனதுருகி
நித்தியகதியிற்சேர வாரும் பாவிகள்மீது
நேசா சேசுவே! தயை கூரும்.

---

சிலுவைப்பாதை முடிந்தபின் செபம்.

என் திவ்விய இரட்சகரான சேசுவே! உமது பா
டுகளின் பாதையை என் நினைவால் சிந்தித்துத் தியா
னித்து வந்தேன். எனக்காகத் தேவரீர் அநுபவித்த



இவ்வளவு துன்பவாதைகளை நான் பார்த்த பின்
பு, இன்னந் தேவரீரைச் சிநேகியாமலிருப்பது ஞாய
மாகுமோ? தேவரீருடைய பாடுகளுக்குக் கார
ணமாயிருந்த பாவத்தை நான் இனிச் செய்வே
னோ? அப்படியல்ல. உம்மை எல்லாவற்றை
யும் பார்க்க அதிகமாய்ச் சிநேகிப்பேன். எந்தப்பாவ
த்தையும் மனம்பொருந்தி இனிச்செய்யமாட்டேன்.
நானுஞ் சிலுவையின் பாதையாகிற துன்பவருத்தந்
தாழ்மை நிந்தை அவமானங்களின் பாதையில் உம
க்குப்பின் வருவது உமது சித்தமானால், இதோ!
உமது ஆசைப்பிரகாரம் துணிந்து நடக்கத் தயாரா
யிருக்கிறேன். உமது இஷ்டப்பிரசாத வரத்தால்
என் மனதை உறுதிப்படுத்தியருளும். உமது திரு
இருதயத்துக்கு நித்தியகாலம் தோத்திரமுண்டாகக்
கடவது. ஆமென்சேசு.

முற்றிற்று.

# பொருள் அட்டவணை.


| பொருள். | பக்கம். |
|---|---|
| | I |
| முகவுரை ... ... ... ... | 1 |
| 1. திரு அசனசாலை ... ... ... ... | 7 |
| 2. ஒலிவேத் மலைத்தோட்டம் ... ... | 13 |
| 3. பூங்காவனவாசல், ஆண்டவர் பிடிபட்டுக் கட்டுண்ட இடம் ... ... ... | 16 |
| 4. செதுரோன் என்ற ஆற்றில் ஆண்டவர் விழத்தாட்டப்பட்டது ... ... | 18 |
| 5. ஆனுஸ் என்பவன் வீடு ... ... ... | 22 |
| 6. கைப்பாஸின் அரண்மனை ... ... | 26 |
| 7. பிலாத்துஸ் அரண்மனை ... ... ... | 30 |
| 8. எரோதேசுடைய அரண்மனை ... ... | |
| 9. பரபாஸ் என்ற கொலைப்பாதகனோடு ஒப்பிடப்பட்டது ... ... ... ... | 33 |
| 10. கற்றூணில் கட்டுண்டு அடிபட்டது ... | 36 |
| 11. முள்முடி சூட்டப்பட்டது ... ... | 40 |
| 12. இதோ மனிதனென்று ஆண்டவர் காட்டப்பட்டது ... ... ... ... | 43 |
| (12-வது தொடர்ச்சி) ஆண்டவர் மரணத்தீர்வை இடப்பட்ட இடமாகிய பிலாத்து அரண்மனை மட்டும் அவர் நடந்து சென்ற தூரம் ... ... | 47 |

13. கல்வாரிமலைக்கு ஆண்டவர் சிலுவை சுமந்துகொண்டுபோனது ... ... ... 49
14. ஆண்டவர் சிலுவை சுமந்துகொண்டுபோகையில் கீழே விழுந்த இடம் ... 53
15. ஜெருசலேம் பட்டணத்து புண்ணிய ஸ்திரீகள் ஆண்டவரைப் பின்சென்று அழுது புலம்பின இடம் ... ... ... 57
16. வெரோனிக்கம்மாளின் வீடு ... ... 62
17. ஆண்டவருடைய மரணத்தீர்ப்பு வாசிக்கப்பட்ட இடம் ... ... ... 66
விபரங்கள்.—ஆண்டவர் சிலுவை சுமந்துகொண்டுபோனபோது நடந்து சென்ற தூரம் ... ... ... 69
18. கல்வாரிமலை—இரண்டு கள்ளர் நடுவாக ஆண்டவர் சிலுவையில் அறையுண்டு மரணமடைந்த இடம் ... ... ... 71
19. திருக்கல்லறை—ஆண்டவருடைய திருச்சரீரம் அடக்கம் பண்ணப்பட்ட இடம் 78
20. ஆண்டவர் உயிர்த்தெழுந்து மோக்ஷத்துக்கு ஆரோகணமானது ... ... 85

## அநுபந்தம்.

### திருப்பாடுகளின் அருளிக்கங்கள்.

1. கற்றூண் ... ... ... ... ... 89
2. முள்முடி ... ... ... ... 90
3. திரு ஆணிகள் ... ... ... 92
4. திரு ஈட்டி ... ... ... ... 93



5. திருச்சிலுவை ... ... ... ... 94
6. கடற்காளான் ... ... ... 95
7. திருப் பரிவட்டம் ... ... ... 95
8. ஆண்டவருடைய உட்சட்டை... ... 96
9. திரு முகம் ... ... ... 97
ஜெருசலேம் பட்டணத்தின் படம் ... 99
ஜெருசலேம் பட்டணத்தின் குறிப்பு விவரம் ... ... ... 100
திருச்சிலுவைப்பாதை ... ... ... 153

140

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். | விபரம். |
|---|---|---|---|---|
| 26 | 23 | 2600 அடி. | 4000 அடி. | இவ்விடத்தில் சொல்லப்பட்ட அடிக்கணக்குக்கும், யெருசலேம் பட்டணத்தைக் குறிப் புவிவரத்தில் சொல்லப்பட்ட அடிக்கணக்குக்கும் சற்று விபரீதம் உண்டு. இது என்னென்றால் பற்பல நூல் ஆசிரியர் சொல்லும் குறிப்புக் கணக்கினால் இந்த வித்தியாசம் ஏறக்குறையத்தான் எடுத்துக் காட்டலாயிற்று. |
| 69 | 13 | 140 ,, | 600 ,, | |
| ,, | 16 | 200 ,, | 800 ,, | |
| ,, | 19 | 80 | 120 ,, | |
| 70 | 3 | 20 ,, | 700 ,, | ஒரு கெஜம் அல்லது 3 அடி நீளத்தைச் சில சமயங்களில் ஒரு அடியென்று சொல்லுகிறது வழக்கம். |
| ,, | 14 | 1440 ,, | 2200 ,, | |

115 383